
# எல்லோருக்கும் ஆசை உண்டு

## ரமணிசந்திரன்



# எல்லோருக்கும் ஆசை உண்டு

ரமணிசந்திரன்

அருணோதயம்
3, கௌடியா மடம் சாலை
இராயப்பேட்டை :: சென்னை - 600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : எல்லோருக்கும் ஆசை உண்டு |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : ஆகஸ்ட், 1997 |
| இரண்டாம் பதிப்பு | : ஆகஸ்ட், 1998 |
| மூன்றாம் பதிப்பு | : ஜூலை, 2000 |
| நான்காம் பதிப்பு | : ஜனவரி, 2002 |
| ஐந்தாம் பதிப்பு | : நவம்பர், 2003 |
| ஆறாம் பதிப்பு | : ஜூன், 2005 |
| ஏழாம் பதிப்பு | : பிப்ரவரி, 2007 |
| எட்டாம் பதிப்பு | : ஆகஸ்ட், 2008 |
| ஒன்பதாம் பதிப்பு | : ஜனவரி, 2010 |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| தாள் | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 152 |
| நூல் கட்டுமானம் | : சாதா அட்டை |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |

**விலை: ரூ.50.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |

# எல்லோருக்கும் ஆசை உண்டு

# பாராட்டுரை

வணக்கம்.

மதிப்புக்குரிய அருணன் ஐயா அவர்களுக்கு,

நான் யார் என்பதை அறியப்படுத்துவதற்கு முன்னர் என் அன்பார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி ரமணிசந்திரனின் பரம ரசிகைகளில் ஒருவரான நான் கடந்த 1996ஆம் ஆண்டுதான் கதைப் புத்தகங்கள் படிக்க ஆரம்பித்தேன். நான் கல்லூரியில் படிக்கும்போது என் நண்பிகள் கதைப் புத்தகங்கள் கொண்டுவந்து எனக்குக் கொடுப்பார்கள். நானோ இதைப் படிப்பதால் உங்களுக்கு என்ன இலாபம் என்று கேட்டு அவர்களைத் திட்டியும் இருக்கின்றேன். ஆனால் இப்போது திருமதி ரமணிசந்திரனின் கதைப் புத்தகம் கைக்குக் கிடைத்து விட்டால் என்னைப் பசியோ, தாகமோ, தூக்கமோ நெருங்காது.

நான் தற்போது அருணோதயம் வெளியீடான ரமணிசந்திரனின் கதைப் புத்தகங்கள் 50க்கும் மேல் படித்துள்ளேன். அதில் என்னையே அறியாமல் கண்ணீர் விட்ட எத்தனையோ இடங்கள். அதேபோல் அகமகிழ்ச்சியால் திருப்தி அடைந்த எத்தனையோ இடங்கள். இவ்வளவு அழகாக அனைவருடைய மனதையும் கவரும் வகையில் கதை எழுதுவதற்கு உரிய திறனைப் பெற்றிருக்கும் திருமதி ரமணிசந்திரன் அவர்களுக்கும், அவரின் கதைகளை வெளியிடும் அருணோதயம் வெளியீட்டுக்கும் எனது பல கோடி வாழ்த்துக்கள்.

நன்றி.

அன்புள்ள
வானாஸ்
பேருவலை.

# எல்லோருக்கும் ஆசை உண்டு

## 1

அழகிய திருச்சி மாநகரத்தின் எழிலை, மலைக் கோட்டை தாயுமானவர் கோயிலின் ஒவ்வொரு சாளரத்தின் வாயிலாகவும் பார்த்துப் பார்த்து மாதவி ஆசைதீர ரசித்தாள். கடைசித் தரமாக அல்லவா? காணக் காணத் திருப்தி ஏற்பட மறுத்தது!

பசிய வயல்களும், திருவரங்கத்தின் பெரிய கோபுரமும், அரங்கனை வலம் வந்து பூஜிப்பது போல திருவரங்கத்தைச் சுற்றிக் கொண்டு, காவிரி, கொள்ளிடமாகப் பிரிந்து பின் மீண்டும் இளைந்து மீண்டும் ஒன்று சேர்ந்து மகிழும், காண் போரை மகிழ்விக்கும் காட்சி உலகில் வேறு எங்கே காணக் கிடைக்கும்?

இந்த நகரத்தோடு அவளுக்குள்ள தொடர்பு இன்றோடு அறுந்துவிடப் போகிறது என்றால்... மாதவியால் நம்பக்கூட முடியவில்லை!

ஹோலி கிராசில் பள்ளிப் படிப்பு படித்ததும், சீதாலட்சுமி ராமசாமியில் கல்லூரிக் கல்வி முடித்ததும், ஒரு தோழியின் தயவில் அங்கேயே வேலையும் கிடைத்ததும்...

வேலையோடு நின்றிருக்கலாம்!

காதல் வந்து விட்டது! பொல்லாத காதல்!

அதுகூட அவளாக முதலில் ஒன்றும் பெரிதாக நினைக்க வில்லை; கற்பனையில் கூட வினோதனோடு அப்படி ஒன்றும் அவள் 'டூயட்' பாடிவிடவில்லை!

வினோதன் தான் மீண்டும் மீண்டும் அவளை விரட்டிப் பிடித்தான். யோசித்தபோது அவளுக்கும் அதில் குறைப்பட எதுவும் தெரியவில்லை.

அவளைவிட அதிகப் படிப்பு; அவளை விட அதிக அழகு; அவளை விட அதிகச் சிவப்பு; சம்பளமும் கூட அவனுக்குக் கொஞ்சம் அதிகம்!

அவன் விரும்பியிருந்தால் யாரை வேண்டுமானாலும் மணந்திருக்கலாம். அவளை ஏன் நாடினான் என்று மாதவிக் குக் குழப்பம்தான்.

ஆனால் ஒரு விளக்கம் சொன்னான்: இன்றைக்கு மாதவி யின் சம்பளம் அவனதைவிடச் சற்று குறைவுதான் என்றாலும், முன்னேறுவதற்கு அவளது வேலையில் பல பெரும் வாய்ப்பு கள் இருந்தன. இப்போதே இருவரின் ஊதியமுமாக இருவ ரும் வளமாக வாழமுடியும்தான்; ஆனால், இன்னும் கொஞ்ச காலத்தில் கோடீசுவர வாழ்க்கையே வாழலாம்!

வினோதனின் 'லாஜிக்' மாதவிக்கும் சரியாகவே பட்டது. கோடீசுவரர்களின் வாழ்க்கை இல்லை என்றாலும், மத்திய தரத்திலும் மிகவும் உயர்மட்ட வாழ்க்கை முறை நிச்சயமாக சாத்தியம்தான்!

பணத்தை விடவும், வினோதனின் பேச்சு, ஒழுக்கம், நடவடிக்கைகளும் அவளது மனதிற்குப் பாந்தமாகவே இருந்தன.

அடிக்கடி 'ஜோக்' அடிப்பான். எந்த விஷயத்தையும் நன்றாகவே எடுத்துப் பேசுவான். உலக அறிஞர்களின் பேச்சிலிருந்தெல்லாம் மேற்கோள் காட்டி அவன் பேசும்போது கேட்கப் பிரமிப்பாக இருக்கும். இதுபற்றி அவள் ஒரு தரம் குறிப்பிட்டபோது, பத்தாயிரம் 'ஜோக்'குகள், 'கோட்டபிள் கோட்ஸ்' என்றெல்லாம் புத்தகங்களைக் கரைத்துக் குடித்திருப்பதாக அவன் கூறியபோது மாதவிக்குக் கொஞ்சம் ஏமாற்றம் தான். ஆனால் உடனேயே மனம் தேறிவிட்டது.

இந்த மாதிரிப் புத்தகங்கள் எத்தனையோ இருக்கின்றன; அவற்றை எத்தனையோ பேர் வாங்கி மனப்பாடம் செய்தும் வைத்திருக்கிறார்கள்தான். ஆனால் அப்படிப் படித்ததை அவர்களில் யாருக்கு இப்படிப் பொருத்தமான இடத்தில், வெகு இயல்பாகக் கையாளத் தெரிகிறது?

ஒழுக்கத்தைப் பொறுத்தவரையிலும், வினோதன் இந்தக் காலத்து இளைஞனா என்று ஆச்சரியமாக இருக்கும். பெண்களைக் கலாட்டா செய்கிற அளவு கூட அவன் சென்றதில்லை. அந்த வகையில், அவனை அறிந்த அனைவருமே அவனை 'ஸ்ரீராமன்' என்றே சர்ட்டிபிகேட் கொடுத்தார்கள்.

நிற்பது, நடப்பது, மற்றவர்களிடம் பழகுவது என்று எதிலுமே வினோதனிடம் நேர்த்தியிருந்தது. 'அய்யோ' என்று அவமானப்படும்படியாக எதுவும் அவனிடம் இல்லை என்று அறிந்து கொண்ட பிறகு, மாதவி அண்ணனுக்கு இதுபற்றி இரண்டு வரியில் எழுதிப் போட்டாள்.

கிருபாகரனும் உடனே ஓடோடி வந்தான்.

மாப்பிள்ளையைப் பார்த்தும் அவனுக்கு மிகுந்த திருப்தியே... திருப்தி இல்லாவிட்டாலும், மாதவி ஒன்று சொல்லி, அவன் அதற்கு மாறு சொல்லப் போவது இல்லை!

எனவே, முறைப்படி நிச்சயதார்த்தத்தையே - நிச்சய தார்த்தம் என்றால் ஊரையெல்லாம் கூட்டி, சடங்குகள் சாங்கியங்கள் செய்து மோதிரம் மாற்றிக் கொள்வது என்று இல்லை. சில உற்ற நண்பர்கள், உறவினர் முன்னிலையில் திருமணம் என்ற உறுதி செய்து கொண்டார்கள். அந்தச் சிறு நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு கிருபாகரன் தன் வேலையைப் பார்க்கக் கிளம்பிவிட, இங்கே வருங்காலத் தம்பதியர் இருவரும் தங்கள் வாழ்க்கையைத் தொடங்குவது பற்றித் திட்டமிடலாயினர்.

பெண்கள் விடுதியில் தங்கி வேலை பார்த்த மாதவியும், நண்பனோடு ஓர் அறையைப் பகிர்ந்து கொண்டு வாழ்ந்த வினோதனும், வசிப்பதற்கு ஓர் வீட்டை ஏற்பாடு செய்து கொண்டுதான் திருமணம் என்பதில் மட்டும் உறுதியாக இருந்தனர். ஒற்றுமையான உறுதி.

ஆனால் ஒற்றுமை அதில் மட்டும்தான். செடி, கொடி என்று கண்ணுக்குப் பசுமையாகக் கொஞ்சமேனும் தோட்டம் வைப்பதற்கு இடமுள்ள வீடு வேண்டும் என்பது மாதவியின் ஆசை.

கண்ணுக்குப் பசுமைதானே? பசிய புல்வெளி அல்லது பெரும் காடு மாதிரிப் பெரிய பெயின்டிங்கின் நகல் ஒன்றை வாங்கி, ஒருபுறச் சுவர் முழுவதற்குமாக ஒட்டி வைத்து விட்டால் போகிறது; மற்றபடி தோட்டம் கீட்டம் என்று தொடங்கினால், அப்புறம் 'கல்கி' பயிரிட்ட கத்தரிக்காய் மாதிரி வீண் செலவில் வந்து முடியும். அதைவிட 'பிளாட்' என்றால் வாடகையும் குறைவாக இருக்கும்; கூடவே பாது காப்பாகவும் இருக்கும் என்றான் வினோதன்.

''அண்ணனிடம் கேட்டு, லாபகரமாகவே தோட்டம் போடலாம்'' என்றாள் மாதவி விடாமல்.

''ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது''. உன் அண்ணன் விவசாயம் படித்து விட்டு வேளாண்மைத் துறை அதிகாரியாக இருந்து, அங்கே கிராமப் புறங்களைக் கெடுப்பது போதும். உனக்குப் பசுமை வேண்டுமானால் நாலைந்து 'இண்டோர்' செடிகளை வாங்கி வைத்துக் கொள். மற்றபடி இரண்டு பேரும் வேலைக்குச் செல்லும் போது, வெட்டுவது, கொத்துவது என்று தோட்ட வேலை வேறு செய்ய இருவராலும் முடியாது. இந்தப் பேச்சை விடு!'' என்று வினோதன் ஒரே பிடியாய் நிற்கவும், மாதவியும் அரை மனதாகவே அவனோடு சேர்ந்து பிளாட் தேடத் தொடங்கினாள்.

ஆனால், இப்படியெல்லாம் வீடு, வாசல் என்று திட்ட மிட்டு விட்ட அவனால் எப்படி அவளை விட்டுப் பிரிய முடிந்தது?

ஒரேயடியாக அல்லவா போய் விட்டான்?!

அன்று மாலை பேசியதும், பைக்கில் இருவருமாகத் திரும்பி வந்ததும், திருப்பத்தில் திடுமென லாரி ஒன்று எதிர்பட்டதும்...

எண்ணிலா எதிர்காலக் கனவுகளில் ஆழ்ந்திருந்த வினோதனும் வெகு வேகமாகத்தான் பைக்கை ஓட்டிக் கொண் டிருந்தான். வழி திரும்பிச் செல்லும்போது ஒலியெழுப்பும் முறைமை அவனுக்கு நினைவு இருந்ததாகத் தெரியவில்லை.

லாரியை ஓட்டி வந்தவனும் எந்த நிலையில் இருந் தானோ, அவனும் வேகம் குறையாது, குரல் கொடுக்காமலே வந்துவிட, அந்த மோதல் தவிர்க்க முடியாதது ஆகி விட்டது.

பயங்கரமான மோதல்!

இப்போதும் அதை நினைக்கும்போது மாதவியின் உடம்பு நடுங்கியது.

மோதலின் அதிர்ச்சியில் ஜிவ்வென்று வானில் தூக்கி ஏறியப்பட்டது நினைவு இருந்தது. விழும்போது எந்தக் கல்லில், எந்த மரத்தில் மோதிச் சாகப் போகிறோமோ என்று நினைத்ததும் ஞாபகம் இருந்தது.

அதற்கு மேல் அவளுக்கு மயக்கம் வந்துவிட்டிருக்க வேண்டும்.

மீண்டும் அவள் கண்விழித்துப் பார்த்தபோது அவள் ஒரு மருத்துவமனையில் இருந்தாள்.

அருகில் கண்ணீருடன் ''மாதும்மா, மாதும்மா...'' என்று அரற்றியபடி கிருபாகரனும் இருந்தான்.

வலது கையில் ஒரு சிறு எலும்பு முறிவு, லேசான, பலமான பல சிராய்ப்புகளுடன் தான் உயிர் தப்பியது பற்றி இன்னமும் மாதவிக்கு ஆச்சரியம்தான்!

முதலில், பெரிய வைக்கோல் போர் ஒன்றின் மீது விழுந்து, சரிந்து, உருண்டு அதன் பிறகுதான் தரைக்கு வந்து சேர்ந்தாளாம்!

நடந்தவை நினைவு வர, வினோதன் பற்றி அவள் விசாரித்ததற்கு முதலில் யாருமே சரியாகப் பதில் சொல்ல வில்லை. அவளது அதிர்ச்சியை, துக்கத்தைத் தவிர்க்க எண் ணினார்கள் போலும்!

கடைசியாக விபரம் அறிந்தபோது அவளுக்கு மிகுந்த வேதனையாக இருந்தது.

எத்தனை கனவு கண்டான்! மாருதி எஸ்டீம் என்ன? ஸ்விட்சர்லாந்து தேனிலவு என்ன? கோடீசுவர வாழ்க்கை என்ன?

எல்லாம் கனவாகவே முடிந்து விட்டதே!

தான் ஒரு தைரியசாலி என்றுதான் மாதவி எப்போதும் நினைத்திருந்தாள்.

சிறு வயதிலிருந்தே, தாயின்றித் தன் வேலைகளைத் தானே செய்து கொண்டு வளர நேர்ந்தது ஒருவகையில் அதன் காரணமாக இருக்கலாம். நோய் வாய்ப்பட்டிருந்த தந்தை இறந்தபோது கூடக் கிருபாகரன் அளவுக்கு மாதவி கலங்கிப் போய் விடவில்லை.

ஒருவேளை, அவருக்குப் பணிவிடை செய்யும் போதெல்லாம், அவர் அனுபவிக்கும் வேதனையைக் கண்டு, இப்படித் துன்பப்படுவதற்கு அப்பா இறந்து போய் விடுவதே மேல் என்று அவ்வப்போது அவளுக்குத் தோன்றியிருந்ததே அந்த இழப்பின் கலக்கத்தை அகற்றியிருக்கலாம்.

கூடவே, இடிந்து கிடந்த கிருபாகரனைத் தேற்றி, அன் றாட உணவு, மற்ற வேலைகளைக் கவனிக்க நேரும்போது சும்மா கிடந்து கவலைப்பட அவளுக்கு ஏது நேரம்?

பொதுவாக, ஆண் பிள்ளையான அண்ணனைவிடத் தனக்குத் திடம் மிகவும் அதிகம் என்பதுதான் அவளது எண்ணம்.

ஆனால் இந்த விபத்து - அந்த நேரடி அனுபவம் அவளது திடத்தை வெகுவாகக் குலைத்து விட்டது எனலாம். விபத்தின் முன்னும் பின்னுமான நிகழ்ச்சிகளாலும் கூட அவள் இன்னமும் அதிகமாக ஓய்ந்து சோர்ந்து விட்டிருந்தாள்.

படிப்புக்கான விடுமுறையில், தந்தை இறந்தபோது தனக் குத் தெம்பூட்டிப் பரீட்சைக்குப் படிக்க வைத்த தங்கையா என்று இருந்தது கிருபாகரனுக்கும்.

காதல், இவ்வளவு தூரம் ஒரு பெண்ணின் மனதை நிலையிழக்கச் செய்து விடுமா?

சில வினாடிகளுக்கு முன், தன்னோடு சிரித்துப் பேசிய காதலனின் சாவை ஜீரணிப்பது பெரும் சிரமம்தான்!

இனி மாதவியை இங்கே விட்டுச் சென்றால், வினோத னின் நினைவிலேயே கரைந்து விடுவாள் என்று தோன்றவும், கிருபாகரன் அவளைத் தன்னோடு வரும்படி அழைத்தான்.

வேலையிலும், நிறுவனத்தோடு மாதவியின் முதல் ஒப் பந்தம் முடிவடைந்திருந்த நேரம் அது. இரு தரப்பாரும் மனம் ஒப்பினால் அடுத்த பதவி உயர்வுடன் ஒப்பந்தத்தை நீடிப்பது ஒப்பந்தத்தின் ஒரு விதி. நிறுவனம் அதற்குத் தயாராகத்தான் இருந்தது. மாதவியின் வேலைத் திறம் அப்படி.

ஆனால் மாதவிக்குத்தான் முன்போல வேலையில் ஈடு பாடு தோன்றவில்லை. எப்போதும் ஒரு சோர்வு. எதிலும் ஓர் அலுப்பு!

அப்படியே வேலையில் சேர்வது என்றாலும், இன்னமும் கை முழுமையாகச் சரியாகவில்லை.

அள்ளி உணவை வாயில் வைப்பது, சீப்பைப் பிடித்துத் தலை வாருவது எல்லாம் பெரும்பாடாகத்தான் இருந்தது. இரண்டு நாள் தடுமாறி விட்டு, அழகு நிலையம் ஒன்றிற்குச் சென்று கூந்தலைக் கட்டையாகப் 'பாப்' வெட்டிக் கொண்டு வந்து விட்டாள். அதேபோல, இடது கையால் ஸ்பூனைப் பிடித்து உண்ணவும் தொடங்கினாள்.

மருத்துவர்கள் சொன்னபடி விரல்களுக்கும், கை கால்க ளுக்கும் பயிற்சிகள் செய்தாள்.

இதெல்லாம் ஒருபுறம் செய்தாலும், உடனேயே சோர் வுற்று மணிக்கணக்காய் வெட்டவெளியை மாதவி வெறிக்க வும் கிருபாகரனுக்குக் கவலை மிகுதியாகியது.

அவனும்தான் வேலையைப் போட்டு விட்டு, எத்தனை நாள் இங்கே இருக்க முடியும்?

முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில், மாதவியின் மனம் விரைவாகத் தேறக் கூடும் என்றும் தோன்றவே, தங்கையிடம் அதுபற்றிப் பேசினான். ''பார் மாதவி, இந்த ஊரில் இருக்கும் வரை உனக்கு மனம் ஆறப் போவது இல்லை. வருங்காலக் கணவன் என்கிற அளவுக்குப் பழகி விட்டு மறப்பது எளிதும் அல்ல. அப்படியே காலம் என்கிற அற்புதமான மருந்து அதை மறக்கடிக்க முயன்றாலும், இந்த ஊரில் இருக்கும் வரை அது முடியாது. பழகியவர்கள், தெரிந்தவர்கள், ஆறுதலாகப் பேசுகி றோம் என்கிற நல்ல எண்ணத்தினாலேயே நீ மறக்க வேண்டி யதை நினைவுப் படுத்திக் கொண்டே இருப்பார்கள். நீயும் அவருமாய்ச் சென்று வந்த இடங்கள் வேறு கண்ணில் பட்டுக் கொண்டே இருக்கும். எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து ஒரு முழுக்குப் போட்டுவிட்டு என்னுடன் கிளம்பிவா. ஓர் ஆறு மாதங்கள் நாம் இருவரும் பேசிச் சிரித்து, ஸ்க்ராயிளும், சைனீஸ் செக்கர்சும் சதுரங்கமும் விளையாடி நிம்மதியாக இருக்கலாம்'' என்று அழைத்தான்.

அதுதான் மேலோ என்று, மாதவிக்கும் தோன்றலாயிற்று.

பல நாட்களாகவே, விபத்து நடந்த நாளில் இருந்தே அவளது வாழ்க்கை அவளுடையது அல்லாததுபோல, காற்ற டிக்கும் திசையெல்லாம் அலைப்புறளும் நீர்ப்பாசி போல நிலையற்று அல்லாடுவது போல அவள் உணர்ந்தாள். துக்கம் விசாரித்தவர்களிடம் பேசும்போது, அறிந்தவர், தெரிந்தவ ரோடு முன்னிலையில் அவள் அவளாக இல்லாதது போல, இருக்க முடியாததுபோல ஒரு தவிப்பையும் கூட அனுபவித் தாள்.

மூச்சு முட்டியபோதும், இதிலிருந்து விடுபடவே முடியாது என்பதே அவளுக்கு மிகுந்த மனச் சோர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

இங்கிருந்து - இந்த ஊரிலிருந்து வேற்றிடம் சென்று விட்டால் இந்த உணர்வு மாறக்கூடுமோ? ஆனால்....

''வேலை? மாதக் கணக்கில் நிறுவனத்தில் எனக்காக அந்த வேலையைக் காலியாகவே வைத்துக் கொண்டு இருக்க மாட்டார்களே!

''போகிறார்கள். உன் படிப்புக்கு எங்கே போனாலும் நல்ல சம்பளத்தில் வேலை கிடைக்கும். முதலில் மனம் நன்றாகும் வரை என்னோடு 'அக்கடா' என்று இரு. அப்புறம் வேண்டும் போது வேலை தேடிக் கொள்ளலாம்'' என்று கிருபாகரன் தேறுதலாகப் பேசியது அவளுக்கு மிகவும் இதமாக இருந்தது.

அப்போதுதான், இந்த ஊருக்கு அடியோடு முழுக்குப் போடும் எண்ணம் அவளுக்குத் தோன்றிற்று.

அவளது இழப்பையும் வேதனையையும் கூடவே தாழ்வுணர்ச்சியையும் பல மடங்காக்கி அவளைத் தவிக்க வைக்கும் இந்த இடத்துக்கு அவள் ஏன் திரும்பி வரவேண்டும்?

இது என்ன, பரம்பரை பரம்பரையாக அவளது சொந்த ஊரா?

தந்தையின் பிழைப்புக்கும், அவளது படிப்புக்கும், பின்னர் அவளது வேலைக்குமாகத் தங்கி வசித்த இடம். அவ்வளவுதானே?

அடைத்துக் கொண்டிருந்த மூச்சைச் சற்று எளிதாக விட முடிந்ததுபோல அப்போதே தோன்றிவிடத் திருச்சியை விட்டுக் கிளம்பிவிடும் முடிவு அவளுள் உறுதி பெற்றது.

பலமுறை கண்டு மகிழ்ந்த காட்சிகளை எல்லாம், கடைசி யாக ஒருமுறை ஆசைதீரப் பார்த்து விடுவது என்று, அவற் றுள் ஒன்றாகத்தான் மாதவி அன்று மலைக்கோட்டைக்குச் சென்றது.

ஆனால், பழைய நினைவுகள் அலைமோதவும், உடலின் சக்தி வடிந்துவிட, அப்படியே சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

எழுந்து நடந்து, இத்தனை படிகளையும் இறங்கிக் கடந்து செல்லத் தன்னால் முடியுமா என்ற சந்தேகம் கூட வந்தது. சுவரில் தலைசாய்த்து அமர்ந்து அவள் தன்னையே உலுக்கிக் கொண்டிருந்தபோது நல்லவேளையாக அவளைத் தேடிக் கொண்டு அவள் அண்ணன் வந்து சேர்ந்து விடவே அவ ளுக்கு அப்பாடி என்று ஆறுதலாக இருந்தது.

தங்கையை ஆதரவாய்க் கைப்பற்றி எழுப்பி தெம்பூட்டி அழைத்துச் செல்லும்போது அவன் சொன்னான். ''முதலில் பூம்பொழில் ஊருக்குப் போய் சேருவோம். இரண்டே நாளில் நீ ஆளே மாறிவிடுவாய், பாரேன். அங்கே வீசும் சுத்தமான காற்றும், பசேல் என்று கண்ணுக்குக் குளிர்ச்சியாய்ப் பயிர் வகைகளும், மரங்களும், கிளிகளும்... இரண்டே நாட்களில் கன்றுக்குட்டி போலத் துள்ளாட்டம் போடப் போகிறாய்...''

''பயிர், மரம், கிளி என்று மட்டுமாய் அடுக்குகிறாயே அண்ணா, அங்கே மனிதர்களும் உண்டுதானே? ஒருவேளை அந்த மனிதர்கள், இந்த மரம் மட்டை அளவுக்குப் பெயர் சொல்லத் தகுந்தவர்கள் இல்லையோ?'' என்று முறுவலை வளர்த்து பழைய பாணியில் பேச முயன்றாள் தங்கை.

''பெயர் சொல்லத் தகுந்தவர்கள் இல்லையா? அவர்க ளைப் பற்றிச் சொல்லத் தொடங்கினால் ஒவ்வொருவருக்கும் ஒரு புராணம் படிக்க வேண்டும். அந்த ஊர்ப் பண்ணையார்

குடும்பம் இருக்கிறதே, அதுபோல ஊருக்கு ஒன்று இருந்தால் போதும்...''

கிருபாகரனின் பேச்சில் லயித்து, மற்றதை மறந்தபடி, ''அப்புறம் இந்த ஊரே வேண்டாமடா சாமி என்று மற்றவர்கள் எல்லாம் ஊரை விட்டு ஓடிவிடுவார்களாக்கும்?'' என்றாள் மாதவி, அதை கேட்கும் பாவனையாக.

''இரு... இரு... அவர்களை எல்லாம் நேரில் பார்த்த பிறகு நீ எப்படிப் பேசப் போகிறாய் என்று நானும் பார்க்கத் தானே போகிறேன்! பண்ணையாரம்மா அப்படியே மகாலட்சுமியேதான். அவர்கள் பிள்ளை கதிரேசன் - என்னை விட மூன்றே வயதுதான் பெரியவர். இதற்குள் என்னவெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறார் தெரியுமா? என் வேலை விஷயமாக, நான் விவசாயக் கல்லூரியில் படித்ததை விடக் கதிரேசனிடம் படித்ததுதான் அதிகம்...''

''அது சரி அண்ணா, இன்னமும் பண்ணைக் குடும்பப் புராணம்தானே படிக்கிறாய்? இவர்களுக்குப் பயந்து ஓடாமல், ஊரில் ஒன்றிரெண்டு பேராவது இருக்கிறார்களா, இல்லையா? இருந்தால் அவர்களைப் பற்றிச் சொல்லு'' என்றாள் தங்கை.

''இருக்கிறார்கள், அம்மா திவ்யமாய் இருக்கிறார்கள். நூறு குடும்பங்களுக்கும் மேலாக அங்கே அமோகமாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களில் காந்தம் என்று ஒரு சுட்டிப் பெண். அவளைப் பார்த்ததும் நீ அப்படியே மயங்கி விடப் போகிறாய், பார்!''

அண்ணனின் குரலில் சற்று அதிகப்படியாக ஆர்வம் ஒலிக்கிறதோ? ஒன்றுமே தெரியாத, அவளுடைய அப்பாவி அண்ணன்?

உள்ளூரக் குறுகுறுப்புடன் அண்ணன் முகத்தை மாதவி ஓரக் கண்ணால் கூர்ந்தாள். அங்கு தென்பட்ட சிறு சிரிப்பு அவளை வியப்பில் ஆழ்த்தியது.

## 2

பலபலவென்று விடிந்து வெளிச்சம் பரவும் போதே கிருபாகரன், மாதவியை எழுப்பி விட்டான். ''எழுந்திரு மாதவி. சீக்கிரமாகப் பல் துலக்கி விடு. காலை உணவை முடித்து விடலாம்...''

மெலிதாக ஒரு கொட்டாவியைக் கைமறைவில் வெளியேற்றி விட்டு, ''அதற்குள்ளாகவா, அண்ணா! மணியாச்சியா. இன்னும் நேரம் இருக்கிறதே!'' என்றவாறு, கீழே வைத்திருந்த தோள் பையில் பற்பசை, பிரஷ்சை எடுத்தாள் மாதவி.

''மணியாச்சி வருமுன்பாகவே சாப்பிட்டு முடித்து விடலாம்... என்ன விழிக்கிறாய்! ஓடுகிற ரயிலில் எதைச் சாப்பிடுவது என்றா? முந்திய ஸ்டேஷனில் இருந்து ரெயிலில் கூடவே சிற்றுண்டி விற்பவர்களும் ஏறி வந்து விடுவார்கள். மணியாச்சி வரும்போது, கையில் கொண்டு வந்தவை விற்று முடித்து விட்டு, அங்கே இறங்கி விடுவார்கள். காமராஜ் சட்டை மாதிரி போட்டுக் கொண்டு ஒருவர் வருவார். அருமையான வீட்டு இட்லியும் தேங்காய்ச் சட்டினியும் கொண்டு வருவார். நான் எப்போதும் எட்டு பத்து இட்லி சாப்பிட்டு விடுவேன். உனக்கு ஓர் ஆறு வாங்கட்டுமா?''

''ஆறா! கடவுளே! மூன்றுதான் - அதுவும் சின்ன சைஸ் இட்லி என்றால்தான் மூன்று - என் அளவு'' என்றபடி கையில்

முகம் துடைக்கும் துண்டையும் எடுத்துக் கொண்டு மாதவி கிளம்பினாள்.

"நீ சாப்பிட்டுப் பார், தெரியும். சின்ன வயதில் அம்மா செய்த ருசி. இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு பண்ணையார் வீட்டில் அதே ருசி கண்டிருக்கிறேன். அதேபோல..."

"ஆ...மாம். விட்டால் பண்ணையார் குடும்பத்துப் புரா ணத்தைத் தொடங்கி விடுவாயே!... எப்படியும் எனக்கு மூன்று போதும், அண்ணா. அதுவே உள்ளே இறங்குமோ என்னவோ?"

ஆனால், சிறு சிரமத்துடன் இடது கையால் பல் துலக்கி, முகத்தையும் கழுவித் துடைத்து விட்டுத் திரும்பி வந்து உண்ணத் தொடங்கியபோது, அண்ணன் அவளுக்காக வாங்கி வைத்திருந்த இட்லிகள் வழுக்கிக் கொண்டு உள்ளே போன வேகம் அவளுக்கே ஆச்சரியம்தான்.

மாதவி ஸ்பூனால் எடுத்து உண்ண வசதியாக இருக்கும் படி, கிருபாகரன் அவளுக்கு ஒரு டிபன் பாத்திரத்தில்தான் இட்லிகளை வாங்கி வைத்திருந்தான். அதில் தாராளமாக ஊற்றப்பட்டிருந்த கெட்டிச் சட்னியில் ஊறிக் கிடந்த ஆறாவது இட்லியைத் துண்டித்து ஸ்பூனில் எடுத்தபோதுதான் மாதவி, சகோதரனை நிமிர்ந்து பார்த்துப் பேசினாள். லேசாக முறுவ லித்து "மெய்யாகவே வெகு ருசிதான், அண்ணா! ஆனால், இந்த மாதிரிப் பத்து நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டால் அப்புறம் நான் சரியான பூதகிதான்!" என்று கூறிவிட்டுப் பாத்திரத்தில் மீதி இருந்ததையும் வாயிலிட்டவளுக்குச் சட்டெ னச் சிரிப்பு பீறிட்டது.

"ஊகூம்... வாயிலிருப்பதை முதலில் விழுங்கி முடித்து விட்டு அப்புறம் சிரி. அல்லது புரையேறிக் கொள்ளும்!" அண்ணன் கரிசனத்தோடு எச்சரிக்க, அந்தக் கரிசனத்தில் அவளுக்கு இன்னமும் மகிழ்ச்சி உண்டாயிற்று.

''வயிற்றில் 'கல்' என்று விழுந்தால் சிரிப்பு எப்படி வருகிறது பார்! இப்போது சொல்லு, என்ன விஷயம்? எதற்குச் சிரித்தாய்?'' வாஞ்சையோடு விசாரித்தான் கிருபாகரன்.

''அதுவா?'' என்றவளுக்கு மீண்டும் முறுவல் அரும்பியது. இவ்வளவு ருசி என்று வழக்கத்துக்கு இரண்டு பங்கு உண்டு விட்டேன். இதே ருசியில் காலை, மதியம், மாலை, இரவு என்று உண்டால் உடம்பு என்ன ஆகும்? உங்கள் பண்ணையார் குடும்பத்தில் ஒவ்வொருவரும் என்ன சைசில் இருப்பார்கள் என்று கற்பனை செய்து பார்த்தேனா, சிரிப்பு வந்து விட்டது! என்றுரைத்து, மீண்டும் சிரிப்பில் கலகலத்தாள் தங்கை.

முகம் கனிவுறச் சிறிது நேரம் தங்கையின் சிரிப்பை ரசித்து விட்டு, ''நான் பண்ணையார் குடும்பத்துப் புராணம் படிக்கிறேன் என்றால், அதற்குச் சரியாக நீ வசை புராணம் படிப்பாய் போல இருக்கிறதே! ஆனால் அவர்கள் வீட்டில் யாரும் நீ நினைக்கிற மாதிரி குண்டு ரகம் அல்ல'' என்றான் தமையன்.

''உண்மையாகவா?'' என்று கண்ணை விரித்து நம்பாமையைக் காட்டினாள் மாதவி.

''மெய்தான், மாது. நமக்கு இந்தச் சுவை அபூர்வமாய்க் கிடைத்தது, அகப்பட்ட நேரத்தில் கபகபவென்று உள்ளே தள்ளி விட்டோம். அன்றாடம் அதே சுவையில் சாப்பிடும் போது, இப்படிக் காணாததைக் கண்ட மாதிரி விழுங்கத் தோன்றாதல்லவா?''

''ஓகோ!.. இருக்கும். ஆனால், நன்றாய் யோசித்துச் சொல்லு அண்ணே! உன் பண்ணையார் புத்திரன், கதிரேச சிகாமணிக்கு ஒரு பத்து அங்குலத் தொப்பை... அதில் பாதி

ஓர் ஐந்து அங்குலத் தொப்பை கூடவா இல்லை?'' என்று மிகவும் சீரியசாக முகத்தை வைத்துக் கொண்டு மாதவி வினவவும், அவள் வேடிக்கை செய்வதை உணர்ந்து, கிருபாகரன் புன்னகை செய்தபடி அவள் தலையில் லேசாகக் குட்டினான்.

அவ்வப்போது மவுனமாக இருந்தாலும், பெரும்பாலும் இதுபோன்ற பேச்சும், சிரிப்புமாகவே மணியாச்சி, தாழையூத்து கடந்து பயணம் திருநெல்வேலி சந்திப்புக்கு வந்து சேர்ந்தது.

சாமான்களை இறக்குமுன், ''ஏன் அண்ணா, உன் வேலை ஸ்ரீவைகுண்டம் பக்கம் என்றாயே. அதுவரையும் கூட இதே ரயிலில் சென்று விடலாமில்லையா? எதற்காக இங்கிருந்தே பஸ்சில் போகவேண்டும்?'' என்று கேட்டாள் மாதவி.

''ஸ்ரீவைகுண்டத்திலிருந்தும் பஸ்சில்தானம்மா போக வேண்டும். ஸ்ரீவைகுண்டம் ரெயில் நிலையத்திலிருந்து பஸ் நிலையம் என்று, அது ஒரு பயணம். அத்தோடு இடைவழி என்பதால் பஸ்ஸில் இடம் கிடைப்பதும் சிரமம். நீ வேறு, உன் ஒருத்திக்கு இவ்வளவு சாமான் வைத்திருக்கிறாயே! இங்கேயே பஸ் கிளம்பும் இடத்திலேயே ஏறிக் கொள்வது வசதி. அத்தோடு, இங்கே பஸ் நிலையமும் பக்கம்!''

சாமான்களை இறக்கி முடித்து, சரிபார்த்துக் கொண்டு இருந்தபோது ''அலோ கிருபா! குட்மார்னிங்!'' என்ற குரலில் மகிழ்ச்சியும் ஆர்வமுமாகக் கிருபாகரன் திரும்பினான்.

''அலோசார்...! இங்கே இந்த நேரத்தில் நீங்கள் எப்படி? நான் எதிர்பார்க்கவே இல்லை...'' என்று அண்ணன் திக்கித் திணறுவதைச் சிறு வியப்புடன் மாதவி கவனித்தாள்.

அப்படி என்ன பெரிய மகாராஜா, மனமிரங்கி வந்து விட்டார் என்று வார்த்தை தடுமாறும் அளவுக்கு உச்சி குளிர்கிறது?

''டிராக்டருக்குச் சில உதிரிச் சாமான்கள், உரம் எல்லாம் வாங்குவதற்காக நேற்று இங்கே வந்தேன். இந்த வாரம் வருவதாக எழுதியிருந்தீர்களே; ஒருவேளை இன்று வந்தால் அழைத்துப் போகலாமே என்று நினைத்தேன்... சாமான் வேறு இருக்கிறதா?'' என்று குனிந்து இருப்பதில் பெரிய பெட்டி யைத் தூக்க முனைந்தான் அந்தப் புதியவன்.

''அய்யோ! வேண்டாம் சார். போர்ட்டர் வைத்துக் கொள்ளலாம். திருச்சியில் ஒரேயடியாகக் காலி செய்து விட்டதால்... நிறையச் சாமான்களாகி விட்டன... மறந்துவிட் டேனே சார், இவள்தான் என் தங்கை. பெயர் மாதவி. மாது, இவர்தான் நான் சொன்னேனே பண்ணையார் மகன் என்று, பெயர் கதிரேசன்' என்று கதிரேசனுக்கும் தங்கைக்குமிடையே கிருபாகரன் அறிமுகம் செய்து வைத்தான்.

''வணக்கம்'' என்று கரம் குவித்தவனுக்குப் பதில் வணக் கம் கூறியபடி நிமிர்ந்து, அவனை நேராகப் பார்த்த மாதவி சற்றுத் திகைத்துப் போனாள்.

மாதவி, பெண்களுள் சற்று உயரம் அதிகமான பெண். அனேக ஆண்களைச் சம அளவில் நோக்கிப் பேசித்தான் அவளுக்குப் பழக்கம். அவளுடைய அண்ணன், அப்பா எல்லோருமே அப்படித்தான். இன்னும் சிலரைக் கீழ் நோக்கிக் கூடப் பார்த்திருக்கிறாள். ஆனால், இப்படி விழி உயர்த்திப் பார்க்கும் அளவு உயரமாக ஒரு கிராமத்துப் பண்ணையார் இருப்பான் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை.

வழிநெடுக அண்ணன் சொன்ன கிராமத்துக் கலப்படம் இல்லாத கெட்டியான பால், தயிர், நெய், பண்ணை வீட்டுச்

சுவையான உணவு எல்லாவற்றையும் கூட்டி, குள்ளக் கத்தரிக் காய் போன்ற ஓர் உருவம்தான் கிருபாகரன், பண்ணையார் மகன் எனும் போதெல்லாம் மாதவியின் மனதில் தோன்றும். பண்ணையார் வீட்டில் யாரும் குண்டு இல்லை என்று தமையன் சொல்லியிருந்த போதும் கூட, அண்ணனுக்குப் பண்ணை வீட்டாரைப் பிடித்துப் போய் விட்டதால் சொல்லுகி றான் என்றுதான் நினைத்தாள்.

தங்கை மீதுள்ள பிரியத்தினால், உலக அழகியெல்லாம் உன் கால் தூசி பெறமாட்டார்கள்' என்று அவளிடமே சொல்பவன்தானே?

பாசம் வைத்து விட்டால் அவர்களிடம் உள்ள குறைகள் அவன் கண்ணில் படுவதே இல்லை. அதே ரீதியில்தான், பண்ணையார் குடும்பம் குண்டு இல்லை என்கிறான்; குறைந்த பட்சமாய் அந்தக் கதிரேசனுக்கு அவள் முதலில் நினைத்தபடி பானையை வயிற்றில் கவிழ்த்தாற்போல் இல்லையென்றா லும், சற்றே சரிந்த இளம் தொந்தியேனும் இருந்தே தீரும் என்பதில் மாதவி மிகவும் நிச்சயமாக இருந்தாள்.

ஆனால் இந்தக் கதிரேசன், ஊளைச் சதை கொஞ்சம் கூட இல்லாமல், உறுதியும் வனப்புமாக அவளே சற்று அண்ணாந்து பார்க்கும் உயரத்தில் கம்பீரமாக நிற்கவும், மேலே என்ன பேசுவது என்று புரியாமல், எதுவுமே பேசத் தோன்றாமல், மாதவி கொஞ்சம் மலைத்துதான் போனாள்.

இந்த நிலை மாதவிக்குப் புதிது. புதியவர், பழகியவர் என்று இல்லாமல், யாரிடமும் அவரவருக்குத் தகுந்தபடி கலகலப்பாகப் பேசுவதுதான் அவளது வழக்கம். 'மூத்தது மோழை' என்பதற்கிணங்க, கிருபாகரனுக்குத்தான் பொது வாக அடுத்தவர்முன் பேச்சு வராது.

அந்தக் கதிரேசன் அடியோடு புதியவன் என்று சொல்லவும் முடியாமல், கிருபாகரன் அவனைப் பற்றித் தங்கையிடம் நிறையவே சொல்லியிருந்தான். அண்ணன் உங்களைப் பற்றி, உங்கள் ஊரைப் பற்றிச் சொன்னான் என்று கூடப் பேச்சைத் தொடங்கலாம். ஆனால், அந்த நேரத்தில் அது ஒன்றும் தோன்றாமல், மாதவி பேச வராமல் மக்கு மாதிரி நிற்கும்படி ஆயிற்று.

ஆனால், அவளுக்குச் சிரமம் வையாமல், ''சிற்றுண்டி எல்லாம் ஆயிற்றா? இல்லையென்றால், இங்கே நல்ல ஓட்டல் இருக்கிறது. பசியாறி விட்டுப் போகலாம்'' என்று கதிரேசன் உபசாரம் செய்தான்.

''நாங்கள் சாப்பிட்டாயிற்று. ரெயிலிலேயே காலையிலேயே முடித்து விட்டோம்'' என்றாள் மாதவி அவசரமாக.

''யார்? அந்தக் காமராஜ் சட்டைக்காரரா? சுவையாக, சுத்தமாகச் செய்திருப்பார்.''

போர்ட்டரை அழைத்துப் பேரம் பேசிக் கொண்டிருந்த கிருபாகரன் இந்தப் பேச்சைக் கவனித்து, ''கதிரேசன் சார் தான், அந்த இட்லிக்காரரை எனக்குக் காட்டிக் கொடுத்ததே. உங்கள் வீட்டு இட்லி மாதிரி சுவை என்று மாதவியிடம் சொன்னேன். இரண்டு பங்கு உள்ளே போய்விடும் என்றால் முதலில் இவள் நம்பவே இல்லை. பிறகு ஆறு சாப்பிட்ட அப்புறம்தான் ஒத்துக் கொண்டாள்'' என்று கூறவும் மாதவியின் முகம் சிவந்து போயிற்று.

அவள், சாப்பாட்டு ராமியாக முழுங்கியதை எல்லாம் இந்த அண்ணன் இந்தப் புதியவனிடம் போட்டு உடைக்க வேண்டுமா?

ஆனால் அவள் அண்ணன் அத்துடன் கூட அவளை விடுவதாக இல்லை. ''இப்படி ருசியாக எல்லா வேளையும்

சாப்பிட்டு நீங்கள் குண்டாக இருப்பீர்கள் என்று கூடச் சொன்னாள், சார். நான் கிடையவே கிடையாது; உங்கள் வீட்டில் யாரும் குண்டு இல்லை என்றேன். என்ன மாது, சாரைப் பார்த்துக் கொண்டாயில்லையா? நான் சொன்னது தானே 'மெய்?'' என்று மேலும் விளம்பவும் அவளுக்கு இன்னமும் சங்கடமாகிப் போயிற்று. அண்ணன் என்று தடை யற்றுப் பேசினால், அதை எல்லாம் இந்த அன்னியனிடம் சொல்லியாக வேண்டுமா?

அவளது மனநிலை புரியாமல், ''கிருபாகரன் எங்களைப் பற்றி நிறையச் சொல்லியிருப்பார் போல?'' என்றான் கதிரேசன்.

''ஆமாம்... நிறையக் கேட்டுக் கேட்டு ஒருபுறச் செவிப் பறையே எனக்கு வீங்கிப் போய் விட்டது!'' என்றாள் மாதவி உள்ளடக்கிய எரிச்சலுடன்.

ஆனால், ''ரொம்பவும் போரடித்து விட்டாரா்க்கும்?'' என்று கேட்டு, அவளது எரிச்சலை உணர்ந்து கொண்டதைக் கதிரேசன் காட்டவும், அவளுக்கு மீண்டும் முகம் சூடாகி வியர்வை அரும்பியது.

என்னடா இது? ஒரு நிமிடம் தொடர்ந்து நிம்மதியாக இருக்க முடியவில்லையே என்று அவள் எண்ணியபோதே, அவன் தொடர்ந்தான். ''கிருபாகரனுக்கு ஒருவரைப் பிடித்து விட்டால் அவரைப் பற்றியே அலுப்பு சலிப்பில்லாமல் பேசிக் கொண்டே இருப்பார். உங்களைப் பற்றி எங்களிடம் எவ்வ ளவு சொல்லியிருக்கிறார் தெரியுமா?''

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள, அதைச் சமனம் செய்ய முயன்றபடி, ''என்ன சொன்னான்? அப்படி என்னைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?'' என்றாள் மாதவி.

''ஏதோ இருக்கப் போய்த்தானே சொல்லியிருக்கிறார்? நீங்கள் மகா கெட்டிக்காரியாம். பாட்டு, நடனம் எதைப் பார்த்தாலும் அப்படியே கிரகித்துக் கொள்வீர்களாம்! கம்ப் யூட்டர் வித்தகியாம். உங்களோடு ஐந்து நிமிடம் பேசினால் போதுமாம். பிறகு உங்களை மறக்கவே முடியாதாம். பிறகு உலக அழகிகள் எல்லாம் உங்களிடம் பிச்சை வாங்க வேண்டு மாம். தோற்றம், பாவனை எதிலும் அவர்கள் உங்களில் பாதிகூட வரமாட்டார்களாம். நிறையச்... சொன்னார். ஆனால், உண்மையில் அவர் பாதி அளவு கூடச் சொல்ல வில்லை என்பது இப்போது தெரிகிறது!'' என்று கூறி அவளை ஆர்வத்தோடு நோக்கினான் அவன்.

அய்யோ! இந்த அண்ணன் பாச மிகுதியில் கண்டபடி உளறியிருக்கிறானே! என்று கூச்சத்துடன் நோக்கிய மாதவி, கதிரேசனின் பார்வையில் சட்டெனக் கடுப்படைந்தாள்.

ஆளையே முழுங்குகிற மாதிரி இது என்ன இப்படி யொரு பார்வை? இவன்கள் எல்லாம் - எல்லாருமே இப்படித்தான். விழுங்குகிற மாதிரிப் பார்ப்பது! 'ஆகா... ஓகோ... என்பது! அப்புறம்... சே!

ஏதோ நினைவு வர, வயிறு, நெஞ்சுக்கூடு எல்லாம் காலியாகிவிட்டது போல மாதவி உணர்ந்தாள்.

இப்படியே நிற்பது நல்லதில்லை என்று உணர்ந்து, ''என்ன அண்ணா, கிளம்புவோமா?'' என்றபடி, தன் தோள் பையை எடுத்து வழக்கம் போலத் தோளில் போடப் போனாள்.

செய்யும் செயலில் முழுக் கவனமின்றிப் போனதால் சற்றும் யோசியாது தன் பழுதுபட்டிருந்த கையாலேயே பையைத் தூக்கித் தோளில் போட்டவளுக்குத் திடுமெனச் சுண்டி இழுத்த பெரு வலியில் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது.

# 3

மாதவி, முகம் வெளுத்துக் கீழே சரிவதை உணர்ந்து விரைந்து செயல்பட்டவன் கதிரேசன்தான்.

ஓர் எட்டில் அவளை நெருங்கி, அவள் விழுந்து விடாமல் தாங்கிப் பிடித்து நிறுத்திய பிறகே, அதைக் கவனித்துக் கிருபாகரனும், "என்னம்மா?" என்று ஓடி வந்தான்.

மாதவிக்குப் பெரிதாக மயக்கம் ஏதும் வந்துவிடவில்லை. சுயஉணர்வு இருக்கத்தான் செய்தது. ஆனால் அதிகமான வலியினால் இறுக்கமுற்ற அவயவங்களை அவளது விருப்பம் போல் இயக்க முடியவில்லை. தோளை அழுத்தும் பையை அகற்றி விட்டால் எவ்வளவோ வலி குறைந்து விடும் என்று தோன்றிய போதும், அதைச் செய்யவோ, செய்யும்படி யாரிடமேனும் சொல்லவோ அவளால் முடியவில்லை.

கதிரேசன் அவளைத் தாங்கிப் பிடித்து, அருகில் இருந்த சிமெண்ட் பெஞ்சுக்கு பாதி தூக்கினாற்போல் அழைத்துச் சென்று, பரிவுடன் உட்கார வைத்தபோது, தன்னை ஓர் ஏமாற்றுக்காரியாக மாதவி உணர்ந்தாள்.

நல்ல வேளையாக அவளை உட்கார வைக்கும்போது, சற்று இடைஞ்சலாக இடித்த தோள் பையை அவன் அகற்றி விடவே, வலி குறைந்து நல்லபடியாய் மூச்சு விட முடிந்தது அவளுக்கு.

"உடம்பு சரியில்லாத பெண். இவ்வளவு நேரம் நிற்க வைத்து நாம் இருவரும் பேசியது பெரும் பிழை. சும்மாவே நீண்ட பயணம் வேறு! முதலில் கான்டீனுக்குப் போய் ஒரு

காபி வாங்கி வருகிறேன், கிருபாகர். கொஞ்ச நேரம் உங்கள் தங்கை இங்கே ஓய்வு எடுக்கட்டும். அப்புறமாகக் கிளம்பு...'' என்று பேசிக் கொண்டே போனவனை, இடைமறித்து ''எனக்கு ஒன்றுமில்லை, இப்போதே போகலாம்...'' என்றாள் மாதவி.

இருவரும் மறுத்துப் பேசவும், ''எனக்கு ஒன்றும் இல்லை அண்ணா! இந்தக் கைதான் மெள்ள மெள்ளத்தான் சுமை தூக்கலாம் என்று டாக்டர் சொன்னதை மறந்து சட்டென்று பையைத் தூக்கினேனா, வலியில் கொஞ்சம் ஒரு மாதிரி வந்து விட்டது. இதற்குப் போய் பெரிதாக அலட்டினால் எனக்குப் பிடிக்காது. வாருங்கள், போகலாம்'' என்று சற்று கண்டிப்பான குரலில் கூறியவள், தோள் பையை இடது கையால் எடுத்துக் கொள்ள முயன்றாள்.

அதற்குள்ளாகப் பையை லாகவமாகத் தூக்கிக் கொண்ட கதிரேசன், ''நீங்கள் கொஞ்ச நாட்கள் எந்தக் கையாலுமே, எந்தச் சுமையுமே தூக்க வேண்டாம்'' என்றுரைத்து விட்டுத் திரும்பி, போர்ட்டர் மீதியைத் எடுத்துக் கொள்ளப்பா'' என்று என்னவோ அவன்தான் உரிமையாளன்போல உத்தரவிட, போர்ட்டரும் அதற்குப் பணிந்து பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு நடக்க, ஆட்சேபனையாக ஒரு சிறு பார்வைகூட இல்லாமல், தன் பங்குக்கு ஒரு கூடையை - தண்ணீர் பாட்டில், பற்பசை, பிரஷ் போன்றவை அடங்கியது, அதைத் தூக்கிக் கொண்டு கிருபாகரனும் செல்லவே வேறு வழியின்றி மாதவி யும் அவர்களைப் பின் தொடரும்படி ஆயிற்று.

இந்த ஆள் பண்ணையார் என்றால், அவர் பண்ணையில் வேலை செய்பவர்கள் அவர் சொல்படி நடக்க வேண்டியது தான். அரசாங்கத்திடம் சம்பளம் வாங்கும் அண்ணன் ஏன் இப்படி இந்த ஆளுக்குக் கீழ்படிய வேண்டும் என்று உள்ளூரப் புகைந்து கொண்டேதான் மாதவி நடந்தாள்.

ஏற்கனவே முக்கால் பாகம் நிரம்பியிருந்த ஜீப்பின் பின் பகுதியில், மாதவியின் பெட்டிகளையும் அடுக்கி, டாப்பை எடுத்து மூடி விட்டு உட்காருவதற்காக மூவரும் பின்புறம் வந்தார்கள்.

ஓரத்தில் அதிகக் காற்றடிக்கும் என்று உட்புறமாய் இரு ஆண்களுக்கும் நடுவில் உட்காருமாறு அழைத்ததை மாதவி மறுத்து விட்டாள்.

எப்படியாவது பக்கத்தில் உட்கார வைப்பது; பக்கத்தில் உட்கார்ந்து விட்டதாலேயே பாத்தியதை வந்து விட்ட மாதிரிப் பிறகு பேசுவது! இவன்களுக்கெல்லாம் வேறு வேலையே கிடையாதே! காற்றடித்தால் கன்றிப் போய்விட அவள் என்ன அப்படியோர் அதி கோமளவல்லி? என்ன கரிசனமடா!

''காற்றடித்தால் பறந்து போய்விட நான் என்ன இலவம் பஞ்சா, அண்ணா? நான் ஓரத்திலேயே உட்காருகிறேன்'' என்றாள் அவள் ஒரு சிரத்தையற்ற குரலில்.

''பஞ்சு காற்றில் பறக்கத்தான் செய்யும். கற்பூரம் கரைந்தே விடுமே! இப்போதே பாதி கரைந்து விட்டாற்போலத் தெரிகிறவர்கள், முழுவதுமாகக் காணாமல் போய்விட்டால் என்ன செய்வது என்கிற கவலைதான். என்ன கிருபாகர்?''

என்னவோ பெரிய நகைச் சுவையைக் கண்டாற்போலக் கிருபாகரன் சிரிக்கவும் மாதவிக்கு இன்னமும் பற்றிக் கொண்டு வந்தது.

தன் பக்கத்தில் அவளை உட்கார வைக்க இந்தப் பட்டிக்காட்டுப் பண்ணை வாரிசு செய்கிற முயற்சி புரியாமல் இந்த அப்பாவி அண்ணன் இளிக்க வேறு செய்கிறானே!

ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு எனக்கு உட்புறமாய் உட்கார்ந்தால் மூச்சு முட்டும். நீ முதலில் ஏறு அண்ணா?'' என்று தீர்மானமான குரலில் மாதவி கூறிவிட, எப்போதுமே தங்கையின் முடிவுகளுக்குப் பணிந்தே பழக்கப்பட்டுப் போன கிருபாகரனும் அவள் சொல்படி ஜீப்பில் ஏறிவிடவே, அதற்கு மேல் வற்புறுத்தாமல் கதிரேசனும் விட்டுவிட்டான்.

முகத்தில் காற்று மோத, இருபுறமும் பசேல் என்ற வயல்களின் ஊடே செல்வது மாதவிக்கு மிகவும் புதுமையாக வும், கூடவே மனதிற்கு உற்சாகமூட்டுவதாகவும் இருந்தது.

பசிய வயல்களும், அவற்றினூடே வெண்ணிறக் கொக்கு களும் ஆங்காங்கே பனைமரத் திரள்களும், பனைமர உச்சிக ளில் அலவரையும், நுங்குக் குலைகளும், பின்னணியில் நீல வானமும்... என்னவோ இந்தக் காட்சிகளைக் காண்பதற்கா கவே அவள் இவ்வளவு கஷ்டம் அனுபவித்து இங்கே வந்திருப்பதுபோல மாதவி உணர்ந்தாள்.

பசுமை பற்றிக் குறிப்பிட்டு அவள் பேசிய போது, ''என்னம்மா நீ, திருச்சிப் பக்கம் நல்ல காவிரி நீர்ப் பாசனம். எப்போதுமே நீர் வளம் நிறைந்த பூமி அது. முப் போகம் விளைவது. அதை விட்டு இதைப் பெரிதாகச் சொல்கிறாயே!'' என்றான் அண்ணன்.

''இருக்கலாம், அண்ணா. ஆனால், திருச்சி நகரத்தை விட்டு வெளியே போனால்தானே, அதன் சுற்றுப்புறத்தை ரசிப்பதற்கு? அவ்வப்போது மலைக்கோட்டை ஏறிச் சுற்றிலும் பார்த்துக் கொண்டு நிற்பதுடன் திருப்தி அடைய வேண்டியது தான்'' என்றாள் தங்கை.

கதிரேசன் சட்டென வண்டியை நிறுத்தவும், என்ன? என்று திரும்பினாள் மாதவி.

அவன் சாலையைச் சுட்டிக் காட்டினான்.

பெரிய பாம்பு ஒன்று வேகமாக சாலையைக் குறுக்கே கடந்து சென்று வயலின் வேலிச் செடியுள் மறைந்தது.

விழியகலப் பார்த்துக் கொண்டிருந்தவளிடம் ''பார்த் தாயா? அருகில் இருந்து இந்த அழகை ரசிப்பதானால், இதுபோல ஆபத்துகளுக்கும் தயாராக இருக்க வேண்டுமாக் கும்!'' என்று கிருபாகரன் கேலிக் குரலில் இயம்பினான்.

''ரொம்பவும் மிரட்டுகிறீர்களே கிருபா! அப்படியொன் றும் இந்தப் பாம்புகள் ஆட்கள் இருக்குமிடத்தில் வளைய வருவதில்லை, மாதவி'' என்றபடி மீண்டும் ஜீப்பை எடுத்தான் கதிரேசன்.

என்னமோ, பெற்றுப் பெயர் வைத்தமாதிரி 'மாதவி யாமே' மிஸ் மாதவி என்று மரியாதை கொடுத்து அழைக்க இந்தப் பட்டிக்காட்டு மனிதனுக்குத் தெரியாது போல என்று உள்ளூர எண்ணியபடி, ''காரை நிறுத்தாமலே சென்றிருந்தால் அந்தப் பாம்பைச் சாகடித்திருக்கலாமே!'' என்றாள் மாதவி.

''பாம்புகள் விவசாயிக்கு மிகவும் நன்மை செய்வன மாதவி. கதிர்களை உண்டு அழிக்கும் எலிகளை விழுங்கி நஷ்டத்தைக் குறைப்பன. அதனாலேயே பாம்புகளை இங்கு யாரும் கொல்வது இல்லை'' என்று கதிரேசன் விளக்கினான்.

''ஓகோ!'' என்று தலையாட்டினாள் மாதவி. பயனற்ற ஒன்றை இறைவன் படைப்பதே இல்லைபோலும்..! ஆனால் வினோதனை அவர் ஏன் படைத்தார்? எத்தனை ஆசைகள்! எத்தனை கனவுகள்! ஆசைகளே உருவாக...

வினோதனின் நினைவில் வழக்கம்போல மாதவியின் மனம் குன்றி முகம் வாடிப் போயிற்று. எதிர்காலம் ஒரு பாழடைந்த பெரும் பள்ளமாகத் தோன்றியது. பற்றிக் கரையே

றப் பிடிப்பு ஏதுமற்ற பள்ளம்! சோர்வுடன் இறுக மூடிக் கொண்டாள் அவள்.

ஏதோ சொல்லத் தொடங்கிய கிருபாகரனின் கையைத் தொட்டு அழுத்தி, கண்ணால் மாதவியைக் கதிரேசன் காட்டவே, ஒரு பெரு மூச்சுடன், தங்கையைத் தன் தோளில் லேசாகச் சாய்த்துக் கொண்டான் முன்னவன்.

ஏதோ ஓர் ஆதாரம் கிடைத்தாற்போல, அண்ணனோடு நன்றாக ஒட்டி அமர்ந்து கொண்டாள் தங்கை.

ஜீப் நின்றது. இறங்கிச் சுற்றும்முற்றும் பார்த்த மாதவிக்கு மீண்டும் உற்சாகம் தலை தூக்கியது.

சுற்றிலும் கம்பி வேலியிட்ட விசாலமான நிலப்பரப்பின் நடுவில் ஒரு சிறு வீடு. வீட்டை ஒட்டினாற்போலப் பலவகை மலர்ச் செடிகள் பூத்துக் கிடந்தன. ஒழுங்காகத் தோட்டம் என்று அமைக்காமல், அங்கங்கே கிடைத்த விதை, செடிகளை நட்டு வளர்த்திருந்தாற்போல மாதவிக்குத் தோன்றியது.

"உன் வேலையா, அண்ணா?" என்று விசாரித்தவளிடம், அவன், "நான் மட்டுமில்லை மாதும்மா. காந்தமும் தான். அவ்வப்போது எதையாவது கொண்டு வந்து நட்டு விட்டுப் போவாள். நான் காலையில் தண்ணீர் உற்றுவேன். இல்லாவிட்டால் செடி வாடிவிடுமில்லையா?" என்று கர்ம சிரத்தையோடு விளக்கினான்.

அண்ணனை விசித்திரமாக நோக்கினாள் மாதவி.

விவசாயம் படித்து அரசு விவசாய அதிகாரியாக இருக்கும் இந்தக் கிருபாகரன், செடிகளின் மீதுள்ள அக்கறையால் மட்டுமாக இந்தச் செடிகள் வாடிவிடக் கூடாது என்று எண்ணுகிறானா, அல்லது அந்தக் காந்தம் கொண்டு வந்து நட்டுவிட்டுப் போன செடிகள் வாடிவிடக் கூடாது என்பதற்காக இந்தச் செடிகளைப் பராமரிக்கிறானா?

முதலில் அந்தக் காந்தத்தைப் பார்த்துப் பழகித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று உள்ளூர முடிவு செய்து கொண் டாள் மாதவி.

இன்னொன்று தோன்ற, ''இத்தனை நாட்கள் சுமார் இருபது நாட்கள் திருச்சியில் இருந்தாயே அண்ணா, அப்போ தெல்லாம் இந்தச் செடிகளுக்கு யார் தண்ணீர் ஊற்றியிருக்கக் கூடும் அண்ணா? இன்று கூடத் தண்ணீர் விட்ட அடையாளம் தெரிகிறதே!'' என்று தமையனிடம் மாதவி வினவியதற்கு அவன் திரும்பி வரும் வரை ஒழுங்காகச் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றினால் ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் தருவதாக ஆள் ஏற்பாடு செய்து விட்டுத்தான் திருச்சிக்குக் கிளம்பியதா கக் கிருபாகரன் கூறவும் மாதவிக்கு விஷயம் இன்னமும் அதிக விந்தையாகப் பட்டது.

முதலாவதாக, அன்று அப்படி அலையக் குலையக் கிளம்பிய நேரத்திலும் செடிகள் விசயம் நினைவிருந்து அதற்காக ஓர் ஏற்பாடும் செய்யத் தோன்றியது ஒரு விசித்தி ரம். அடுத்து, ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் என்றால், இந்த இருபது நாட்களுக்கு நூறு ரூபாய் ஆகும். இந்த நூறு ரூபாய்க்கு இந்த மாதிரிச் செண்டு, வால்சம், கேந்திச் செடிகள் எத்தனையோ வாங்கலாமே; அதை விடுத்து, இந்தச் செடிக ளைத்தான் காப்பாற்றியாக வேண்டும் என்று என்ன கட்டாயம்?

குறுகுறுப்பினூடே உள்ளூர மாதவி ஓர் உறுத்தலையும் உணர்ந்தாள். உரிமை உணர்ச்சி அதிகப்படியாக இல்லாதவள் தான் மாதவி; ஆயினும் இந்தச் சமயத்தில் அவளுக்கு அவளுடைய அண்ணனின் பரிவும் பாசமும் மிகவும் தேவைப்பட்டது. அதற்கு இந்தப் பெண் காந்தம் குறுக்கே வருவாளோ என்கிற கவலையும் அவளுக்கு ஏற்பட்டது.

காந்தத்தை சந்திப்பதற்காக மாதவி அதிகம் காத்திருக்க நேரவில்லை.

ஜீப்பிலிருந்து மாதவி, கிருபாகரனின் சாமான்களை வீட்டின் உள்ளே கொணர்ந்து வைப்பதில் உதவி செய்து விட்டு, ''இருவரும் பேசாமல் குளித்து விட்டு ஓய்வு எடுங்கள். இன்றையச் சாப்பாட்டை பண்ணை வீட்டிலிருந்து அனுப்பச் செய்கிறேன். பெருக்கித் துடைத்துத் துப்புரவு செய்யவும் ஆள் அனுப்புகிறேன். நாளையிலிருந்து உங்கள் ஆள் வழக்கம் போல வேலையைத் தொடரட்டும். இப்போது நான் கிளம்பட்டுமா? வேறு ஏதாவது வேண்டுமானால் சொல்லுங்கள்...'' என்று இருவருக்கும் பொதுவாக ஒரு கேள்வியைக் கதிரேசன் கேட்டான்.

மாதவி மறுப்பாக லேசாகத் தலையசைக்க, கிருபாகரனும் எதுவும் தேவையில்லை என்று கூறிவிட, கதிரேசன் ஒரு வழியாகக் கிளம்பினான்.

அவனது ஜீப் கிளம்பிச் சென்றதும், ''எதற்காக அண்ணா, நமக்கு அந்த ஆள் உணவு அனுப்புவது? குளித்து முடித்து விட்டால், நாம் இருவருமே நடந்து போய் ஏதாவது சாப்பிட்டு விட்டு வந்து விடலாமில்லையா? அல்லது ஏதாவது வாங்கி வந்து வீட்டிலேயே சாப்பிடலாம்... அதை விட்டு, அந்த ஆள் வீட்டிலிருந்து என்ன 'சாப்பாடு? அவர்தான் ஓர் உபசாரத்துக்குச் சொன்னார் என்றால் நீ வேறு பலமாகத் தலையாட்டி விட்டாயே! அவர் அனுப்பவில்லை என்றால் நாம் என்ன பட்டினியா கிடக்க நேர்ந்து விடும்?'' என்று எரிச்சலுடன் பொரிந்து கொட்டினாள்.

மாதவி பேசி முடிக்கும் வரை காத்திருந்து விட்டு, ''ஆமாம், அம்மா'' என்று கிருபாகரன் அமைதியாகக் கூறவும், மாதவிக்கு ஒரே ஆச்சரியமாகப் போயிற்று.

''பூம்பொழில் கிராமம் மாதவி. அதிலும் சிறிய கிராமம். இங்கே நீ நினைக்கிற மாதிரி ஓட்டல், ஓட்டலில் சாப்பாடு எல்லாம் கிடைக்காது. இந்த ஊரின் மறுகோடியில் ஒரு பெட்டிக் கடை இருக்கிறது. வளையத்தில் கோர்த்து வைத்திருக்கும் கைமுறுக்கும், கண்ணாடி பாட்டில்களில் சிவப்பும் பச்சையுமாக சோப்புக் கட்டி மாதிரி வெட்டி வைத்திருக்கும் இனிப்பும், ஆரஞ்சு வில்லைகளும், கலர் கலராக ஆனால் ஒரே சுவையில் ஏதோ பானமும் கிடைக்கும். உனக்குப் பசியாற இவை போதும் என்றால் குளித்து விட்டுக் கிளம்பு. போகலாம். போகிற வழியில் பண்ணை வீட்டில் உணவு தேவையில்லை என்று சொல்லி விட்டே போய் விடலாம்.''

கண் சிமிட்டிக் கேட்ட அண்ணனிடம், ''போ அண்ணா!'' என்று மாதவி செல்லம் கொஞ்சினாள். ''ஆனால், நீ சொல்வது உண்மை என்றால், இப்படியொரு பட்டிக்காட்டில் இருந்து கொண்டு நீ குப்பை கொட்டுவானேன்? ஸ்ரீ வைகுண்டத்தில் இருந்து கொண்டு, இங்கே வந்து போகலாமில்லையா? உனக்குத்தான் போக்குவரத்துப் படி உண்டே! அத்தோடு, மெய்யாகச் சொல்லு; இந்தக் குக்கிராமத்திலா உனக்கு வேலை?'' என்று விசாரித்தாள்.

''இல்லைதான். எனக்குத் தலைமை அலுவலகம் ஸ்ரீவைகுண்டம்தான். மாத அறிக்கை திருநெல்வேலியில்தான் கொடுக்க வேண்டும். ஆனால், பயிர் ஆராய்ச்சி தொடர்பான வேலை என்பதால் அதற்கு வசதியாக இடத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை என்னுடையது. 'பூம்பொழில்' மெய்யாகவே ஒரு பொழில் போல அழகான ஊர் என்பதோடு, புதுப்புது ஆராய்ச்சிகளுக்குக் கதிரேசன் உதவியாக இருப்பதாலும் இங்கேயே தங்கிவிட முடிவு செய்தேன்...''

"ம்...ம்... மிக மிக முக்கியமான காரணத்தைச் சொல்லாமல் விட்டுவிட்டாயே! உன் பண்ணையார் குடும்பம், அவர்கள் வீட்டுப் பஞ்சு... இட்லி!" என்று மாதவி சிரிக்கவும் போக்கிரிப் பெண்' என்று தங்கையின் மூக்கைப் பிடித்து ஆட்டினான் கிருபாகரன்.

கூடவே, அந்தப் பெண் காந்தம் என்று எண்ணியதைச் சொல்லாமல், அண்ணனின் முகத்தைக் கூர்ந்தபடி, "கூடவே இந்த ஊரின் மிக நல்ல மனிதர்கள்!" என்று மாதவி கூற, ஒப்புதலாய் தலையாட்டியவனின் கவனம் பாதி வேறெங்கோ சென்று நிலைத்தது.

"செடி செடி என்று உன் இடத்தை அழகுப்படுத்தியிருக்கிறாளே; அந்தக் காந்தத்தை நான் எப்போதண்ணா சந்திப்பது?" என்று ஆழம் பார்த்தாள் மாதவி.

"விரைவிலேயே வருவாள். ஏன்... நம் சாப்பாட்டை அவளேதான் எடுத்து வருவாள்!" என்று ஓர் இளம் புன்னகையோடு கிருபாகரன் இயம்பியதற்கிணங்க, அந்தக் காந்தமும் விரைவிலேயே கையில் உணவு அடுக்கோடு வந்து சேர்ந்தாள்.

ஆமாம். பண்ணை வீட்டிலிருந்து, இவர்கள் இருவருக்குமாக உணவை எடுத்து வந்தவள் அந்தக் காந்தம்தான்.

காந்தத்தைப் பார்த்ததும் முதலில் மாதவிக்குச் சற்று ஏமாற்றம்தான். ஏமாற்றம் அவளது எழிலைப் பற்றியது அல்ல. சற்று சிற்றுருவமாக இருந்தாள். செதுக்கிய சிற்பம் போல எங்கும் குறைகாண முடியாதபடி திரும்பிப் பார்க்க வைக்கும் அழகுடன்தான் திகழ்ந்தாள் அந்தக் காந்தம். ஆனால், நீண்ட ஜடை நளினமாய் ஆட வந்த அந்தக் காந்தத்திற்கு வயது பதினாறு பதினேழுதான் இருக்கும் என்று

அவள் வருவதை அறை ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த மாதவி அனுமானித்தாள்.

சின்னப் பெண்! பள்ளிச் சிறுமி! இவளைப் போய் அண்ணனோடு இணைத்து ஏதேதோ கற்பனை செய்து மனம் குழம்பினேனே என்று அவள் தன்னைத்தானே இடித்துரைக் கையிலேயே, கிருபாகரனைக் கடைக்கண்ணால் நோக்கி, ஒயிலான ஓர் உடல் நெளிப்புடன் அவள் புன்னகை புரிவ தைக் கண்டு மாதவி அயர்ந்து போனாள். இது சின்னப் பெண்ணுக்குரிய செய்கை அல்லவே!

கவர்ச்சிகரமான ஒரு வெட்டோடு உணவு அடுக்கை உரிமையோடு உள்ளே கொண்டுவந்து வைத்தவள், பக்கத்து அறையிலிருந்து ஹாலுக்குள் வந்த மாதவியை ஏற இறங்க நோக்கினாள்.

''உங்களுக்கு உடம்பு சரியில்லை, காலையில் கூட சரியாகச் சாப்பிடவில்லை என்று சின்னவர் சொன்னாரே!'' என்று அவள் உரைத்த போது குரலில் நம்ப இயலாமை இருந்தது. ''அவர் சொன்னாரே என்றுதான் வெந்ததும் வேகாததுமாக அள்ளிப் போட்டுக் கொண்டு கொண்டுவந் தேன். சின்னவரின் விருப்பம் என்று தெரிந்தால் அதை நான் நிறைவேற்றாமல் விடமாட்டேன் என்பது அவருக்கு நன்றா கத் தெரியும். அந்த ஒரு நம்பிக்கைக்காகத்தான் சாப்பாட்டை நானே எடுத்து வந்தேன்'' என்றாள் அவள்.

''சின்னவர்'' என்று குறிப்பிட்ட போது காந்தத்தின் குரலில் இருந்த பரவசம் மாதவியைத் திகைக்க வைத்தது.

# 4

பண்ணை வீட்டு உணவு, கிருபாகரன் சொன்னது போல மிகவும் சுவையாகவே தயாரிக்கப்பட்டிருந்தது. காந்தம் சொன்னது போல வெந்ததும் வேகாததுமாக எடுத்து வரப்பட்டிருக்கவும் இல்லை. உணவும் நிறைய இருந்தது. இரண்டு பேருக்கு மிகவும் அதிகம்.

இருவருக்கும் இலை விரித்து, பரிமாறுவதற்குக் காந்தம் தயாரானபோது, ''நீயும் உட்கார் காந்தம். நாம் மூவருமாகச் சேர்ந்தே சாப்பிடலாம்'' என்று கிருபாகரன் அழைத்தான்.

''என்னை மாதிரி ஏழைப் பெண்ணோடு சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட, உங்கள் தங்கச்சிக்குப் பிடிக்குமோ என்னமோ?'' என்று அவள் பிகு பண்ணிக் கொள்ள, ''இல்லை யில்லை. நீயும் உட்கார்!'' என்று மாதவியும் கூறிய பிறகே, காந்தம் இன்னோர் இலையைப் போட்டுக் கொண்டு தானும் சாப்பிட அமர்ந்தாள்.

இன்னோர் இலை!

இங்கே சேர்ந்து அமர்ந்து உண்பதற்காகவே இந்த அதிகப்படி இலையைக் காந்தம் கொண்டு வந்தாளா?

சேச்சே! இராது. கட்டிக் கொண்டு வரும்போதோ, கழுவும் போதோ கிழிந்து போனால் மாற்றாகப் பயன்படுத்த வென்று உபரியாக ஓர் இலை எடுத்து வந்திருப்பாள்.

சும்மா சும்மா எதிலும் தப்புக் கண்டு பிடிக்கக் கூடாது என்று தன்னையே இடித்துரைத்துக் கொண்டு மாதவி உண்பதில் முனைந்தாள்.

ஆனால், ''உனக்கு வறுத்த மீன் பிடிக்குமே, இன் னொன்று எடுத்துக் கொள். மாங்காய் போட்ட அவியல் என்றால் ஆசையாகச் சாப்பிடுவாயே, நிறைய வைத்துக் கொள்'' என்று கிருபாகரன் காந்தத்திற்கு உபசாரம் பண்ணப் பண்ண இது அடிக்கடி நிகழ்வதோ என்று எண்ணாதிருக்க மாதவியால் முடியவில்லை.

உணவு வரும்வரை தான் கொண்டு வந்த பொருள்களை எடுத்து வைப்பதும், அங்கங்கே கிருபாகரன் பொருத்தமற்றுப் போட்டு வைத்திருந்தவற்றை சரியான இடம் பார்த்து அடுக்கு வதுமாக சிறு சிறு வேலைகளை மாதவி செய்து கொண்டே தான் இருந்தாள்.

இதோ, சாப்பாடு வந்து விடும் என்று கிருபாகரன் விரட்டிய பிறகு, அவன் சொல்படி வென்னீரில் உடல் அலுப்பு நீங்க அப்போதுதான் குளித்திருந்ததால், பசி தீர்ந்ததும் மாத விக்குக் கண்ணைச் சுழட்டிக் கொண்டு தூக்கம் வர பேசாமல் படுத்து நன்றாக உறங்கி விட்டாள். காந்தம் எப்போது சென்றாள் என்பதை அவள் அறியாள்.

மீண்டும் மாதவி கண் விழித்த போது மாலையாகி விட்டிருந்தது.

மின்சாரம் நின்று விட்டதால் மின் விசிறி ஓடவில்லை என்று பனை ஓலை விசிறியால் அவளுக்கு விசிறிக் கொண்டு அருகில் அமர்ந்திருந்த அண்ணனைக் காணவும் அவளுக்கு மனம் கசிந்தது.

இப்படி ஓர் அன்பான அண்ணன் யாருக்குக் கிடைப்பார்?

அண்ணன் அண்ணன் என்று மனம் உருகிக் கொண்டு இருந்ததாலோ என்னவோ பண்ணை வீடு சென்று வரலாம் என்று கிருபாகரன் சொன்னபோது மாதவி மறுக்கவில்லை.

இருவருமாகக் கிளம்பி பொடி நடையாகவே பேசிக் கொண்டே சென்றனர்.

உணவின் ருசி பற்றி சிலாகித்து விட்டு, பேச்சினூடே, ''காந்தம் அடிக்கடி இப்படி சாப்பாடு எடுத்து வருவாளா அண்ணா?'' என்று வாழைப் பழத்தில் ஊசி நுழைத்து மாதவி விசாரித்தாள்.

உள் வியமம் புரியாமல், ''அடிக்கடி என்று இல்லை, மாது. பண்ணையார் வீட்டில் ஏதாவது விசேஷமாகச் சமைத் தால் - பண்டிகை என்று பலகாரம் செய்தால் இன்றுபோல விரால் மீன், நண்டு என்று கிடைத்து பக்குவம் செய்தால் கதிரேசன் அம்மா எனக்கு நிச்சயமாக அனுப்பி விடுவார்கள். பெரும்பாலும் காந்தம்தான் கொண்டு வருவாள்'' என்று உள்ளதை மறையாமல் கிருபாகரன் உரைத்தான்.

காந்தத்தைப் பற்றி மேலும் விசாரிக்க வாயெடுத்தவள், சற்றுத் தயங்கி, ''உங்கள் பண்ணையார் வீட்டு அமைப்பு எப்படி அண்ணா? வீட்டில் யார் யார் எப்படி, என்ன விதமாய் இருக்கிறார்கள்... எப்படிப் பழகுவார்கள். எல்லாம் சொல் அண்ணா. ஒன்றும் தெரியாமல் அங்கே போய் நான் விழிக்கும்படி இருக்கக் கூடாது'' என்று மறைமுகமாகவே விசாரித்தாள்.

அப்போதும் தங்கையின் உள் கருத்தைக் கிருபாகரன் ஊகிக்கவில்லை. அவளது கேள்வியை யதார்த்தமாகவே எடுத்து, ''பண்ணையார் - கதிரேசனுடைய அப்பா இருக்கி றார்,. வயல் வெளிகளில் நேரடிப் பார்வையிடும் பொறுப்பை மகனிடம் கொடுத்து விட்டுச் சொந்த பந்தங்களுக்குச் செய்ய வேண்டியது, ஊர்ப் பொது விவகாரங்கள் என்று பொழுதைக் கழிக்கிறார். அப்புறம், பண்ணையாருடைய மனைவி. 'மகா லட்சுமி' என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். பின்னே

பாரேன், வீட்டில் செய்ததை உனக்கும் எனக்கும் எவ்வளவு அனுப்பியிருந்தார்கள்? அப்புறம் கதிரேசன்...'' என்று தொடங்கியவனை மாதவி இடைமறித்தாள்.

''அவரைப் பற்றித்தான் ஏற்கனவே சொல்லியிருக்கி றாயே! விவசாயத்தில் மன்னன்; அதைப் பாடமாகப் பயின்ற உனக்கே கற்றுக் கொடுக்கும் மகா சூரன் என்று வரும்போது அளந்... வந்து, நிறையச் சொன்னாயே. அப்புறம் அவர்கள் வீட்டில் வேறு யார் யார் இருக்கிறார்கள்? அந்தக் கதிரேச னுக்கு அண்ணன்மார், தம்பிமார், அக்காள்மார், தங்கைகள், மனைவி, பிள்ளை, அந்த வீட்டு அசையா விருந்தினர், வந்து போகிறவர்கள், வேலைக்காரர்கள், ஆடு, மாடு, கோழி, ஆட்டுக்குட்டி, மாட்டுக்குட்டி... ஊகூம்... மாட்டுக் குட்டி என்று சொல்ல மாட்டார்களே, கன்று... கன்றுக் குட்டி என்று சொல்ல வேண்டும். சரிதானே?''

அவள் அடுக்கிய பாணியில் சிரித்து விட்டு, ''கதிரேசன் சாருக்கு அண்ணன் தம்பி கிடையாது...'' என்று கிருபாகரன் தொடங்கியபோது, மாதவி மீண்டும் குறுக்கிட்டாள். ''கவலை விட்டது! சொத்து மொத்தமாகக் கைக்கு வந்து சேரும்!''

மீண்டும் சிரித்து விட்டு, ''இரண்டு மூன்று பங்கு வைத்தாலும் பண்ணைச் சொத்து தாங்கும்!'' என்றான் அண் ணன்.

''ஊம்! போகட்டும். மற்ற விஷயம் சொல்லு''

''சகோதரிகள் இரண்டு பேர். இருவரும் திருமணமாகி அவரவர் பிள்ளை குட்டி என்று சவுக்கியமாய் இருக்கிறார்கள். இவருக்கு இன்னமும் திருமணமாகவில்லை..''

''பா...வம்! அப்புறம் சொல்லு. வேறு யார் யார்...'' காந்தத்துக்கு அந்த வீட்டில் என்ன இடம் என்று அறிந்து

கொள்ளும் ஆவல் அவளுக்கு! அதை வாய் திறந்து குறிப்பிட்டுக் கேளாமல் அண்ணனாகவே சொல்லிவிடமாட்டானா என்று அவள் காத்திருக்க, ஒருவாறு கிருபாகரனும் காந்தத்திற்கு வந்து சேர்ந்தான்.

''கணக்குப் பிள்ளை, தோட்டம் துரவு பாக்க, வீடு சுத்தம் பண்ண, சமையலில் உதவ என்று ஏழெட்டுபேர் அந்த வீட்டில் எப்போதும் இருப்பார்கள்.

அந்த வீட்டில் சிவத்தி என்று ஓர் அம்மா இருக்கிறார்கள். கையில் குழந்தையோடு வேறு எதுவுமே இல்லாமல் விழுந்து கிடந்தவர்களிடம் இரக்கம் காட்டி பண்ணையார் மனைவி கூடவே வைத்துக் கொண்டு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தக் குழந்தைதான் காந்தம். அந்த வீட்டில்... வீட்டுப் பெண்போல அவளுக்குப் பல சலுகைகள் உண்டு. சிட்டுக் குருவி போலச் சுற்றிக் கொண்டு வருவாள்'' என்று முடித்தான் அண்ணன்.

''ஒகோ!''

இந்தப் பண்ணையார் குடும்பத்தை விட்டால் அந்தப் பெண் காந்தத்துக்கு வேறு திக்கில்லை. ஒருவருக்கொருவர் தவிர மற்றபடி அனாதைகளான இந்த அண்ணன் - தங்கைக்கு ஏற்ற எள்ளுருண்டைதானே இந்தக் காந்தம்? ஏதேனும் படித்திருக்கிறாளோ என்னவோ. ஆனால், சின்னவர் என்ற போது அந்தப் பரவசம்?! முதலாளி என்கிற மரியாதையை மாதவிதான் தவறாக எடுத்துக் கொண்டு விட்டாளோ? மாதவியின் யோசனை பலவாறு ஓடியது.

வீட்டுப் பெண் போல என்று கிருபாகரன் சொன்னதற்கு ஏற்ப, ''வாருங்கள், வாருங்கள்'' என்று இவர்களை வாயில் வரை வந்து வரவேற்றவள் காந்தம்தான்.

உள்ளே சென்றதுமே, நீண்ட சதுரமாய் ஒரு பெரிய முற்றமும், சுற்றுக் கட்டுத் தாழ்வாரமும் காற்றும் வெளிச்சமுமாய் இருந்தது. அங்கே ஒருபுறமாய்ச் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த இரண்டு குறும் கட்டில்களை எடுத்துப் போட்டு உட்காரச் சொல்லி உபசாரம் செய்து விட்டு, அந்த முற்றத்தின் உட்புற வாயில்களின் ஒன்றினுள் சென்று மறைந்தாள்.

சில வினாடிகளுக்குள்ளாகவே, பண்ணையாருடைய மனைவி - கிருபாகரன் சொன்னது போல மகாலட்சுமி போன்ற தோற்றத்துடன் விரைந்து வந்தார். ''வாம்மா. வா தம்பி. உட்காருங்கள்; உட்காருங்கள். என்ன தம்பி, இன்றே தங்கச்சியை இழுத்துக் கொண்டு வரவேண்டுமா? பாவம், பிரயாண அலுப்பும் களைப்பும் இருக்கும். நாம் போனால் அது வேறு தொல்லையாகி விடக் கூடாதே என்றுதான் இன்று விட்டு, நாளை வரலாம் என்று இருந்தேன். அதற்குள் இவ்வளவு தூரம் நடத்திக் கூட்டி வந்து விட்டாயேப்பா!'' என்று அங்கலாய்த்தாள்.

''பெரியவர்களை நாங்கள் வந்து பார்ப்பதுதான் முறை. நீங்கள் வந்தால் அதுவும் மகிழ்ச்சிதானே தவிர, தொல்லை என்று ஒருநாளும் ஆகாது'' என்று மரியாதையுடன் கிருபாகரன் அழகாகப் பேசினான்.

கூடவே வந்த வேலையாள் எடுத்துப் போட்ட பனை நார்ப் பின்னலிட்ட நாற்காலியில் அமர்ந்து கொண்டு, ''எல்லா ஆண்களும் போலத்தான் தம்பி பேசுவதும் இருக்கிறது. சும்மா என்றால் பரவாயில்லை. தங்கச்சி சும்மாவே உடம்பு சரியில்லாத பெண். ரயில் பயணம் போக, நம் ஊருக்கு ஜீப்பில் வந்தது வேறு. அலுப்பில் விட்டால் சாப்பாடு கூட இல்லாமல் கிடக்கத் தோன்றும். குளித்துச் சாமான் பிரித்து வைப்பதே

பெரும் பாடு. இதில் நான் வந்தேன் என்றால் ஒரு காபித் தண்ணீராவது தராமல் அனுப்ப மனம் வருமா? தங்கச்சி தானே செய்ய வேண்டும்? வெறும் ஒரு காபிதானே என்று சொல்லக் கூடாது. அதற்கும் பாலைக் காய்ச்ச வேண்டும், டிக்காஷன் இறக்க வேண்டும், ருசி வரக் கலந்து எடுத்து வந்து தரவேண்டும். இது ஒன்றும் யோசியாமல், 'கதிரேசு அம்மாவுக்குக் காபி கொண்டு வந்து கொடும்மா' என்று நீங்கள் ஆண்கள் சாதாரணமாகச் சொல்லி விடுவீர்கள். இது ஒரு பாடு என்று அறியாமல் சொல்வதுதான்! ஆனால் வேலை, வேலைதானே? அதைச் செய்யும்போது கஷ்டம் கஷ்டம்தானே?'' என்று அந்த மகாலட்சுமி அம்மாள் - அவர் பெயரும் மகாலட்சுமியேதானாம் - சொல்லவும் மாதவிக்கு வியப்போடு அந்த அம்மாளிடம் ஒரு மதிப்பும் உண்டாயிற்று.

பொதுவாக நம் நாட்டில் ஆண் ஆதிக்கம் அதிகம். அதிலும் கிராமப் புறங்களில் ஆண்களின் சுகத்தைப் பராமரிப்பதற்காகவே பெண்கள் பிறந்திருப்பது போல நடந்து கொள்வார்கள் என்று ஓரிரண்டு தோழிகளின் பேச்சிலிருந்து மாதவி கண்டு கொண்டிருக்கிறாள்.

இதுவோ வடிகட்டின கிராமந்திரம். இதில் முந்திய தலைமுறையைச் சேர்ந்த ஒரு பெண்மணியிடமிருந்து வந்த இந்தப் பேச்சு, மாதவியை அதிசயத்தில் ஆழ்த்தியது.

''கையில் அடிபட்டதாக தம்பி சொன்னானேம்மா. இப்போது பரவாயில்லையா?'' என்று விசாரித்தாள், அந்தப் பெரியவள்.

''உம். கொஞ்சம் அழுத்தமாகப் பிடிக்க முடியாது. மற்றபடி பிரச்சினையில்லை. டாக்டர் சொன்னபடி விரல்களுக்குப் பயிற்சியும் செய்து கொண்டே இருப்பதால் விரைவில் முழுக்கச் சரியாகி விடும் என்று நினைக்கிறேன்'' என்று கூறி மாதவி முறுவலித்தாள்.

''தம்பி சொன்னது சரியாகத்தான் இருக்கிறது. மாதவி ரொம்பவும் அழகு; அதிலும் சிரிக்கும் போது விளக்குப் போட்ட மாதிரி பளீர் என்றிருக்கும் என்றான். அப்படியே தான் இருக்கிறது'' என்று அந்த அம்மாள் தொடர்ந்து கூறவும், சட்டெனா முகம் சிவந்து மாதவி குழம்பிப் போனாள்.

மகாலட்சுமி அம்மாளின் 'தம்பி'யில் மாதவிக்கு முதலில் சற்றுக் குழப்பம் ஏற்பட்டது. ஆனால் மகன், மகன் வயதை ஒட்டிய ஆண்கள் எல்லோரையும் அவள் 'தம்பி' என்று குறிப்பிடுவதை உடனேயே கண்டு கொண்டதும் அந்தக் குழப்பம் உடனேயே தீர்ந்து போயிற்று.

ஆனால், மாதவியின் அழகு பற்றித் தம்பி சொன்னதாக மகாலட்சுமி குறிப்பிடவும் அவளுக்கு மீண்டும் குழப்பமும், கூடவே ப்டபடப்பும் ஏற்பட்டது. சொன்னவன் கதிரேசன் என்று தெளிவானபோது, படபடப்பு அதிகமானதே தவிரக் குறையவில்லை. அவன் பார்க்க எப்போது சிரித்தோம் என்று அதுவேறு யோசனை!

மாதவியின் முகச் சிரிப்பை மட்டும் கவனித்துக் காரணத் தைத் தவறாக ஊகித்த மகாலட்சுமி, ''பார் தம்பி, தங்கச்சி முகமெல்லாம் வேர்த்து சிவந்து விட்டது! பாவம். வேண்டுமா னால் சற்று நேரம் படுத்திருக்கிறாயம்மா?'' என்று பரிவு காட்டவும் மாதவி வெட்கிப் போய் ''ஊகூம். அதெல்லாம் வேண்டாம். வந்து இந்தக் கட்டில், உங்கள் நாற்காலி இதெல் லாம் பின்னல் வேலை அழகாகவும் உறுதியாகவும் இருக்கி றதே. எங்கே வாங்கினீர்கள்?'' என்று தன்னிடமிருந்து பேச்சை அகற்றி வேறு துறைக்குத் திருப்பினாள்.

''வாங்குவதா? இங்கேயே பின்னுவார்கள் அம்மா. பனைநாரில் கட்டில் பின்னுவார்கள். குருத்து ஓலையில் பாய் முடைவார்கள், பச்சை ஓலையில் கூடை, பெட்டி செய்வார்

கள். நம் காந்தம் கூட எல்லாம் அழகாகச் செய்வாள். நான் உட்கார்ந்திருக்கும் நாற்காலியின் பின்னல் கூட அவளுடைய வேலைதான்'' என்று சொல்லிக் கொண்டு இருந்தபோது, காந்தமே கையில் இரு தட்டுகளுடன் வந்து சேர்ந்தாள்.

இளம் பொன்னிறத்தில் ஒன்றுபோல் அழகாகப் பிழியப் பட்டிருந்த முறுக்குகளை ஒரு தட்டில் கண்டதும் மாதவியின் நாவில் நீர் ஊறிற்று.

சரியான சாப்பாட்டு ராமியாகி விட்டேன் போல் இருக்கி றதே என்று அடுத்தத் தட்டை நோட்டம் போட்டவளுக்கு அதில் லேசான பளபளப்புடன் அமர்ந்திருந்த கருநிற உருண் டைகளைக் காணவும் என்னவோ போல இருந்தது.

அவள் முகம் போன போக்கைப் பார்த்து விட்டு ''எள் உருண்டை அம்மா. வீட்டு எள்ளை வறுத்துப் புடைத்து வீட்டுக்காகத் தனியே ஊற்றிய கருப்புக்கட்டி சேர்த்து இடித் தது. ருசிக்கு ருசி; சத்துக்குச் சத்து என்று உனக்காகத்தான் இடித்து எடுத்து வரச் சொன்னேன். ஒன்று சாப்பிட்டுப் பாரம்மா'' என்று மகாலட்சுமி கூறவும் மாதவிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

அவளுக்காக என்று அப்போது செய்யப்பட்டது என்ற பிறகு மறுப்பது மரியாதை அல்ல. ஆனால்...

யோசித்தபடி அண்ணனைப் பார்த்தால், அவன் ஏற்க னவே ஒரு எள் உருண்டையைக் கிட்டத்தட்ட முடித்திருந்தான்.

அப்போதும் தயக்கத்துடனேயே ஓர் எள் உருண்டை யைக் கொஞ்சம் பிட்டு வாயில் போட்டுக் கொண்ட மாதவிக் குத் தன் நாவையே நம்பமுடியவில்லை. தரமாகத் தயாரிக்கப் பட்ட 'கமர்கட்' மாதிரி இருக்கவே அவளும் இரண்டை ஆசையாகவே உண்டு முடித்தாள்.

முறுக்குடன் காபி வந்தது.

இந்த வீட்டின் மற்ற உணவு வகைகளோடு ஒப்பிட்டால் காபி சுவை மட்டம்தான் என்று மாதவிக்குத் தோன்றியது. ஆனால், அந்தக் காபியினுள் ஒரு முறுக்கை நொறுக்கிப் போட்டு அண்ணன் உண்பதைப் பார்த்துத் தானும் அதுபோலச் செய்து உண்டு பார்த்து விட்டு ருசித்தாள். "ஆனால் தனியாகவும் முறுக்கு நன்றாய்த்தானே இருக்கிறது" என்றாள்.

"எல்லாம் காந்தத்துடைய அம்மா சிவத்தி செய்வது தான். பலகாரங்கள் பலவிதமாய், பிரமாதமாய் செய்வாள். காந்தமும் அப்படித்தான். கண் பார்த்தால் கை செய்யும் என்பார்களே, அதுபோலக் கெட்டிக்காரி. எவன் கொடுத்து வைத்திருக்கிறானோ! அருமை தெரிந்து வைத்துக் கொள்கிற வன் கிடைக்க வேண்டும்" என்ற மகாலட்சுமியின் பேச்சைத் தொடர்ந்து காந்தத்தைப் பார்த்தாள் மாதவி. அவள் எதிர் பார்த்த வெட்கச் சிரிப்புக்குப் பதிலாக அங்கிருந்த கர்வம் அவளைச் சற்று குழப்பியது.

மகாலட்சுமி அம்மாளிடம் அவர்களது உதவிக்கு நன்றி தெரிவித்து விட்டுக் கிளம்ப முயன்றபோது "இருந்து சாப் பிட்டு விட்டுப் போகலாம்!" என்றாள் அந்த அம்மாள்.

"சும்மாவே எங்களால் உங்களுக்கு மிகுந்த சிரமம்..." என்று மாதவி இழுத்தபடி அண்ணனை நோக்கினாள்.

தங்கையோடு கூடச் சேர்ந்து நன்றி நவிலாமல், இன் னொரு முறுக்கை நொறுக்கிக் கொண்டிருந்தான் கிருபாகரன்.

மாதவியின் மனதைப் படித்து, "தம்பியை நாங்கள் எங்கள் வீட்டுப் பிள்ளையாகவே எண்ணி விட்டோம். தம்பி யும் இந்த வீட்டை வேற்றிடமாக நினைத்துப் பழகுவது இல்லை. என்னவோ, தெரியவில்லை; தம்பியிடம் போலவே

உன்னிடமும் எனக்கு ஒரு பிரியம் உண்டாகி விட்டது. நீயும், இதை உன் சொந்த வீடாகவே பாவித்து, வரப்போக இருக்க வேண்டும்'' என்று உரிமையுடன் உத்தரவிட்டாள் கதிரேசனுடைய அன்னை.

சற்றுப் போரடித்தாற்போன்ற முகப்பாவனையுடன் காந்தம் சற்று விலகி நின்று கொண்டிருந்தாள்.

மகாலட்சுமி அம்மாள், மாதவியிடம் பிரியம் காட்டி, உரிமை அளிப்பது இவளுக்குப் பிடிக்கவில்லையா?

உள்ளூர யோசனையோடு, மாதவி பார்த்துக் கொண்டு இருந்த போதே, காந்தத்தின் முகம், கண்ணிமைக்கும் நேரத்திற்குள்ளாக மாறி உயிர்ப்புற்றது.

அழகாக மடிப்பெடுத்து பின் குத்தியிருந்த தாவணியில் சற்றே புரண்டு கிடந்த ஒரு மடிப்பை அவசரமாகச் சீர்செய்தாள். 'தலை கலைந்திருக்கிறதோ' என்று தொட்டுப் பார்த்து, பார்த்த அளவில் திருப்தியுற்றவளாக உள்ளே ஓடிச் சென்றாள்.

விரைவிலேயே கையில் ஒரு வாளியில் தண்ணீரோடு திரும்பி வந்தவள், அந்த முற்றத்தின் ஓர் ஓரமாய் இருந்த அங்கணத்தின் அருகே வாளியை வைத்தாள்.

மீண்டும் உள்ளே ஓடிச் சென்று கையில் ஒரு டவலோடு அவள் திரும்பி வந்தபோது, வாயிலில் கதிரேசன் ஒரு மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தான்.

இவனது வரவினால்தான் காந்தத்திடம் இவ்வளவு பரபரப்பா? ஆனால் அதை ஒத்துக் கொள்ளவும் மாட்டாமல் மாதவியின் மனம் குழம்பியது.

காந்தம் எடுத்து வைத்திருந்த நீரில் கை, கால், முகம் கழுவி அவள் தந்த டவலில் துடைத்து முடித்த பிறகே கதிரேசன் விருந்தினரின் பக்கம் வந்து அவர்களை வரவேற்று முன் நகர்ந்து சுவாதீனமாய்க் கிருபாகரனைச் சற்று உட்காரச்

சொல்லி விட்டு அவன் நகர்ந்ததும் அதே சிறு கட்டிலில் அவனோடு கூட அமர்ந்து மாதவியிடம் குசலம் விசாரித்தான்.

இரண்டு வார்த்தை பேசுமுன் காந்தம் பளபளவென்று துலக்கிய ஒரு வெண்கலப் பாத்திரத்தை, காபியில் ஊறப் போட்ட முறுக்குடன் கொண்டு வந்து கொடுத்தாள்.

ஒரு புன்னகைக் காட்டி அவளிடமிருந்து அதை வாங்கிக் கொண்டு மீண்டும் விருந்தினர் பக்கம் கதிரேசன் திரும்பி னான். ''அம்மா இதை உங்களுக்குத் தந்திருப்பார்கள் என்று தெரியும். ருசி பிடித்திருந்ததா?'' என்று பெரும்பாலும் மாத வியை நோக்கியே கேட்டான்.

''ம்... பிடித்தது. ஆனால் வெறும் முறுக்கே மிகவும் ருசிதான். அதை இந்தக் காபியில் போட்டுத்தான் சாப்பிட வேண்டும் என்று இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது'' என்றாள் மாதவி.

''வடைகூட அப்படித்தான். வெறும் வடையே ருசிதான். ஆனால், தயிரில் ஊறப்போட்டுத் தயிர் வடையாகச் சப்புக் கொட்டிச் சாப்பிடுவதில்லையா? அதுபோலத்தான் இதுவும்'' என்ற கதிரேசன் கூறவும் காந்தம் 'களுக்'கென நகைத்தாள்.

எல்லோர் முகத்திலுமே லேசான புன்னகை அரும்பியி ருந்தபோதும், காந்தத்தின் சிரிப்பு அவளை உசுப்பிவிட, 'அது வேறு. முறுக்கு ருசியாக இருந்தாலும் இங்கு காபி கொஞ்சம் சுவை மட்டம்தான். இரண்டையும் சேர்ப்பானேன் என்றேன்'' என்றாள் மாதவி விடாமல்.

''மாதவிக்குக் கருப்புக்கட்டிக் காபி பழக்கமில்லை'' என்று கதிரேசன் விளக்கம் கொடுத்தான்.

''ஓகோ! சர்க்கரைக்குப் பதிலாக கருப்பட்டியா? அது தான் சகிக்கவில்லை!'' என்று பட்டெனச் சொல்லி விட்டு மாதவி நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

விருந்தோம்பலில் வீட்டாருக்கு ஒரு கடமை உண்டென்றால் விருந்தினருக்கும் ஒரு கடமை உண்டுதானே?

வினாடிக்குள் தன்னைத் திருத்தியவளாய், "சாரி... நான்... நான் சொல்ல வந்தது... வந்து, சர்க்கரைக் காபி அளவுக்கு இந்தக் காபி சுவையில்லை... அதை விடச் சுவை குறைவு என்றுதான் சொல்ல நினைத்தேன். சகிக்கவில்லை என்று வாயில் வந்து விட்டது. சாரி... மன்னித்து விடுங்கள். நான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது" என்று மகாலட்சுமியிடம் மன்னிப்புக் கேட்டாள்.

"என்னம்மா நீ, இதற்கெல்லாம் போய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு. சர்க்கரைக் காபி பழகியவர்களுக்கு இந்தக் காபி முதலில் அப்படித்தான் தோன்றும்" என்று தாயார் பெருந்தன்மையுடன் பதிலிறுத்தார்.

அவளைத் தொடர்ந்து, "ஆனால் ஒன்று வேறு யாரும் இந்தக் காபியை என்ன குறை கூறினாலும் நீங்கள் குறை சொல்லவே கூடாது. தெரியுமா?" என்று கதிரேசன் மர்மமாய் உரைக்கவும், தலை சிலுப்பி "ஏனோ?" என்றாள் மாதவி மிடுக்காக.

புன்னகை விரிய தமிழ் அகராதி படித்திருக்கிறீர்களா? மாதவி என்பதன் பொருளாகக் குருக்கத்தி பனைவெல்லம் என்று எழுதியிருக்கிறது. பனைவெல்லம்தான் கருப்புக்கட்டி என்றான் கதிரேசன்.

"என்னது!"

"ஆமாம். என் புத்தக அறையில், கழகத் தமிழ்க் கையகராதி' என்று ஒரு புத்தகம் இருக்கிறது. நேரம் கிடைக்கிற போது படித்துப் பாருங்கள். அத்தோடு இங்கெல்லாம் பனை வெல்லம் என்றால் உயிர்! பதனீரைப் பக்குவப்படுத்தி கல்

கண்டு, உப்புக் கருப்பட்டி, சில்லுக்கருப்பட்டி, கூழ் பதனீர் என்று நிறையச் செய்வார்கள். பனைவெல்லம் பிடித்துப் போனவர்கள் சர்க்கரையைச் சீந்தமாட்டார்கள். அவல், பணி யாரம், களி எதற்கும் பனைவெல்லம்தான். நாள் முழுவதும் உழைத்துத் திரும்புகிறவர்களுக்கு வீட்டில் முதலில் ஒரு துண்டு பனைவெல்லமும் தண்ணீரும்தான் கொடுப்பார்கள்.

''அடேயப்பா! விட்டால் பனை வெல்லம் பற்றி ஒரு சொற்பொழிவே ஆற்றுவீர்கள் போல் இருக்கிறதே! ஆனால்... உங்கள் பேச்சைக் கேட்டதிலிருந்து எனக்கு ரொம்பவும் பயமாக இருக்கிறது!'' என்றாள் மாதவி மிரண்ட பாவனை யோடு.

''ஏனோ?''

எல்லோரும் வியப்பும் குறுகுறுப்புமாக நோக்க, ''யார் வீட்டிலாவது பனைவெல்லாம் இல்லை என்றால், மாதவி இரண்டு விரலைக் கொடு அம்மா'' என்று வந்து விட்டால்?''

அப்பாவியாய் அவள் கண்களை விரிக்க எல்லோருக் குமே சிரிப்பு வந்தது.

சிரிப்பினூடே, ''முடியுமா? அப்படி வருகிறவர்கள் என் னைத் தாண்டியல்லவா உன்னை... சாரி, உங்களை நெருங்க முடியும்!'' என்று கதிரேசன் ஒரு நேர்ப் பார்வையோடு கூறவும் மாதவிக்குச் சற்று நேரம் மூச்சடைத்துப் போயிற்று.

அவளை நெருங்குகிறவர்களைத் தடுக்க இந்தக் கதிரேச னுக்கு என்ன உரிமை இருக்கிறது?!

# 5

கதிரேசனின் நேர் பார்வையிலும் பேச்சிலுமாக மாதவி திகைத்து விழிக்கையில், காந்தம் குறுக்கிட்டு, ''ஊர்ப் பெரிய தனக்காரர்கள்! பெரியவர் ஊர்ப் பஞ்சாயத்துக்குத் தலைவர். பரம்பரை பரம்பரையாக இந்த ஊர் மக்களுக்கு எந்தத் துன்பமும் நேரமல் காத்து வரும் பழக்கத்தில் சின்னவர் சொல்கிறார். ஏதோ உங்கள் சொந்த வாழ்க்கையில் தலையிடு வதாக நினைத்து வருத்தப்படாதீர்கள்'' என்று விளக்கம் கொடுத்தாள்.

கதிரேசனின் பேச்சில் துணுக்குற்ற மனம் இந்த விளக்கத் தையும் ஏற்காமல் முரண்டியது. ''நான் இந்த ஊர்க்காரி அல்ல. எனவே என் நன்மை தீமைகளைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம்'' என்ற மாதவி சட்டென எழுந்தாள். ''இந்தக் குழந்தை படம் அழகாக இருக்கிறதே!'' என்று வராண்டாவின் சுவரில் தொங்கிய ஒரு படத்தைக் காட்டி அதன் அருகே சென்று, அதை ரசிப்பதுபோலப் பாவனை செய்தாள்.

கூடவே எழுந்து வந்து, ''இது கதிரேசு சின்னப் பிள்ளை யாக இருந்தபோது எடுத்த படம் மாதவி'' என்று மகாலட்சுமி விளக்கம் கூறவும், ஏண்டா இந்தப் பேச்சை எடுத்தோம் என்று இருந்தது அவளுக்கு.

காட்டிக் கொள்ளாமல், அடுத்திருந்த பெண் குழந்தைப் படத்துக்கு நகர்ந்தாள்.

''இது என் மூத்த மகள். இரண்டு வயதாய் இருக்கும் போது டவுனுக்குப் போய் எடுத்தது. இது அவள் மகள். அதே இரண்டு வயதில் அதே மாதிரி அலங்காரம் செய்து எடுத்

தோம். ஒரே மாதிரி இல்லை?... என்று பேரன் பேத்திகளின் சிறப்புகள் பற்றி மகாலட்சுமி ஆர்வம்மிகப் பேச பாட்டியின் முகத்திலிருந்த பெருமிதத்தையும் மகிழ்ச்சியையும் ரசித்தபடி மாதவி படங்களையும் பார்த்து முடித்தாள்.

''வீட்டைச் சுற்றிப் பார்க்கிறாயா, அம்மா?'' என்று மகாலட்சுமி கேட்க, ''இருட்டி விட்டதம்மா... இன்னொரு நாள் பகலில் சுற்றிக் காட்டுங்கள்'' என்றான் மைந்தன்.

''ஏன்? இருட்டில் எங்கேனும் பூதம் இருந்து பிடித்துக் கொள்ளுமா? பூதத்திற்குப் பயப்பட நான் ஒன்றும் பச்சைக் குழந்தை அல்லவே!'' என்றாள் மாதவி சற்று துடுக்காக.

அருகில் வந்து, ''இருளைப் பூதமாய் உருவகித்து மருள நீ பட்டிக்காடோ, பச்சைக் குழந்தையோ அல்ல என்பது எனக்கும் தெரியும்தான். மின் விளக்கு இருப்பதால் இங்கே எங்கேயும் இருளும் கிடையாதுதான். ஆனால் உள் அறைக ளில் சில சிறந்த பழைய சித்திரங்கள் இருக்கின்றன. அவற்றை விளக்கொளியில் பார்ப்பதை விடப் பகல் வெளிச்சத்தில் பார்த்தால் அவற்றின் அழகை முழுமையாக ரசிக்கலாம். அதற்காகத்தான் சொன்னேன்'' என்று கதிரேசன் தெளிவுபடுத் தவும் மீண்டும் மாதவி பேச்சிழந்து தடுமாறினாள்.

பட்டிக்காடு என்று தொடங்கியது தப்பு. நாவை இனிக் கொஞ்சம் அடக்கியே வைக்க வேண்டும். இவன் முன் அடிக்கடி குற்றவாளியாகத் தலை குனிவது சரியல்ல. ஆனால் நீ என்கிறானே...

மீண்டும் இங்கு வரவும் அவ்வளவாகப் பிடிக்காமல், அதை வாய் விட்டு சொல்லவும் தயங்கி மாதவி நிற்கையில், காந்தம் அவளது உதவிக்கு வந்தாள். ''அதுதான் எல்லா அறைகளிலும் இரண்டிரண்டு குழல் விளக்குப் போட்டிருக்கி றதே! விளக்கு வெளிச்சமும் நிறையத்தான் இருக்கிறது.

வந்ததற்கு இன்றே எல்லாம் பார்த்து முடித்து விட்டுப் போகட்டுமே! பாவம்! உடம்பு சரியில்லாதவர்கள்! வீணாக மீண்டும் மீண்டும் அலைவானேன்!'' என்றாள் மிகுந்த பரிவுடன்.

உள்ளூர வியப்புடன் கீழ்க் கண்ணால் காந்தத்தைக் கூர்ந்தாள் மாதவி. இந்தப் பெண்ணுக்கு மாதவி மீண்டும் இந்த வீட்டுக்கு வருவது பிடிக்கவில்லை! ஏன்?!

காந்தத்தின் நோக்கம் புரியாமல், ''உடம்பு சரியில்லாமல் முன்பு இருந்தது. அதுவும் நீ நினைக்கிற மாதிரி காய்ச்சல் எல்லாம் கிடையாது. பெட்ரோல் ஆவி, தூசி, நச்சுவாயு எதுவும் இல்லாத இந்த சுத்தமான காற்றில் காலை, மாலை இரண்டு வேளை நடந்தால் அதிலேயே உடம்பு தேறிவிடும். நம் வீட்டையே எல்லையாக வைத்து, தினம் இரண்டு தரம் வந்து போங்கள் மாதவி. இப்போதைக்குப் பலவீனமாய் உணர்ந்தால் சொல்லி அனுப்புங்கள். நான் ஜீப் எடுத்து வந்து அழைத்து வருகிறேன்'' என்று சற்றுத் தீர்மானமான குரலில் கூறவும், காந்தத்தின் வாயும் அடைத்துப் போனது.

அதற்குள், அதுவரை கிருபாகரனோடு ஏதோ பேச்சில் ஈடுபட்டிருந்த மகாலட்சுமி, மகனை அழைத்தாள். ''கதிரேசு, நம் முத்துக் கருப்பன் மனைவியை நாளையிலிருந்து தம்பி வீட்டு வேலைக்குப் போகச் சொல்லி விடப்பா. அவள் கொஞ்சம் விதரணையாகச் சொல்லுகிறபடி வேலை செய்வாள். அவள் திருமணத்துக்கு முன்னால் நம் வீட்டில் நாலு ஆண்டு நின்றதால் சமையல் கூடப் பரவாயில்லாமல் செய்வாள். பண்ணைக் கூலியே கொடுத்து விடு. பகல் முழுவதும் மாதவிக்குத் துணைக்குத் துணையாகவும் இருந்து, வேலையையும் முடித்தால் என்றால் மாலையில் தம்பி வீடு வந்ததும் அவளும் வீட்டுக்குக் கிளம்பி விடலாம். இன்றிரவே சொல்லி

அனுப்புகிறாயா? அல்லது காலையில் என்னை வந்து பார்க்கச் சொல்லு. நான் விவரம் பேசி அனுப்புகிறேன்'' என்றார்.

''நல்ல ஏற்பாடு அம்மா. காந்தம் நீ போய்ச் சுடலைமாடனை அழைத்து வா'' என்று ஏவிவிட்டு, அண்ணன் - தங்கையிடம் திரும்பினான்., ''முத்துக் கருப்பனுடைய மனைவி பெயர் வள்ளி. நல்ல பெண். ஏவிய வேலையை முகம் சுளிக்காமல் செய்வாள். ஆனால் மாதவிக்குப் பகலில் பொழுது போவதுதான் கொஞ்சம் சிரமமாய் இருக்கும். வள்ளியிடம் பல்லாங்குழி, தாயம், பாண்டியாட்டம், சுட்டியாங்கல் எல்லாம் படித்துக் கொள்ளுங்கள், பொழுது போகும்'' என்று கதிரேசன் முறுவலித்தான்.

தன்னையறியாமல் அந்த முறுவலை பிரதிபலித்தபடி, ''பல்லாங்குழியும் பாண்டியுமா? இங்கிருந்து கிளம்புமுன் எனக்குச் சரியான 'பூம்பொழில்' வண்ணம் பூசி விடுவீர்கள் போல இருக்கிறதே!'' என்று நகைத்தாள் அவள்.

ஏற்கனவே சிறு கவலையுடன் மண்டையைக் குழப்பிக் கொண்டிருந்த வேலையாள் பிரச்சினை தீர்ந்த நிம்மதி அவளுக்கு!

''கிளம்புவதா? விட்டால்தானே?'' என்று கதிரேசன் மீண்டும் ஒரு மாதிரிக் குரலில் பூடகமாகப் பேசவும் மறுபடியும் மாதவிக்கு மூச்சடைத்தது.

நல்லவேளையாக காந்தம் தேடிச் சென்ற சுடலைமாடன் அருகிலேயே எங்கோ நின்று கொண்டிருந்தான் போலும். சென்ற விரைவிலயே காந்தம் அவனுடன் திரும்பி விட, கதிரேசன் அவனிடம் திரும்பிப் பேசலானான்.

சுடலை மாடனிடம் சொல்ல வேண்டியதைக் கதிரேசன் கூறி முடிக்கவும், உணவு தயாராகி விட்டதாக ஆள் வந்து சொல்லவே எல்லோரும் உணவருந்தச் சென்றனர்.

மாதவி எதிர்பார்ப்பதற்கு நேர் மாறாக உணவும், உணவ ருந்தும் முறையும் இருந்தன.

காலையில் சக்கரவர்த்தி போலவும், பகலில் இளவரசன் போலவும், இரவில் பிச்சைக்காரன் போலவும் உண்ண வேண் டும் என்பதற்கிணங்க, இரவில் உண்டி சுருக்கிப் பழகியவள் மாதவி.

பண்ணை வீட்டு மதிய உணவை நினைத்து, அதற்கு ஒப்பான ஒன்றை இரவிலும் கவலையுடன் எதிர் நோக்கியவ ளுக்கு, இலையில் படைக்கப்பட்ட அதிக எண்ணெயிடாத சிறு தோசைகளையும், சட்டினி சாம்பாரையும் பார்க்கவும் அப்பாடி என்றிருந்தது.

அதுபோலவே, உள்ளறை ஒன்றில் கிடந்த சாப்பாட்டு மேசை, நாற்காலிகளும் அவளை ஆச்சரியப்பட வைத்தன.

வரவேற்பு முற்றத்தில் கிடந்த குறுங் கட்டில்களுக்குப் பொருத்தமாகத் தரையில் விரிக்கப்பட்ட பந்திப் பாயையும், தலைவாழை இலையையும் எதிர்பார்த்து வந்தவளின் விழி கள், மேஜை நாற்காலிகளைக் கண்டு விரிந்தன.

அவளது மனதைப் படித்தவன் போல "அம்மாவுக்கு கொஞ்சம் மூட்டு வலி உண்டு. அப்பாவும் நானும் தரையில் உட்கார, அம்மா மட்டுமாக மேலே உட்கார்ந்து சாப்பிட மாட்டார்கள். எனவே எல்லோரும் மேசைக்கு மாறி விட்டோம்" என்று கதிரேசன் கூறவும், மாதவி துணுக்குற்றாள்.

இவன் என்ன, அவள் நினைப்பதை எல்லாமே ஊகித்து விடுகிறான்! ஒன்று அவள் முகம், 'அடுத்தது காட்டும் பளிங்கு' போல மனம் எண்ணுவதை எல்லாம் அப்படியே வெளிக் காட்டியிருக்க வேண்டும். அல்லது, அந்தக் கதிரேசன் அவ ளையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்க வேண்டும்.

அன்றைய நிலையில் இரண்டுமே அவளுக்குப் பிடிக்க வில்லை!

உணவு பரிமாறும் போதும் எல்லாம் காந்தம்தான்.

உள்ளே சென்று சூடான தோசைகளை வார்க்க, வார்க்க எடுத்து வருவதும், இலை பார்த்து சட்டினி, சாம்பார் ஊற்றுவ தும் பம்பரமாகச் சுழன்றாள். மகாலட்சுமி முன்பே சொல்லி வைத்திருந்தாரோ என்னவோ, மாதவிக்கு மட்டும் ஒரு கிண்ணத்தில் தோசைகளையிட்டுச் சட்னி சாம்பார் ஊற்றி மேசைக் கரண்டியும் வைத்திருந்தது. அந்தச் சிறு தோசைகளில் இரண்டோடு மாதவி தன் உணவை முடித்துக் கொள்ளவும், "ஏன், குண்டாகி விடுவோம் என்று பயமாக இருக்கிறதா? பட்டணத்துப் பெண்கள் எல்லோரும் பட்டினி கிடந்து மெலிந்து இப்படிச் சீப்பு மாதிரி இருப்பார்கள் என்றார்கள். அது உண்மைதான் போல் இருக்கிறது!" என்று காந்தம் தன் விழிகளை விரித்து வியந்தாள்.

கதிரேசன் லேசாகக் கண்ணடிப்பது போல நோக்க, "மாதவி, பட்டினியெல்லாம் கிடப்பதில்லை, காந்தம். இப் போது உடம்பு சரியில்லாமல் கிடந்ததால் கொஞ்சம் மெலி வாக இருக்கிறாள். அவ்வளவுதான். ஆனால், இரவில் எப் போதுமே அவள் அதிகம் உண்பதில்லை" என்று கிருபாகரன் உரைத்தான்.

அவனைப் பார்த்து "அப்படியா!?" என்று இருமுறை இமைகளைக் கொட்டி விட்டு, "இதை நீங்களாவது சாப்பிடுங் களேன்!" என்று கெஞ்சலாகக் கூறித் தோசையைக் காந்தம் அவனது இலையில் இடவும், அதை உண்பதில் கிருபாகரன் முனைந்தான்.

கை கழுவ நீர் மொண்டு கொடுத்து, டவலை நீட்டி. கடைசிவரை எல்லாப் பணிவிடைகளையும் காந்தம் செவ் வனே செய்து முடித்தாள்.

ஒரு கனிவுடன் அவளை நோக்கி, ''காந்தம் இருப்பதால், நான் கவலையற்று இருக்க முடிகிறது. இவள் மணமாகி வேறு வீடு சென்று விட்டால், இங்கே நான்தான் மிகவும் சிரமப்படு வேன்'' என்று மகாலட்சுமி பாராட்டிப் பேசினாள்.

மெய்யாகவே பாராட்டுதான். ஆனால் காந்தத்தின் முகம் கணத்தில் மாறி விட்டது. கையில் இருந்ததைக் கீழே வைத்து விட்டு ஓடோடியும் வந்து மகாலட்சுமியின் காலடியில் மண்டி யிட்டு, விழிகளில் கண்ணீர் திரண்டு வழிய, ''நான் இந்த வீட்டை விட்டு ஒரு நாளும் வேறிடம் போகவே மாட்டேன், அம்மா! இந்த வீடுதான் எப்போதும் என் வீடு!'' என்றாள் அழுகை கலந்த, ஆனால் மிகவும் உறுதியான குரலில்.

''என்னம்மா, சின்னப் பெண் அவள். அவளிடம் போய்த் திருமணம், அது இது என்று கண்டது பேசி மிரள வைக்கிறீர்களே. போகட்டும் இரண்டு ஆண்டு கழித்து இந்தப் பேச்சை எடுங்கள்'' என்று கதிரேசன் கூறவும் காந்தத்தின் முகம் மீண்டும் மலர்ந்தது.

கண்ணைத் துடைத்துக் கொண்டு துள்ளிக் குதித்து அவள் எழவும், ''நல்ல பெண்ணடி நீ! இந்தச் சிறு வயசிலேயே நன்றாக வேலை செய்கிறாய் என்று பாராட்டினால் அது புரியாமல் என்ன அழுகை? இந்த மகாலட்சுமி பெண் வளர்த்திருக்கும் லட்சணத்தைப் பார் என்று நாலுபேர் ஏசுவ தற்கா?

''வினாடிக்குள் அழுது எல்லோரையும் ஒரு கலக்கு கலக்கி விட்டாயே! போ. போய் முகத்தைக் கழுவிக் கொண்டு, குங்குமம் எடுத்து வா'' என்று மகாலட்சுமி ஒரு

செல்லக் கண்டிப்புடன் பேசி அவளை உள்ளே அனுப்பி வைத்தார்.

காந்தம் குங்குமத்தை எடுத்து வருமுன் இவரும் உள்ளே சென்று ஒரு தட்டோடு வந்தார்.

தட்டில் மஞ்சள், பழத்தோடு ஒரு பட்டுச் சேலையும் இருக்கக் காணவும் மாதவி தன்னையறியாமல் இரண்டு எட்டு பின்னடைந்தாள். "என்னம்மா இது?!"

"உனக்குத்தானம்மா. வா, எடுத்துக் கொள். காந்தம் குங்குமம் எங்கேடி?" என்று மகாலட்சுமி குரல் கொடுக்க, "இதோ வந்து விட்டேன்" என்ற பதிலுடன் வந்த காந்தமும் சேலைத் தட்டைக் கண்டு சற்றுத் தயங்கி நின்றாள்.

"பட்டுச் சேலையெல்லாம் வேண்டாம்மா... வெறும் குங்குமம் மட்டும் கொடுங்கள்" என்றாள் மாதவி கொஞ்சம் பிடிவாதமான குரலில்.

"மறுத்துப் பேசாதேம்மா. வரப்போகிற மருமகளுக்காகப் போகிற இடங்களில் இப்படி அழகாய்க் கண்ணில் பட்டதை வாங்கி வருவதுதான். தம்பி கொஞ்சமேனும் பிடி கொடுத்தால்தானே? ஏதோ ஒன்றேனும் பலிக்காதா என்று வருகிற பெண்களுக்குக் கொடுத்துப் பார்க்கிறேன். தயவு பண்ணி வாங்கிக் கொள், கண்ணு" என்று மகாலட்சுமி கெஞ்சுதலாக வற்புறுத்த, "அம்மா அவ்வளவு சொல்கிறார்கள், வாங்கிக் கொள், மாது" என்று கிருபாகரனும் அவர் பக்கம் பேசினான்.

"அது பட்டு, அண்ணா. ஏதாவது நூல் சேலை என்றாலும் பரவாயில்லை! என்று அடிக் குரலில் முணுமுணுத்தாள் மாதவி.

"சேலை சேலைதானே? இதில் நூல், பட்டு என்று என்ன பெரிய பாகுபாடு? ஓகோ! பட்டை வாங்கிக் கொண்டால்,

உடனே கட்டச் சொல்லி பிடித்து ஒருவன் பக்கத்தில் மனையில் உட்கார வைத்து விடுவார்கள் என்று எண்ணி விட்டீர்களா?'' என்றான் கதிரேசன் கிண்டலாக.

அப்படி என்னோடு உட்கார இனிமேல்தான் ஒருவன் பிறந்து வரவேண்டும்!'' என்றாள் மாதவி அலட்சியமாக.

''இனிப் பிறந்து வருவதா? பிறந்து, வளர்ந்து... அவன் கல்யாண வயது வருமுன் உனக்கு நாற்பதுக்கு மேல் ஆகிவிடுமே, பரவாயில்லையா?'' என்று கதிரேசன் சீரியசாகக் கேட்கவும் மற்றவர்கள் சிரிக்க, மாதவிக்கும் தன்னை மீறி முறுவல் வந்தது.

''ஆகா! இது அழகு! இந்தச் சிரிப்புடனேயே சென்று, அம்மாவிடம் தட்டை வாங்கிக் கொண்டால் அது இன்னமும் பாந்தமாக இருக்கும்! மாதவி, அம்மா எப்போதுமே இப்படிக் கொடுப்பது - முதல் தடவையாக வரும் பெண்களுக்குச் சேலை கொடுப்பது பழக்கம்தான். என்னைப் பற்றிச் சொன்னதெல்லாம் சும்மா கதை. எனவே, இதில் ஏதும் உள் அர்த்தம் இருக்குமோ என்று பயப்படாமல் சேலையை வாங்கிக் கொள்ளலாம்'' என்று அவன் சீண்டும் குரலில் தொடர்ந்து கூறவும், மாதவி வெடுக்கென நிமிர்ந்தாள்.

''எனக்கு என்ன பயம்?'' என்று ஒரு சிலுப்போடு அவனை நோக்கியவள், கதிரேசனின் விழிகளில் இருந்த சவாலைக் காணவும் பிரமித்தாள்.

பார்வையை மீட்க முடியாமல் மாதவி நின்றது ஒருசில விநாடிக் காலமாகத்தான் இருக்க வேண்டும். டப்பென்று குங்குமச் சிமிழ் கீழே விழுந்த சத்தம் இருவரின் கட்டையும் நீக்கி சுற்றுப்புறத்தை உணர்த்தியது.

கொட்டிக் கிடந்த குங்குமத்தைக் காணவும், ''இப்போது தான் உன் வேலைத் திறனை அம்மா புகழ்ந்தார்கள். அதற்குள் இப்படிப் பண்ணி விட்டாயே!'' என்றான் கதிரேசன் ஒரு மாதிரிக் குரலில்.

''கை தவறியிருக்கும், பாவம்!'' என்று காந்தத்தைத் தாங்கிப் பேசினான் கிருபாகரன்.

''அதற்கென்ன? குங்குமம் கொட்டினால் அது நல்ல சகுனம்தான். அந்த வீட்டில் விரைவிலேயே திருமணம் நடக்கும் என்பார்கள். இதன் பலனாகவேனும் என் ஆசை நிறைவேறுகிறதா என்று பார்ப்போம்'' என்று முறுவலித்தபடி சிமிழை எடுத்து மீதமிருந்த குங்குமத்தோடு தட்டில் வைத்து மாதவியிடம் மகாலட்சுமி நீட்டினாள்.

பிரமை முழுமையாகத் தெளிந்திராததாலோ என்னவோ, மறு பேச்சின்றிக் கைகளை நீட்டி மாதவி தட்டை வாங்கிக் கொண்டாள்.

எவ்வளவோ மறுத்தும் கேளாமல், அண்ணனையும் தங்கையையும் வீடுவரை கொண்டு விடுவதற்காக ஜீப்பை எடுத்து வரச் சென்றான் கதிரேசன்.

மகாலட்சுமியும், கிருபாகரனும் இலகுவாக ஏதோ பேசிக் கொண்டிருக்க, காந்தம் ஓசைப்படாமல் மாதவியின் அருகே வந்தாள். ''சின்னவர் இப்போதைக்குத் திருமணத்தை மறுத்து ஒத்திப் போடும் காரணம் எனக்குத் தெரியுமே!'' என்றபோது அவளது கன்னங்கள் சிவந்து கண்கள் பளபளத்தன.

சற்று வியப்புடன் மாதவி நோக்க, சற்று முன் குங்குமச் சிமிழைக் கைதவற விட்டுக் கண்கலங்கி நின்ற அந்தப் பெண் முகத்தில் அந்த வருத்தத்தின் அறிகுறியே இல்லாமல் மலர்ந்து விகசிக்க மர்மமான ஒரு கண்சிமிட்டலுடன் உள்ளே ஓடி மறைந்தாள்!

# 6

திரும்பிச் செல்கையில் கிருபாகரனும் கதிரேசனும், பொட்டாஷ், யூரியா என்று ஏதோ பேசிக் கொண்டிருக்க, மாதவி மவுனத்தில் ஆழ்ந்திருந்தாள்.

வாய் ஓய்வு கொண்டிருந்ததே தவிர, அவளது மனம் வெகு மும்முரமாய் வேலை செய்து கொண்டிருந்தது.

எண்ணம் எல்லாம் அந்தப் பெண் காந்தத்தைப் பற்றியது தான். அவள் எப்படிப்பட்டவள்? பழுதையா, பாம்பா? சின்னப் பெண்ணா, அல்லது பிஞ்சிலே பழுத்தவளா?

துள்ளலும் துடிப்பும், ஓட்டமும் வேகமும், இம்மெனு முன் சுரக்கும் கண்ணீரும் கடகடவென்ற சிரிப்பும் அவளை முதிராத இளம் மொட்டாகக் காட்டின.

ஆனால், கிருபாகரனிடம் நெளித்ததும், உரிமையாக 'சின்னவர்' என்று பூரிப்பதும், அப்பாவியாய்க் காட்டிக் கொண்டே குத்துவதும் அனுபவ முதிர்ச்சியைக் காட்டின.

கிளம்பும்போது, கண்ணால் துழாவிய கிருபாவுக்கு, அவள், உள்ளே மறைந்ததும் மறையாமலுமாக நின்று, ஜாடை காட்டி வழி அனுப்பியதும் அப்படி ஒன்றும் சின்னஞ்சிறுசின் செயலாக மாதவிக்குப் படவில்லை.

அண்ணனின் பார்வையைத் தொடர்ந்து கண்களைத் திருப்பியிராவிட்டால், காந்தத்தின் விழிக் குறிப்பு, உடல் நெளிப்பு, விரல் அசைவுகளைப் பற்றி யார் சொல்லியிருந்தா லும் மாதவி நம்பியிருக்கவே மாட்டாள்.

இந்தப் பெண் ஒருபுறம் கிருபாகரனிடமும் மறுபுறம் கதிரேசனிடமும் இரட்டை வேடம் போடுகிறாளா?

அல்லது, கிருபாகரனிடம் மனதை இழந்து விட்ட இந்தச் சிறு பெண், கதிரேசனின் பசப்பிலும், பணத்திலும் மயங்கி, இருதலைக் கொள்ளி எறும்பாய்த் தவிக்கிறாளா?

கதிரேசன் எல்லாமே கற்றுத் தெளிந்தவன்தான். பசப்பக் கூடியவன்தான். இவ்வளவு காலமாக அவன் பழகிய முறையைப் பார்த்தால்...

சட்டெனத் தூக்கி வாரிப்போட, மாதவி நிமிர்ந்து உட்கார்ந்தாள். கதிரேசனோடு அவள் பழகத் தொடங்கி நாலைந்து நாட்கள்கூட ஆகவில்லையே! அன்று காலையில்தானே முதல் முறையாக அவள் அவனைப் பார்த்தாள். அதற்குள்ளாக எவ்வளவோ காலம் பழகினாற்போல இது என்ன மாயை?

மாயை என்ன மாயை? எல்லாம் இந்தக் கதிரேசனால் தோற்றுவிக்கப்பட்ட மாயைதான். என்னவோ நெருங்கிய உறவினன் போல உரிமையோடு அவன் பேசிப் பழகவும், அதுவே உண்மைபோலத் தோன்றிவிட்டது.

தொடக்கமே இப்படி என்றால், போகப் போக இவன் எவ்வளவு உரிமைகள் எடுத்துக் கொள்ளக்கூடும்? ஆளையே விழுங்கிச் சாப்பிட்டு விடுவான்போல இருக்கிறதே!

ஏற்கனவே அண்ணன் இவனிடம் சரணாகதி! அப்புறம், அந்தப் பெண் காந்தம்! பாவம்! சின்னவர், சின்னவர் என்று உயிரை விடுகிறது! அவளிடம் என்னென்ன சொல்லி வைத்திருக்கிறானோ?

நல்லவேளை! சமயத்தில் விழிப்பு வந்ததே என்று உள்ளூரச் சற்று நிம்மதியடைந்தாள் மாதவி. ஆனால், அவள் ஏமாந்தது — அது மிகவும் கொஞ்சமே என்றாலும், அது பெரிய தப்புதானே?' வெறும் ஐந்தறிவுடைய பூனை கூட ஒருதரம் சூடுபட்டால் மீண்டும் சூடுபடாமல் மிகவும் கவனத்தோடு இருக்குமாம். ஆனால், எல்லாம் ஒரு தரம் அனுப

வித்து முடித்துவிட்ட பிறகும், ஆறறிவு படைத்த மாதவிக்கு அந்த அளவு அறிவு இல்லையே!

இனியேனும் இவனிடம் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்று மாதவி முடிவு செய்தாள்.

அதற்கேற்ப, வீட்டின் முன் ஜீப் நின்றதும், மேற்கொண்டு எந்தப் பேச்சுவார்த்தைக்கும் இடமில்லாதபடி, ''எனக்குக் கொஞ்சம் களைப்பாக இருக்கிறதண்ணா. நான் தூங்கப் போகிறேன்' என்றவள், பொதுவான ஒரு 'குட் நைட்'டுடன் வீட்டினுள் சென்று, அவளது அறைக்குள்ளும் புகுந்து, கதவைச் சாத்தித் தாளிட்டாள்.

அதற்குமேல் கதிரேசனும் அதிக நேரம் நிற்கவில்லை. ''போய் உங்கள் தங்கையைக் கவனியுங்கள், கிருபா. நாளை சந்திப்போமே! வரட்டுமா?'' என்றவன் உடனேயே ஜீப்பைக் கிளப்பிக் கொண்டு சென்றுவிட்டான்.

கவலையுடன் உள்ளே வந்த கிருபாகரன், மாதவி கையில் இரவு உடையுடன் குளியலறையை நோக்கிச் செல்வதைக் கண்டு திகைத்தான்.

''என்னம்மா, அசதி என்று விட்டு, இப்போது போய்க் குளிக்கலாமா? போ. போய்ப் பேசாமல் படு'' என்று அவளைத் தடுக்க முயன்றான்.

ஆனால், ''உடம்பு கழுவினாலே பாதி அசதி பறந்து போய்விடும்'' என்று கூறி, நில்லாமலே சென்று குளியலறைக்குள் புகுந்து கொண்டாள் தங்கை.

'பிடிவாதம்!' என்று செல்லமாக முணுமுணுத்தவாறே மாதவியைப் பின்தொடர்ந்து குளியலறைக் கதவைத் தட்டி, ''அதிக நேரம் நீரில் அளையாமல் சீக்கிரம் வந்துவிடும்மா'' என்று கேட்டுக் கொண்டான் அந்த அண்ணன்.

கிளுக்கிய சிரிப்பொன்றே பதிலாகக் கிடைத்தது அவனுக்கு.

நன்றாகக் குளித்துவிட்டு அவள் திரும்பி வந்தபோது, சூடாக்கிய பாலைத் தங்கைக்கும் தனக்குமாகக் கப்புகளில் ஊற்றி வைத்துக் கொண்டு கிருபாகரன் காத்திருந்தான்.

''நல்லவேளை, தலையையாவது நனைக்காமல் இருந்தாயே! இந்தா குடி!'' என்று பாலை எடுத்து நீட்டிய அண்ணனின் பாசத்தில் மாதவியின் மனம் உருகியது.

நன்றாயிருந்த கையில் பாலை வாங்கிக் கொண்டு, ''குளித்ததே அசதியெல்லாம் போய் விட்டது பாருங்கள். அதற்காகத்தான் குளித்தேன். நீயும் குளித்துப் பார்! நன்றாக இருக்கும்!'' என்று ஆசை காட்டினாள் மாதவி.

''எனக்கு மாலையில் குளித்ததே இப்போதும் நன்றாகவே இருக்கிறது!'' என்று கூறி கிருபாகரன் பாலை அருந்தலானான்.

கிருபாகரன் முகத்தில் இருந்த 'களை'யும், இளம் புன்னகையும், எதையும் பாராத பார்வையும் அவன் மனம் செல்லும் திசையை அவன் தங்கைக்கு உணர்த்திவிட, மாதவி மெல்லப் பேச்சை எடுத்தாள். ''பண்ணை வீடு ஓர் அழகான கிராமத்து வீடு. இல்லையாண்ணா?... அண்ணா, அந்தக் காந்தம் என்னண்ணா, திடுமென அப்படி அழுதுவிட்டாள்? அதுவும் நாம் எல்லோரும் இருக்கும்போதே அழவும், எனக்கு எப்படியோ இருந்தது, அண்ணா'' என்றாள்.

''கிராமத்துப் பெண் அல்லவாம்மா, அழுகையோ, சிரிப்போ அப்படியே வெளிப்படையாகக் காட்டி விடுகிறாள். உள்ளே இருப்பதை மறைத்து, வேறொன்றாகக் காட்டிப் பொய் நாடகம் போடும் நம் பட்டணத்து நாகரீகம் இன்னமும் தெரியவில்லை!'' என்று முறுவலித்தான் அண்ணன்.

இவன், தன்னைச் சொல்கிறானோ என்று சற்றுத் துணுக் குற்று, இராது என்று முடிவுகட்டி, பழைய பேச்சை விட்டுவி டாமல் மீண்டும் தொடங்கினாள் மாதவி. "அண்ணா, காந்தம் பேசியதை நீ கேட்டாயோ? அவள் அந்த வீட்டை விட்டுப் போகவே மாட்டாளாமே!"

மீண்டும் கிருபாகரன் முறுவலித்தான். "சிறு வயதிலி ருந்து வளர்க்கிறார்களே, அந்த நன்றிக்கடன் இருக்குமல் லவா? அத்தோடு, அவர்களது ஆதரவில் வளர்கிறவள்; வேறு என்ன சொல்ல முடியும்? மிகவும் சின்ன வயது வேறு!"

மாதவி அயர்ந்து போனாள்! அந்தக் காந்தத்துக்காக அண்ணன் எவ்வளவு வக்காலத்து வாங்குகிறான்! தன் பேச் சில் உள்ள முரண்கூட அவனுக்குப் புலப்படவில்லையே! இவனிடம் போய்க் காந்தத்தைப் பற்றிய அவளது ஐயங்களை எல்லாம் சொன்னால், அவ்வளவுதான்! அம்மா, தாயே! நீ வந்த வழியே பார்த்துப் போய் விடம்மா என்று திருப்பி அனுப்பினாலும் அனுப்பி விடுவான். இல்லை... அப்படி அனுப்பமாட்டான். அண்ணனின் பாசமானது அதற்கு இடம் தராது. ஆனால் மிகவும் வருத்தப்படுவான்! அவளது சந்தே கங்கள் தவறு என்பதற்கு ஆயிரம் ஆதாரங்கள் காட்டி, வாதாடி, அவளை ஒப்புக் கொள்ள வைக்க முயற்சிப்பான்; பின்னாளில், காந்தம் பற்றிய மாதவியின் ஒவ்வொரு நடவடிக் கையையும் சந்தேகக் கண்ணோடேயே பார்ப்பான்.

இதற்கெல்லாம் இப்போது என்ன அவசியம் வந்தது? ஒன்றுமே இல்லை.

அத்தோடு, மாதவியுடையதும் வெறும் சந்தேகம்தானே? உறுதிபடுத்தப்பட்ட உண்மைகள் அல்லவே? அத்தோடு காந்த மும் மிகவும் சின்னப் பெண்! செய்வதைப் புரிந்துதான் செய்கின்றாள் என்றுகூடச் சொல்ல முடியாது.

கொஞ்சகாலம் விழிப்போடு கவனித்துக் கொண்டிருந் தால் உண்மை புலப்பட்டு விட்டுப் போகிறது. அதன்பின் அடுத்து என்ன செய்வது என்று யோசிக்கலாம்.

கிருபாகரனோடு சற்று நேரம் சாதாரணமாகப் பேசிக் கொண்டு இருந்துவிட்டு, மாதவி தூங்கச் சென்றாள்.

விளக்கணைத்து விட்டுப் படுத்ததுமே, கொஞ்ச நாட்க ளாக அவ்வப்போது அவளை அலைக்கழிக்கும் வேரறுந்த நிலை மீண்டும் அவளைப் பற்றிக் கொண்டது. திடம், தெம்பு எல்லாவற்றையும் இழந்து, அண்ணன் இருக்கிறான் என்று வந்தால், அங்கேயும் பிரச்சினையா என்று மனம் அல்லாடி யது. அண்ணன் காட்டிய பாசம் ஆறுதல் தரவில்லை. மாறாக, நிச்சயம் என்று எண்ணியதெல்லாம் நிலையாது போய்விட் டது போல இந்த அன்பும் அவளுக்கு இல்லாதுதான் போய்வி டப் போகிறது என்ற அச்சம் அவளைப் பிடித்து ஆட்டியது.

வெகுநேரம் தவித்துவிட்டு, ஒருவழியாகக் கண்ண யர்ந்து அப்போதும் பலவிதக் கொடிய கனவுகளால் தொல் லைப்பட்டு அரைகுறையாக உறங்கிக் காலையில் எழுந்த போது, உண்மையாகவே அவள் மிகவும் சோர்ந்து போயிருந் தாள்.

பல் துலக்கி விட்டு வந்து தங்கையின் முகத்தைப் பார்த்த கிருபாகரனும் பதறிப் போனான். ''சே! என் தப்பும்மா. நேற்று முழுவதும் உன்னை ஓய்வெடுக்க வைத்திருக்க வேண்டும். நடத்தி வேறு கூட்டிக் கொண்டு போனேனே; என் புத்தியைச் செருப்பால் அடிக்க வேண்டும். பண்ணை வீட்டம்மா, அவர் கள் வந்தாலே தொல்லை என்று ஒதுங்கியிருக்க, நான் உன்னை நடக்க வைத்து மடத்தனம் பண்ணி விட்டேனே'' என்று புலம்பினான்.

உடன்பிறந்தோனின் பரிவும் தவிப்பும் மிகுந்த ஆறுத லைத் தர, ''எனக்கு ஒன்றும் இல்லை, அண்ணா. புது இடம்

என்பதால் தூக்கம் சரியாக வரவில்லை. அவ்வளவுதான். இன்று பகலில் கொஞ்சம் தூங்கினால் எல்லாம் சரியாகி விடும்'' என்று அவனைச் சமாதானப்படுத்த முயன்றாள் மாதவி.

''இல்லையம்மா. எனக்குத்தான் பேராசை. திருச்சியை விட்டு அழைத்து வந்தாலே போதும், பழைய மாதிரி மாறி விடுவாய் என்று நினைத்து விட்டேன். உடம்பும் மனதும் மெல்ல மெல்லத்தான் தேறவேண்டும் என்பதை மறந்து விட்டேன்...'' என்று மீண்டும் வேதனைப்பட்டான்.

சில வினாடிகள் தரையை நோக்கி அமர்ந்திருந்து விட்டு, மாதவி மெல்ல நிமிர்ந்தாள். ''அண்ணா, ஒன்று சொன்னால் செய்கிறாயா? இந்தத் திருச்சி... அங்கு நடந்தது எதையும் மறந்தும்கூட நீ என் முன் பேசக்கூடாது. சரிதானா?'' என்று அண்ணனிடம் வாக்குக் கேட்டாள்.

சற்றுத் திகைத்த கிருபாகரனின் முகம் உடனே தெளிவுற்றது. ''அது சரிதான் மாதும்மா. மறக்க வேண்டியதை நானே நினைவுபடுத்தி விட்டேன் பார்! என்னவோ, நம் தலைவிதி! நல்லது நடக்கக் கொடுத்து வைக்கவில்லை...''

''அண்ணா, ப்ளீஸ்!''

''சரிம்மா. இனி இல்லை. ஒரு வார்த்தை இனி அதுபற்றிப் பேசுகிறேனா பார். இப்போது வந்து பல் தேய்க்கிறாயா? அல்லது இங்கேயே பேஸ்ட்டும் தண்ணீரும் கொண்டு வந்து தரட்டுமா!... நான் இன்றைக்கும் வேலைக்கு மட்டம் போட்டு விடப் போகிறேன். நீ இப்படி இருக்கும்போது உன்னைத் தனியே விட்டு விட்டு என்னால் போக முடியாது.''

அண்ணனின் அன்பு மனதை மிகவும் இதமாய் வருட எத்தனையோ காயங்கள் ஆறிவிட்டாற்போல மாதவி உணர்ந்தாள். திருச்சி வாழ்வு பற்றிய பேச்சு இனி வராது என்ற நிம்மதி வேறு.

எல்லாமாக மனதைத் திடப்படுத்த, "எனக்கு ஒன்றும் இல்லை. உண்மையாகவே எனக்கு உதவியாக இருக்க நினைத்தால், மரியாதையாக வேலைக்குப் போ, அண்ணா. வீட்டில் இருந்தால் ஏதாவது லொடலொடத்து என் தூக்கத் தைக் கெடுப்பாய்..." என்று ஏதேதோ சொல்லிக் கிருபாகர னைக் கிளப்பினாள்.

கிருபாகரன் வேலைக்குக் கிளம்பும் வேளையில் கதிரே சன் வந்து சேர்ந்தான்.

முந்தைய தினம் செய்த முடிவின்படி, வெறும் முகமனு டன் மாதவி விலகிப் போய் விட்டாள்.

அவனும் நின்று, ஒட்டி, வெட்டி என்று அவளோடு பேசிக் கொண்டிராமல், நண்பனை அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

கிளம்புமுன் வள்ளியை அழைத்து இரண்டு வார்த்தை பேசினான்.

அவள் நாணிக் கோணி நிற்பது, லேசாகத் திறந்திருந்த கதவின் வழியே மாதவிக்குத் தெரிந்தது.

எல்லாப் பெண்களுமே, இவனது கைக்குள்தானா என்று உள்ளூரச் சிறு எரிச்சல் மூண்டது. விட்டால் நிமிடத்திற்கு ஒருமுறை காலில் விழுந்து சேவிப்பார்கள் போல் இருக்கிறதே!

அனாவசியமான வம்பளப்புகள் இன்றி சுத்தமான தோற் றத்துடன், தன் வேலையைக் கச்சிதமாகச் செய்த வள்ளியை மாதவிக்குப் பிடித்துப் போனது.

காலைச் சிற்றுண்டியாக அவள் செய்து வைத்த இடியாப் பத்தைச் சர்க்கரை, தேங்காய்ப் பூ தூவிச் சாப்பிட்டுவிட்டு, அண்ணனிடம் சொன்னது போல, மெய்யாகவே மாதவி வெகுநேரம் உறங்கி விட்டாள்.

ஏதோ பேச்சு சத்தம் கேட்டு அவள் விழித்தபோது, களைப்பும் சோர்வும் பெரும்பாலும் விடைபெற்றுப் போயிருந்தன.

சோம்பல் முறித்தபடி எழுந்து முன்னறைக்கு வந்த போது, வள்ளி யாரோ ஒரு கிராமத்தானை வழியனுப்பி விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தாள்.

மாதவியைக் கண்டதும், ''அய்யோம்மா, அந்த ஆள் பேசின சத்தத்திலே முளிச்சிட்டீங்களாம்மா? உங்களுக்கு ஒரு தொந்திரவு இல்லாமல் பார்த்துக்கிடணுமின்னு சின்னய்யா சொன்னாங்களே. திரும்பப் போய் படுத்துக்கிடறீங்களாம் மா?'' சிறு பதட்டத்துடன் வினவினாள்.

''இல்லையில்லை. இவ்வளவு நேரம் தூங்கியதே அதிகப் படி... அது யார் வள்ளி? என்ன வேண்டுமாம்?'' என்று மாதவி விசாரிக்கவும், வள்ளியின் முகம் லேசாகக் கன்றியது.

''என் புருஷன்மா!'' என்றாள் சிறு குரலில்.

''ஓகோ!'' என்ற மாதவி, சற்று யோசித்து, ''ஏன் வள்ளி, உன் கணவனுக்குச் சாப்பாடு... உன் வீட்டிலும் சமையல் வேலை எல்லாம் இருக்குமில்லையா? அதைப் பாராமல் இங்கு வந்து விட்டால் ,எப்படி?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் என் மாமியார் பார்த்துக் கொள்ளும்மா. இதுக்கு, இப்படிப் பாதி வேலையிலே ஒருதரம் வீடு வந்தே பழக்கமாகிப் போச்சும்மா. நான் சொன்னால்கூடக் கேட்பது இல்லை. சின்னய்யாகூட, இனிமே உன் புருஷன் முழுநாளும் வேலை செய்வானில்லையா என்று கேட்கிறாங்கம்மா'' என்றாள் வெட்கமும் வருத்தமுமாக வள்ளி.

ஓகோ! இதுதான் இவள் காலையில் நாணிக் கோணிய கதையா என்று எண்ணியபடி, ''வள்ளி, நீ காலையில் செய்த இடியாப்பம் நன்றாக இருந்தது. எப்படிச் செய்தாய்? அதற்கு

ஏதோ மாவு வேண்டும் அல்லவா?'' என்று பேச்சை மாற்றி னாள்.

''ஆமாம்மா. புட்டு மாவு, இடியாப்ப மாவு எல்லாம் தனியா இடித்து வறுத்து வைக்க வேணும்மா. இப்போ, காலைப் பலகாரத்துக்குப் பெரியம்மா குடுத்தனுப்பிச்சாங்க. தோசை மாவு இல்லை, இல்லியாம்மா!''

உண்மையான கரிசனத்துடன் செய்ததுதான். ஆனால் ரொம்பவும் 'ஓசி' வாங்குவதுபோல மனம் உறுத்தியது. ''இன்றைக்குத் தோசைக்கு ஊறப் போட்டுவிடு, வள்ளி. மிக்சியில் அரைத்து விடலாம்...''

''எதுக்கும்மா? நான் ஆட்டுக்கல்லிலேயே ஆட்டிவிடு றேன். அப்போதான் இட்டிலி பஞ்சு மாதிரி இருக்கும்'' என்றாள் வள்ளி.

பண்ணை வீட்டு இட்டிலி என்று கிருபாகரன் பேசுவது மாதவிக்கு நினைவு வந்தது. ஆனால், கொஞ்சமாக ஆட்டுக் கல்லில் ஆட்ட முடியாதே என்று யோசித்துவிட்டு, மீதியாகும் மாவை, இரவு தோசைக்குக் கொஞ்சம் வைத்துக் கொண்டு இவளிடமே கொடுத்து விடலாம் என்று மாதவி முடிவு செய்தாள். இவள் செய்யும் வேலைக்குத் திருச்சி என்றால் மாதம் முன்னூறு ரூபாயாவது கொடுக்க வேண்டியிருக்கும்!

இருவருமாக, சமையலுக்கு, வீட்டுக்கு வாங்க வேண்டிய பொருட்களின் பட்டியல் ஒன்று தயாரித்ததில், இருவருக்குமே சுவாரசியமாகப் பொழுது போயிற்று. தோட்டம் ஒன்று திட்டமிட்டார்கள். மாலையில் மனைவியை அழைத்துச் செல்ல வந்த முத்துக்கருப்பனை தோட்டத்திற்கு உடை முள் வேலி போட்டுத் தரச் சொன்னார்கள்.

பொழுது சாய்கிறவேளையில், கிருபாகரன் கவலை யோடு திரும்பி வந்தபோது, மாதவியின் முகத்தில் பழைய உற்சாகம் துளிர் விட்டிருந்தது.

# 7

கவலை அகன்றவனாய்த் தங்கையின் மூக்கைப் பிடித்து ஆட்டிவிட்டு, கிருபாகரன் உடம்பு கழுவப் போனான்.

இருவருமாக அவரவரது அன்றையத் தினத்தைப் பகிர்ந்து கொண்டபோது, மாதவி வள்ளியைப் பற்றி சிலாகித்துப் பேசினாள்.

''அதுதான் பண்ணையாரம்மாவின் திறமை!'' என்றான் கிருபாகரன். ''அங்கிருந்த அவ்வளவு நேரத்தில், உன் குணம் கண்டுபிடித்து, உனக்கு ஏற்றபடி ஒரு வேலைக்காரியையும் கண்டுபிடித்துத் தந்திருக்கிறார்கள், பார்!'' என்று கிருபாகரன் கூறவும், ''இங்கே சுற்றி, அங்கே சுற்றி, அந்தக் குடும்பத்தைப் பாராட்டாவிட்டால் உன்னால் மூச்சுக்கூட விட முடியாது போல இருக்கிறதே, அண்ணா!'' என்றாள் தங்கை கிண்டலாக.

தலையைச் சரித்து, அண்ணன் முகத்தைப் பார்த்து, ''இனி, இந்த முத்துக்கருப்பன் வேலி போட்டுத் தருவதை எந்த விதமாய்ப் பண்ணைக் குடும்பத்தின் பெருந்தன்மையோடு இணைக்கப் போகிறாய் அண்ணா?'' குறும்பாகக் கேட்டாள். ''கொஞ்சம் சிரமம்தான். இல்லை?''

தங்கையின் 'பாப்' கூந்தலை லேசாகக் கலைத்து விட்டு, ''பண்ணைக் குடும்பத்தின் ஆதரவு நமக்கு இல்லாவிட்டால், முத்துக்கருப்பன், வயல் வேலை முடிந்த பிறகு வந்து, அதிகப்படி நேரம் வேலை செய்து வேலியிட்டுத் தருவான் என்றா நினைத்தாய்?'' என்று கிருபாகரன் கூறவும், ''அம் பேல்!'' என்று தோல்விக்கு அறிகுறியாக மாதவி கைகளை உயர்த்திக் காட்ட இருவருமே வாய்விட்டு நகைத்தனர்.

''விஷயம் என்னவென்று சொன்னால் நானும் சேர்ந்து சிரிக்கிறேன்'' என்ற குரலில் மாதவி தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு திரும்பினாள்.

கதிரேசன்தான். முக்கால் கை அளவில் மடித்து விடப்பட்டிருந்த வெண்ணிறச் சட்டையும், வேஷ்டியுமாக ஓர் இலகு நடையுடன் வந்து கொண்டிருந்தான்.

இவன் எப்போது வந்தான்? எப்படி வந்தான்? 'பைக்' என்றால் நன்றாகவே சத்தம் கேட்டிருக்கும். ஜீப் நல்ல நிலையில் இருந்தபோதும், அதுவும் கூட வரும்போது கொஞ்சமேனும் ஓசை கேட்டிருக்குமே! நடந்து வந்தானா?

அவளது மனதை ஊகித்து, ''எதிர்க்காற்று என்பதால் ஜீப் சத்தம் உங்களுக்குக் கேட்டிராது'' என்றான் கதிரேசன்.

மீண்டும், வாய்விட்டுக் கேளாமலே பதில் தருகிறான்! லேசான புகைச்சலுடன், ''நீங்கள் கதவைத் தட்டிய ஓசைகூட எங்கள் இருவருக்குமே கேட்கவில்லை!'' என்றாள் மாதவி, குறிப்பாக.

கதிரேசனை முந்திக்கொண்டு, ''எங்கள் இருவருக்கும் இடையே, கதவைத் தட்டிக் கொண்டு வருகிற விதிமுறைகளுக்கு இடம் கிடையாது மாதவி'' என்று அவசரமாகக் கிருபாகரன் பதில் சொன்னான்.

''ஆனால், நேற்றுத்தான் சந்தித்த ஒரு பெண் இருக்கும் இடத்துக்கு நான் கதவைத் தட்டிவிட்டுத்தான் வந்திருக்க வேண்டும், கிருபா. ஆனால் என்னவோ, உங்கள் தங்கை என்பதாலோ என்னவோ, எனக்கு மாதவியை வேற்று ஆளாக எண்ணவே தோன்றவில்லை... அதிருக்கட்டும் அது என்ன ஜோக்? கேட்டேனே?'' என்று மீண்டும் துருவினான் அவன்.

இதுதான் மன்னிப்புக் கேட்கிற அழகா என்று உள்ளூரப் பொறுமிய மாதவி, அவன் மீண்டும் சிரிப்பு விஷயம் பற்றிக் கேட்கவும் பதறிப் போனாள்.

''அதுவா?'' என்று இயல்பாகத் தொடங்கிய அண்ணனை லேசாகத் தலையசைத்து அடக்கி, ''அது... அது எங்கள்.... எங்களுக்குள் உள்ளது. உங்களுக்கு ரசிக்காது'' என்று முடித்து விட்டாள்.

''எனக்கு ரசிக்குமா ரசிக்காதா என்பதைச் சரியாகக் கணிக்கக் கூடியவன் நானாகத்தான் இருக்க முடியும்...'' என்றதற்கு மேல், அவன் வற்புறுத்தாமல் விட்டுவிடவே மாதவி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

வள்ளியைப் பற்றி விசாரித்தான்.

குறும்புடன் தங்கையைப் பார்த்துவிட்டு, ''அம்மாவின் தேர்வு எங்கேனும் சோடை போகுமா, கதிரேசன்?'' என்றான் கிருபாகரன்.

லேசான படபடப்புடன், ''ரொம்ப நல்ல பெண்! நறுவிசாய் வேலை செய்கிறாள்... நிறையச் சாமான்களுக்கு இங்கே வேறே பெயராமே! தனியாவைக் கொத்தமல்லி என்கிறாள், சோம்பு, பெருஞ்சீரகமாம். காய்ந்த மிளகாயை வத்தல் என்றால்தான் கடைக்காரருக்குப் புரியுமாம். பட்டியல் போடும் போது வள்ளி சொன்னாள்'' என்றாள் மாதவி.

''என்ன பட்டியல்?''

''மளிகைச் சாமான் பட்டியல்!''

''அவசியமே இல்லை!''

''ஏனோ? எங்கள் வீட்டிலும் சமைக்க வேண்டுமில்லையா? அல்லது, அண்ணனும் நானும் 'காற்றை உண்டு உயிர் வாழ்கிற' ரகம் என்று எண்ணினீர்களா?''

''சமைப்பது அவசியம் இல்லை என்று நான் சொன்னேனா?''

''பின்னே? அரிசி, பருப்பு, மசாலாச் சாமான் இல்லாமல் சமைக்க வள்ளிக்கு மந்திரம் தந்திரம் ஏதும் தெரியுமா?''

''அப்...ப்பா! கிருபா, நீங்கள் அதிகம் பேசக் காணோமே என்று நான் அவ்வப்போது நினைத்ததுண்டு. காரணம் இப் போது தெரிகிறது. வீட்டில் பேச வாய்ப்பு கிடைத்திருந்தால் தானே, பேசிப் பழக்கம் இருக்கும்?''

ஒரு கணநேர அமைதியின் பின், ''சாமான் பட்டியல் தேவையில்லை என்றால் வேறு என்னவென்று பொருள் கொள்வது?'' என்று சற்று இறங்கிய குரலில் மாதவி இயம்பி னாள்.

மென்மையாய் முறுவலித்து, ''உங்களுக்குத் தேவை யான சாமான்கள் எல்லாம் ஏற்கனவே கொண்டு வந் தாயிற்று!'' என்று கதிரேசன் கூறவும், அங்கே ஓர் அமைதி நிலவியது.

பின்னர், அண்ணன் மீது ஒரு பார்வையைச் செலுத்தி விட்டு, ''எல்லாம் எவ்வளவு ஆயிற்று?'' என்று மாதவி விசாரித்தாள்.

கிருபாகரன் சங்கடத்துடன் நெளிய, ''ஒருவர் அன் போடு அளிப்பதற்கெல்லாம் விலை போடுவார்களா?'' என் றான் கதிரேசன்.

''நேற்று செய்த உதவி அன்பால் செய்தது. ஆனால் அதையே எந்நாளும் எப்படி ஏற்பது? அப்படி உங்கள் தானத்தை ஏற்க, நாங்கள் உங்கள் பண்ணைக் குடிகள் அல்ல!'' என்றாள் மாதவி, கருக்கான குரலில் சுருக்கமாக.

அவசரமாகக் குறுக்கிட்டு, ''எதையுமே இலவசமாகப் பெற்றுக் கொள்ள மாதவிக்குப் பிடிப்பதில்லை, கதிரேசன்.

ஒசி என்பதுதான் அடிமைத்தனத்தின் முதல்படி என்பாள். அதனால் இலவசமாய் எதையும் பெறுவதில்லை என்று அப்படி ஒரு கொள்கை அவளுக்கு'' என்று விளக்கினான் கிருபாகரன்.

லேசாகச் சுருக்கிய புருவம் மீண்டும் பழைய நிலையை எய்த, ''நல்ல கொள்கைதான். ஆனால்... இதை நான் திருப்பிக் கொண்டு போனால் அம்மா வருத்தப்படுவார்கள்... ஒன்று செய்கிறீர்களா, மாதவி. உங்கள் உடம்பு நன்றான பிறகு, இதற்குரிய பணத்தை எனக்கு ஒரு வேலை செய்து கழித்து விடுங்கள்'' என்றான் கதிரேசன்.

''என்ன வேலை?'' என்றாள் மாதவி நம்பாத குரலில்.

''ஏன்? உங்களுக்காகச் சும்மாவேனும் ஒரு வேலையை உண்டாக்கப் போகிறேன் என்று எண்ணினீர்களா? இது மெய்யான வேலைதான். திருநெல்வேலியிலிருந்து ஆள் கொண்டு வந்து செய்ய வேண்டும் என்று நினைத்திருந்தேன். இப்போது உங்களைக் கொண்டே அந்த வேலையை முடித்துக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது.''

''உங்கள் வேலைக்குரிய தகுதி எனக்கு இருக்கிறதா இல்லையா என்று உங்களுக்கு என்ன தெரியும்?''

''என் வேலைக்கு, ஆங்கிலமும் தமிழும் நன்றாகப் படிக்கத் தெரிந்து, வேலையில் ஆர்வமும் இருந்தால் அதுபோதும். ஆனால், நீ தட்டித் தட்டிப் பேசுவதைப் பார்த்தால் எனக்கு வேறு சந்தேகம் வருகிறது. உழைப்பதற்கு விருப்பம் இல்லையோ... என்று...'' என்று இடித்தான் அவன்.

''நானா உழைக்க விருப்பம் இல்லாதவள்?'' என்று ஆத்திரத்துடன் தொடங்கிவிட்டு, உடனே தன்னை அடக்கிக் கொண்டாள் மாதவி. இவன் சீண்டுகிறான்! ஆனால் இனித் தயக்கம் காட்டுவதும் கூடாது என்று முடிவு செய்து, ''என்ன

வேலை? அது பற்றி விவரம் சொல்லுங்கள்'' என்றாள் நிதானமாக.

''என் புத்தகங்களை அடுக்கித் தரவேண்டும்!'' என்றவன், மாதவியின் முகத்தில் சினச் சிவப்பு ஏறுவதைக் கண்டு, ''பொறுமை! பொறுமை! முதலில், இந்தப் பட்டிக்காட்டான் வாங்கி வைத்திருக்கும் பத்துப் புத்தகங்களை அடுக்கித்தர ஆள் வேறு வேண்டுமா என்று அலட்சியமாக நினைக்கக்கூடாது. என்னுடையவை நாலைந்து தலைமுறைகளாகச் சேர்க்கப்பட்டவை. பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையிலிருந்து, பிரதாபமுதலியார் சரித்திரம், திகம்பரசாமியார், ராஜாம்பாள் சரித்திரம் போன்ற புத்தகங்கள் கூட இருக்கின்றன'' என்று விவரம் கொடுத்தான்.

லேசான புருவச் சுளிப்புடன் மாதவி பேசாதிருக்கவும், ''அந்த அறைக்குள் நீ போனால், பிறகு உன்னை வேறு யாராவது பிடித்து வெளியே இழுத்து வந்தால்தான் உண்டு. அவ்வளவு அருமையான புத்தகங்கள், மாது'' என்றான் கிருபாகரன்.

''அவ்வளவு அருமையான புத்தகங்கள் என்றால் நீங்களும் அவற்றைப் பாதுகாப்பாகத்தானே வைத்திருப்பீர்கள்?''

''ஆமாம். பூச்சி வராதபடி வசம்பு, வேப்பிலை, பூத்தூள் போட்டுத்தான் வைத்திருக்கிறேன். அவ்வப்போது மருந்தடிப்பதும் உண்டு. ஆனால் ஒரு புத்தகத்தை நல்லபடியாகப் பாதுகாப்பதற்குரிய ஒரே வழி அதை அவ்வப்போது புரட்டிப் படிப்பதுதான் என்பார்கள். அதற்குத்தான் இப்போது யாருக்கும் நேரம் இல்லை. அப்படியே மீறி எடுப்பதை இடம் பார்த்து வைக்கவில்லை. இப்போது புத்தக அறையில் சுவர்ப்பகுதி முழுவதற்கும் தட்டுகள் அமைத்து விட்டோம். பரணிலும் கீழேயுமாக இருக்கும் புத்தகங்களைத் தலைப்பு வாரியாகப் பிரித்து அடுக்க வேண்டும். ஒரு ரிஜிஸ்டரில் வரிசைப்படுத்திக்

குறிக்க வேண்டும். புத்தகங்களுக்கும் எண் குறியிட வேண்டும்!''

''நான் நாளையிலிருந்து வேலைக்கு வருகிறேன்!'' என்றாள் மாதவி சுருக்கமாகவே.

''பரணில் இருந்தெல்லாம் எடுக்க வேண்டும் என்றேனே. உடம்பு கொஞ்சம் நன்றான பிறகு பார்த்துக் கொள்ளலாம்.''

''எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை.''

''இன்று காலையில் உங்கள் முகத்தைப் பார்த்தவர்கள் சத்தியம் செய்தாலும் இதை ஒத்துக் கொள்ள மாட்டார்கள்!''

எல்லாம் நேற்று உன் வீட்டுக்கு வந்ததனால் நேர்ந்தது தான் என்று எண்ணியதைச் சொல்ல மாட்டாமல், அண்ணனிடம் சொன்ன தூக்கமின்மையையே திருப்பிப் படித்து விட்டு, ''இப்போது என்னைப் பார்த்தால் நோயாளி மாதிரியா இருக்கிறது?'' என்று சவால் விடுவது போலக் கேட்டாள்.

ஆனால், அதை அவனும் ஏற்று, அவளை ஆராய்ச்சிக் கண்ணோடு கூர்ந்து நோக்கவும் அவளுக்கு முகம் சிவந்து விட்டது. உடல் கூச்சத்தை மறைத்துப் பல்லைக் கடித்துக் கொண்டு அவள் அசையாமல் நிற்கவேண்டியிருந்தது.

அவளது கன்றலைக் கவனியாதவன் போல, ''கண்களைச் சுற்றிலும் கருவளையங்கள் மட்டும் இல்லையென்றால், உங்கள் 'நோயாளியல்ல'வை நம்பக்கூடச் செய்யலாம். எதற்கும் இன்னமும் ஒருவாரம் பொறுத்தே வேலையைத் தொடங்கலாம். எனக்கும் நல்லதாக அட்டவணைப் புத்தகம், அட்டையிடக் கண்ணாடிப் பேப்பர்கள் என்று வாங்க வேண்டும். ஆளை அனுப்பி வாங்கி வந்தபின் சொல்கிறேன். அதுவரை பொறுத்திரு'' என்று கதிரேசன் முடித்து விட்டான்.

ஒரோர் சமயம் மரியாதைப் பன்மையிலும், சில சமயங்க ளில் ஒருமையிலுமாகக் கதிரேசன் அவளை அழைத்துப் பேசுவது மாதவிக்கு இப்போது ஓரளவு பழக்கமாகி விட்டது.

திருச்சியில் யாரேனும் சற்று அத்துமீறுவது போலத் தோன்றினாலும், 'மிஸ் மாதவி என்று கூப்பிடுங்கள்' என்று அதட்டியது போல இவனிடம் முடியவில்லை. அண்ணனு டைய நண்பன் என்பது ஒரு காரணம். அடுத்து, கதிரசேன் வேண்டுமென்றே சில்லுண்டித்தனம் செய்வதாகவும் அவளுக் குத் தோன்றவில்லை. அந்தக் கிராமத்தில், அவனது உயர்ந்த நிலை காரணமாகக் கொஞ்சம் அதிகாரத் தோரணையில் பேசுகிறானே தவிர, அவனுள் கெடுதல் ஏதும் கிடையாதோ என்ற சந்தேகமும் மாதவிக்கு ஏற்பட்டிருந்தது. எனவே, கதிரேசன் அவளை ஒருமையில் விளிப்பதைக் கண்டும் காணாதது போல நடந்து கொண்டாள்.

கதிரேசன் சொன்ன ஒருவார இடைவெளியில், வீட்டை ஒதுக்கி, தோட்டம் போட்டு என்று இந்த வேலைகளை முடித்துவிடலாம் என்று முடிவு செய்து, வள்ளியோடு சேர்ந்து வேலை செய்ததன் விளைவாக, விரைவிலேயே தலை சுற்றி ஓய்ந்து போய் விட்டாள்.

யாரிடமும் — வேறு யார்? கதிரேசன்தான், சொல்லி விடக்கூடாது என்பதால் மாதவி, தனது உண்மையான உடல் நிலையை வள்ளியிடம் கூடக் காட்டவில்லை.

''இந்த நேரம் தூங்கிப் பழக்கம்'' என்று சொல்லிவிட்டுச் சென்று சுருண்டு படுத்து விட்டாள்.

அவளே அறியாமல், அவள் உள்ளூரக் களைத்திருந்த தைக் கதிரேசன் கண்டுபிடித்து விட்டானே என்று இப்போது சற்றுப் பாராட்டுதலாகக் கூட அவளால் நினைக்க முடிந்தது.

கதிரேசன் சொன்ன ஒரு வாரத்திற்குள்ளாக, வள்ளி, முத்துக்கருப்பனின் அயராத உழைப்பின் உதவியால், மாதவியின் வீட்டைச் சுற்றிலும் வேலியும், அதன் உள்ளே பாத்தி கட்டி பலவித விதைகள் முளைக்கத் தொடங்கிய தோட்டமும் தயாராயின. அண்ணன் மூலம் வாங்கிய நீளக் குழாய் மூலம் மாதவியே பாத்திகளுக்குத் தண்ணீர் தெளித்தாள். வீட்டினுள்ளும், அவள் விரும்பியபடி பொருட்கள் அடுக்கப்பட்டு விட்டதால், வீடும் தோட்டமும் கலைநயத்துடன் பொலிவோடு காட்சியளித்தன.

இடையில் ஒருநாள் மகாலட்சுமி அம்மாள் வந்து, மாதவியின் முயற்சிகளைப் பாராட்டி, அவளை உச்சி குளிர வைத்துவிட்டுப் போனார். வள்ளியையும் தட்டிக் கொடுக்க அவர் தவறவில்லை. பண்ணை வீட்டு அம்மா என்றால் இப்படி எல்லாம் கவனிக்க வேண்டும் போலும் என்று மாதவி வியந்தாள்.

சொன்னபடி ஒருவாரத்தில், அவளை வீட்டுக்கு அழைத்துச் செல்ல, கதிரேசன் ஜீப்புடன் வந்தான்.

கிருபாகரன் ஏற்கனவே கூறியிருந்ததால் மாதவியும் தயாராகவே இருந்தாள்.

அவளது சிறு உணவு டப்பாவைப் பார்த்ததும், ''அசட்டுத் தனத்துக்கும் அளவு இருக்க வேண்டும், மாதவி. அந்த வீட்டில் இருந்து கொண்டு, இந்தச் சின்ன டப்பாவில் இருக்கும் ஆறிய உணவை உண்ண அம்மா விடுவார்கள் என்றா நினைத்தாய்? யோசி, இந்த உணவுப் பொருட்களின் விலையாகத்தானே, நீ வேலை செய்வதே! அதை இங்கிருந்து கொண்டு வந்து உண்டாலும், அங்கேயே சாப்பிட்டாலும் எல்லாம் ஒன்றுதானே? அங்கேயே பசியாறினால், அம்மாவுக்கு ஆறுதலாக இருக்கும்!'' என்று, கண்டிப்பில் தொடங்கி, சிறுகோரிக்கையில் முடிக்கவும், டப்பாவை வீட்டிலேயே விட்டுவிட்டு மாதவி கிளம்பினாள்.

''நாளையிலிருந்து, வேலையை முடித்துவிட்டு, நீயும் அம்மாவோடு அங்கேயே வந்துவிடு வள்ளி. மதியத்துக்கு மேல் அம்மாவோடு திரும்பி வந்து, இரவுச் சாப்பாட்டு வேலையை மட்டும் பார்த்தால் போதும்'' என்று வள்ளியிடம் கூறிவிட்டுக் கதிரேசன் ஜீப்பை எடுத்தான்.

''காலையில் நான் அழைத்துப் போய் விட்டு விடுவேன், மாதவி. வேலை முடிந்து நீ வீடு திரும்ப ஒரு வில்வண்டி வீட்டில் நிறுத்தி வைக்கிறேன். மதியத்துக்கு மேல், நீ சொல்கிற நேரத்தில், சுடலைமாடன் உன்னைக் கூட்டி வருவான்'' என்று அவள் வரப்போக அவன் செய்திருந்த ஏற்பாடு பற்றிக் கூறினான்.

எதிலும் மறுப்பதற்குக் காரணம் இல்லாததால் மாதவி பேசாமல் தலையாட்டினாள்.

ஆசையுடன் வரவேற்ற மகாலட்சுமியுடன் சில நிமிடங் கள் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கதிரேசன், மாதவியைப் புத்தக அறைக்கு அழைத்துச் சென்றான்.

கதிரேசனின் புத்தக அறை, மழைநீர், புகை என்று எதுவும் பட முடியாதபடி பாதுகாப்பாக இருந்தது. பூச்சிப் பாதுகாப்பாக, கதிரேசன் முன்பே கூறிய அத்தனையும் சேர்ந்து, லேசான மருந்துவாசம் பரப்பின.

அங்கிருந்த புத்தகங்களின் எண்ணிக்கையைக் கண்டதும் மாதவி பிரமித்துப் போனாள். குறைந்தது ஆயிரம் இருக்கும்.

அவளது பிரமிப்பைப் பார்த்துவிட்டு, ''சொன்னேனே, மாதவி, பல தலைமுறைகளாகச் சேர்த்தது என்றேனே... சேர்த்தது என்றால் யாருமே ஒரு புத்தக சாலைக்கு என்று வாங்கிச் சேர்க்கவில்லை. எங்கேனும் போகும்போது வரும் போது கண்ணில் படுவதில் பிடித்ததை வாங்கிவரும் பழக்கம் எல்லோருக்குமே இருந்தது. வாங்கிய புத்தகங்கள் வீணாக

விடுவதும் இல்லை... சமீபத்தில் நான் மதுரையில் வாங்கிய 'ராபர்ட் லட் லம்' புத்தகம் கூட இருக்கும், பார்'' என்றான் அவன்.

மெல்ல மதிப்பு ஏற, ''நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள்?'' என்று சின்னக்குரலில் மாதவி வினவினாள்.

''பி.எஸ்சி. விவசாயம். உன் அண்ணனுக்கு மூன்று ஆண்டு சீனியர். கிருபா சொல்லவில்லை?''

கதிரேசனைப் பற்றிய பேச்சை மாதவி முடிந்த அளவு தவிர்த்ததை அவனிடமே எப்படிச் சொல்வது? ''சொன்னான்... நான்தான் வேறு உறவினர் ஒருவரோடு உங்களைச் சேர்த்துக் குழம்பி விட்டேன்...'' என்று சமாளித்தாள்.

''அட்டை போடுவதற்கெல்லாம் யாராவது பையன்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். எது வேண்டுமானாலும் கூச்சப்படாமல் அம்மாவிடம் கேட்கவேண்டும். காந்தத்தைக் கூட கூப்பிட்டுக் கொள்ளலாம்.''

பெரிய பணி; அவளுக்குப் பிடித்தமாகவும் இருந்தது. முழுமனதோடு ஈடுபட்டு வேலை செய்தபோது மனம் மிகவும் அமைதியுற்றது.

கதிரேசன் சொல்லியோ என்னவோ, அவ்வப்போது அருந்தவும், அசைபோடவும் ஏதாவது அனுப்பியது தவிர, மகாலட்சுமி அவளது வேலையில் குறுக்கிடாமல், ஒதுங்கி நின்று பார்த்து விட்டுப் பேசாமலே போய் விடுவார்.

அருந்துவதற்காகக் காலை, மாலையில் அவர் கொடுத்த ஒரு பானம், இளநீரைப் போல வெகு சுவையாக இருந்தது. பனையிலிருந்து பெறுவது என்றாலும், அது பதநீர் அல்ல என்று உறுதியாகத் தெரிந்ததால், அதுபற்றி மகாலட்சுமியிடமே மாதவி விசாரித்தாள்.

''அது 'நீராளம்', அம்மா. பதநீர்க் கலயத்தில் சுண் ணாம்பு தடவாமல், ஆனால் புளித்துவிடுமுன் அவ்வப்போது இறக்குவது...'' என்றவள், மாதவியின் புரியாத பார்வையைக் காணவும், பதநீரைப் பற்றி விளக்கினார். தென்னைமரப் பாளைகள் போல, பனைமரத்தில் வரும் பாளைகளை உரிய வகையில் சீவிவிட்டால், சீவிய இடத்தில் இனிப்பாய் ஒரு திரவம் கசியும். அதற்கு நேராக மண்கலயம் கட்டி அந்தத் திரவத்தைச் சேகரிப்பார்கள். சும்மாவிட்டால் அந்த நீர் புளித் துப் போய் 'கள்'ளாகி விடும். அப்படிப் புளிக்க விடாமல், கலயத்தில் சுண்ணாம்பு தடவி வைப்பார்கள். அப்படிப் பதப்படுத்தப்பட்ட பனைநீர்தான் பதனீர், இதையே, கலயத் தில் சுண்ணாம்பு தடவாமல், புளிக்குமுன் எடுத்து விட்டால் 'நீராளம்'. உடம்புக்கு மிகவும் நல்லது. கதிரேசன் வயிற்றில் இருந்தபோது மிகவும் பலவீனமாக இருந்தேன் என்று என் பெற்றோர் இதைத்தான் எனக்கு இருவேளையும் தந்தார்கள். நானும் தேறி, பிள்ளையும் நல்ல படியாகப் பிறந்தான். பிறகும், கதிரேசு சின்ன வயதில் ரொம்ப நோஞ்சானாக இருந்தான். பாலாரிஷ்டம் என்றார்கள். என்னென்னமோ கொடுத்துப் பார்த்துவிட்டுக் கடைசியாக இந்த நீராளத்தைத்தான் கொடுத் தேன். அதன் பிறகுதான் அவனும் தேறினான். நீயும் உடம்பு, நிறையத் தேற வேண்டியிருக்கிறதே என்றுதான் மீண்டும் நீராளம் இறக்கச் சொன்னேன். உனக்குப் பிடித்திருக்கிறதா?''

கதிரேசன் நோஞ்சானாக இருந்தானா?

கற்பனை செய்து பார்த்தாள்.

நோஞ்சானான ஒரு பையனின் தோற்றத்துக்குப் பதி லாக, வைரம் பாய்ந்த தேக்கின் உறுதியோடு அவனது இன்றையத் தோற்றம்தான் மனக்கண்முன் தோன்றியது.

அடர்ந்த சிகை; அகன்ற நெற்றி; கூர்ப்பார்வை; நேர் நாசி; வரிசையான வெண்ணிறப் பற்கள்; உழைப்பிற்கு அஞ்சாத அகன்ற தோள், நெடுநெடுவென்ற உயரம்!

அவனது அமர்ந்த குரல், தெளிவான பேச்சு, கம்பீரமான அசைவுகள்...

இவனை மணப்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

தன்னையறியாமல் பெருமூச்சு விட்டவள் சட்டெனத் திகைத்தாள்.

# 8

யாரோ யாரையோ மணப்பதற்கு மாதவி என்ன பெருமூச்சு விடுவது என்று தன்னைத்தானே உள்ளூர அவள் கண்டித்துக் கொண்டிருக்கையில், மகாலட்சுமி கேள்வியாக நோக்கவும் மீண்டும் திகைத்தாள். ''எ... என்னம்மா?''

''நீராளம் ருசி பிடித்திருக்கிறதா என்று கேட்டேனே!''

''ஓ! ரொம்ப ரொம்ப! இந்தப் புத்தகம் அடுக்குவது பற்றி ஓர் ஐடியா வந்ததா, உங்கள் கேள்வியைக் கவனிக்காமல் விட்டுவிட்டேன்!'' என்று எப்படியோ சமாளித்தாள் மாதவி.

ஆனால், அருகில் நின்ற காந்தம் அவ்வளவு எளிதாக அவளை விட்டு விடுவதாக இல்லை. ''மெய்யாகவா! என்று வியந்துவிட்டு, ''நீராளத்தில் புளிப்பு ஏறிக் கள்ளாக மாறி விட்டது; அதைக் குடித்ததால் கை கால் ஆடிப்போய் உட்கார்ந் திருக்கிறீர்கள் என்றல்லவோ நான் நினைத்தேன்!'' என்று ஏளனமாகக் கூறிச் சிரிக்கவும், மாதவி மிகவும் அவமானமாக உணர்ந்தாள்.

வினாடி நேரமே என்றாலும் மனதை அலைய விட்டது தப்புதானே? அதிலும் ஒருமுறை அறைபட்டவள்!

ஆனால், காந்தத்தின் பேச்சை விளையாட்டாக எடுத்து மகாலட்சுமி சிரித்தார். "பைத்தியம், பைத்தியம்! பேசுவதைப் பார்!" என்று செல்லமாக வைதுவிட்டு, "நீ ஒன்றும் பயந்து விடாதேம்மா. நம் பனையேறி மிகவும் நல்லவன், கெட்டிக்கா ரனும் கூட. அப்படியெல்லாம் நீராளத்தைப் புளிக்க விட்டு விடமாட்டான்!" என்று, என்னவோ மாதவிக்கு அதுதான் கவலையோ என்று ஆறுதல் படுத்தினார்.

அப்போதைக்குக் கேலியாகவே ஒதுக்கி விட்டாலும், காந்தம், மாதவியை அங்கே நிம்மதியோடு வேலை செய்ய விடுவதாக இல்லை. அடிக்கடி புத்தக அறைக்கு வருவாள். இதென்ன, அதென்ன என்று வேலையினூடே மூக்கை நீட்டு வாள். மாதவி பிரித்து அடுக்கி வைப்பதில் அடியிலிருந்து எதையாவது எடுக்கிறேன் என்று உருவி, எல்லாவற்றையும் விழத்தட்டுவாள்.

நல்லவேளையாக, ஒருதரம் கதிரேசன் வருவதைக் கவ னியாமல், அவள் இந்த சிலுமிசத்தைச் செய்துவிட, பார்த்துக் கொண்டே வந்த கதிரேசன், காந்தத்தைக் கண்டித்து, அடுக்கி முடிக்கும்வரை, ஒரு புத்தகம் கூடத் தொடக்கூடாது என்று அவளுக்கு உத்தரவிட்டு விட்டான்.

"புத்தகம் என்றால் சின்னவருக்கு உயிர். அவரது அரு மைப் புத்தகங்களுக்கு ஏதாவது ஒன்று என்றால், எண்ணை யில் விழுந்த அப்பம் மாதிரிக் குதித்து விடுவார். அப்புறம் தனியாக வந்து, 'உன்னைப் போய்க் கண்டித்தேனே' என்று வருத்தப்படுகிறார்" என்று பிறகு ஒரு சமயம், தானாகவே வந்து மாதவி கேளாமலே விவரம் உரைத்தபோதும், அதற்கு மேல் புத்தகங்கள் பக்கம் காந்தம் வரவில்லை.

புத்தகங்கள் பக்கம் மட்டுமல்லாமல், புத்தக அறையின் பக்கமே வராமல் இருந்தால் நன்றாயிருக்குமே என்று வெகு விரைவிலேயே மாதவி நினைக்கத் தொடங்கினாள். காந்தத்

தின் பேச்சு அந்த அளவு, மாதவிக்கு எரிச்சலூட்டும் படியான தாக இருந்தது.

முதலில், மாதவியிடம் துணிமணிகள், ஆடை அலங்கா ரங்கள் பற்றித்தான் கேட்டுக் கொண்டிருந்தாள்.

சினிமாக் கதாநாயகிகள் போல மாதவி உடுத்துவ துண்டா என்று விசாரித்துவிட்டு இல்லை என்று தெரிந்ததும் சுரிதார் அணிவாளா என்று கேட்டாள்.

அணிவாள் என்று தெரிந்ததும், துப்பட்டா போட்டுக் கொள்வாளா மாட்டாளா என்று கேள்வி வந்தது. சில சுரிதார் செட்டுகளுக்குத் துப்பட்டா பொருந்தாது என்று மாதவி கூறவும் காந்தத்தின் முகமே மாறிவிட்டது. ''அய்யய்யே! முன்னாலே மூடாமல்... அவிழ்த்துப் போட்டு விட்டு நிற்கிற மாதிரி அசிங்...கமாய் இராதா?'' என்று அருவருப்பை அப்படியே முகத்தில் காட்டினாள்.

சினம் சமனப்பட்டு, சீரான குரலில் விடையிறுக்க மாத விக்குப் பல வினாடிகள் தேவைப்பட்டன. ''சில சுரிதார்களில் முன்புறம் செய்யப்படும் வேலைப்பாடே துப்பட்டா போட்ட மாதிரிதான் இருக்கும். அதனால், நீ சொல்கிற 'அவிழ்த்துப் போட்டு விட்டு நிற்கிற' மாதிரியெல்லாம் இராது. உனக்குத் தெரியாததைப் பற்றி வாய்க்கு வந்தபடி உளராதே!'' என்று பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு சற்று அழுத்த மான குரலிலேயே மாதவி கூறவும், சுரிதார் பேச்சு அத்தோடு நின்றது.

அடுத்து, மாதவியின் நகைகள் பற்றித் துருவினாள்.

ஒன்றும் சொல்ல முடியாது போடி என்று விடலாம்தான். ஆனால், இந்தக் காந்தத்தைப் பார்த்ததுமே அண்ணன் முகத் தில் அடிக்கிற ஆயிரம் வாட் பல்பின் பிரகாசத்தை நினைத்து மாதவி அவளிடம் பொறுமையையே கடைப்பிடித்து வந்தாள்.

மாதவியுடைய தாயாரின் நகைகளில் பாதி, பிறகு வேலை பார்த்து அவள் சம்பாதித்ததில் வாங்கியது என்று மாதவியிடம் நாலைந்து செட் நகைகள் இருந்தன.

அவைபற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்ட பின், "இப் போது என்னிடம் அதிகம் நகையில்லை. அம்மா சம்பளத்தில் சேர்த்து வாங்கியது மட்டும்தான். ஆனால், எனக்குத் திரும ணத்தின்போது வைரமாலை போடப் போகிறார்கள்!" என்று சொல்லி, மாதவியை அதிரடித்தாள்.

அண்ணனை நினைத்து, ஒருகணம் அதிர்ந்து போன போதும், மாதவிக்கு உடனேயே விஷயம் புரிந்து விட்டது. அவளிடம் இல்லை என்ற தாழ்வுணர்ச்சியால், மாதவியை மட்டம் தட்டப் பேசிய பேச்சு இது! மென்மையாக முறுவ லித்து, "மிக்க மகிழ்ச்சி!" என்றதோடு தன் வேலையைத் தொடர்ந்தாள்.

சற்றுநேரம் பேசாமல் நின்றுவிட்டு, "எனக்கு இன்னமும் திருமண வயது வரவில்லை என்பதால்... வெளியே யாருக் கும் சொல்லக்கூடாது என்று வைத்திருக்கிறோம். நீங்களும் வேறு யாரிடமும்... வந்து, உங்கள் அண்ணனிடம் கூடச் சொல்லாதீர்கள். என்ன?" என்று தழைவுடன் காந்தம் கேட்க வும், முறுவல் மேலும் விரிய, மாதவி மவுனமாய்த் தலைய சைத்தாள்.

பாவம்! சின்னப் பெண். அது இது என்று ஆசைப்படுகிற வயது. இளமையில் வறுமைதான் மிகவும் கொடியது என்பது எவ்வளவு சத்தியமான வாக்கு!

மாதவியின் மனம் காந்தத்திடம் இளகிப் போயிற்று. இந்த இளக்கம் ஒருபுறம் இருக்க, காந்தம் சில சமயங்களில் மாதவியால் புரிந்து கொள்ள முடியாத புதிராகவும் இருந்தாள்.

ஒரு சிட்டுக் குருவியைப் போலப் பல காரியங்களை அனாயாசமாகச் செய்கிற பெண், சிறு சிறு வேலைகளைச் செய்ய நேரும்போது கடுங்கோபம் கொள்வதை மாதவி பலமுறை கண்டிருக்கிறாள்.

'துவைத்த துணி எடுத்து வைத்திருக்கிறேன். மடித்து வை, காந்தம்' என்ற வேலைக்காரியைக் காந்தம் கண்ணால் எரிப்பதை மாதவி பார்த்ததுண்டு.

'அழுக்குத்துணி எடுத்துப் போடும்மா' என்ற சலவைத் தொழிலாளியிடம், 'முன் முற்றத்தில் அழுக்குப் பாத்திரம் கிடந்தால் எடுத்துவா' என்ற வேலைக்காரியிடம், 'இன்றைக்கு வெங்காய சாம்பார். இந்தச் சின்ன வெங்காயத்தை உரித்துக் கொடு' என்ற தாயிடம் கூட அவள் ஆத்திரப்படுவதைக் காண்கையில் மாதவிக்கு ஆச்சரியமாய் இருக்கும்.

'இவர்களையெல்லாம் பிறகு பார்த்துக் கொள்கிறேன்!' என்று முணுமுணுப்பைக் கேட்டு அதற்கும் வியந்திருக்கிறாள். எப்போது பார்ப்பது? எதற்காக?

அவளை அன்போடு கொண்டாடும் மகாலட்சுமியிடமே காந்தம் ஒருதரம் ஆத்திரத்தைக் காட்டியபோது மாதவியால் தன் கண்களையே நம்பக் கூட முடியவில்லை!

துணிமணி, நகைகளில் இருந்து திடுமெனக் காந்தம், மாதவியின் நின்றுபோன திருமணத்திற்குத் தாவினாள்.

ஒருவருக்கொருவர் சொல்லி வைத்துக் கொண்டது போலக் கிருபாகரன், கதிரேசன், மகாலட்சுமி யாரும் மாதவி யின் கடந்தகாலப் பிரச்சினை பற்றிப் பேசுவதே இல்லை. பேசக்கூடாது என்று உடன்பிறந்தவனிடம் மட்டுமே மாதவி கேட்டிருந்தாள். மற்றவர்கள் நாகரீகம் கருதி, அதுபற்றிப் பேசாதிருந்தார்கள்.

இப்போது காந்தம் அந்தப் பேச்சை எடுத்தாள். மாத வியே வெகுவாக மறக்கத் தொடங்கியிருந்ததைப் பற்றிய பேச்சை!

''உங்களுக்குக் கல்யாணம் நடப்பதாக இருந்ததாமே! அவர் செத்துப் போகாமல் இருந்திருந்தால், நீங்கள் இப்போது குடும்பம் நடத்திக் கொண்டு இருந்திருப்பீர்கள்! பாவம்தான்!'' என்றாள் ஒருநாள்.

இந்தப் பேச்சு, தனக்குப் பிரியமில்லை என்று காட்டுவ தாக எண்ணி, மாதவி, பதிலேதும் சொல்லாமல் தன் கையில் இருந்த புத்தகத்தைப் பிரித்துப் பார்த்துவிட்டு, பட்டியல் புத்தகத்தில் எழுதலானாள்.

ஆனால், அதை லட்சியமே செய்யாமல், ''காதல் கல்யா ணம் என்று சின்னவர் சொன்னார்... இரண்டுபேரும் ஒரே ஊரில் இருந்திருக்கிறீர்கள்; பெரியவர்கள் என்று யாருமே இருவரில் யாரோடும் கூட இருக்கவும் இல்லை... நெருங்கிப் பழகியிருப்பீர்கள் இல்லையா?'' என்று மாதவியின் முகத் தைக் கூர்ந்து பார்த்தபடி காந்தம் கேட்டாள்.

அமைதி காத்து, ''ஒருவரோடு நன்றாகப் பழகிய பிறகு தானே திருமணம் செய்து கொள்ளலாமா கூடாதா என்று முடிவு செய்ய முடியும்?'' என்றாள் மாதவி நிதானமாக.

''ம்ம்... வெள்ளைக்காரர்கள் எல்லாம், கல்யாணத்துக்கு முன்பே பிள்ளை பெற்றுக் கொள்வார்களாமே! பல பேர், பிள்ளை உண்டாகி விட்டதற்காகவே தானே, திருமணம் செய்வார்களாம். நீங்கள் எப்படி?'' விழிகளை வட்டமாய் விரித்து, அப்பாவியாய் நோக்கிய அந்தக் குழந்தை முகத்தில் ஓங்கி ஓர் அறை வைக்கவேண்டும் போலத் தோன்றிய உந்துதலை வெகு சிரமப்பட்டு மாதவி அடக்கிக் கொண்டாள். ''அதைத்தான் வெள்ளைக்காரர்கள் பழக்கம் என்றாயே! நான் இந்த நாட்டுப் பெண்தானே?'' என்றாள் சாதாரணமாகவே.

''ஆனால், அவர்களைப் போல நீங்களும் காதல் கல்யாணம்தானே செய்வதாக இருந்தீர்கள்?'' என்றாள் காந்தம் விடாமல்.

'பேசாமல் உன் வேலையை பார்த்துக் கொண்டு போடி' என்று சொன்னால்? ஆனால், அதையே காந்தம் எதிர்பார்ப்பது போலவும் மாதவிக்குத் தோன்றியது. அவள் இன்னமும் தரம் இறங்கிப் பேசினால், அந்த அளவுக்கு இறங்கித் தன்னால் திருப்பிக் கொடுக்க முடியாது என்று உணர்ந்து, ''பார்த்துச் செய்ய எனக்குப் பெற்றோர் இல்லை அல்லவா? அதனால் தான் அப்படி'' என்று புன்னகையுடனேயே மாதவி மொழிந்தாள்.

''ஆனால் அண்ணார் இருக்கிறாரே!'' என்று உற்சாகத்துடன் மடக்கினாள் காந்தம்.

''அதனால்தான் அண்ணன் வந்து பார்த்து, அவருக்கும் பிடித்துப் போன பிறகு நிச்சயம் நடந்தது... தயவு செய்து மேலே மேலே பேசி என் கவனத்தைக் கலைக்காதே காந்தம். இந்த ஆங்கிலப் புத்தகங்களை மூன்று விதமாகப் பிரிக்க வேண்டியிருக்கிறது'' என்றாள் மாதவி.

ஆங்கிலம் என்றாலே காந்தத்துக்கு அலர்ஜி. அதை என்ன, ஏது என்று துருவமாட்டாள் என்ற நிச்சயத்தில் அவள் சொன்னது பார்த்து, காந்தத்தின் வாயும் மூடியது.

ஆனால் அதே நேரத்தில் கதிரேசன் வந்து சேர்ந்தான். உள்ளே வரும்போதே, ''திகம்பர சாமியார் செட் முடிந்து, அடுத்ததற்கு வந்து விட்டாயா மாதவி? 'கருங்குயில் குன்றத்துக் கொலை' இருக்கும். அதன் சமகாலத்துப் புத்தகங்களில், 'மலைக்கள்ளன்' உனக்குப் பிடிக்கும் என்று நினைக்கிறேன். எடுத்துப் போய்ப் படித்து விட்டுக் கொண்டுவா'' என்று கூறியபடி, வாயிலோடு நின்ற காந்தத்தைக் கவனியாமல் உள்ளே சென்றான்.

அவனைப் பார்த்து முறுவலித்துவிட்டு, ''இதோ! நீங்கள் சொல்லு முன்பாகவே, நானே பிரித்தும் வைத்து விட்டேன். வீட்டுக்குக் கொண்டு செல்ல எடுத்தும் வைத்துவிட்டேன்'' என்று, அவள் அப்போது அடுக்கிக் கொண்டிருந்த புத்தக வரிசையைக் காட்டி, அதிலிருந்து தனியாக எடுத்து வைத்திருந்த, 'மலைக்கள்ள'னையும் காட்டினாள்.

காந்தத்தின் கண்களில் ஒருகணம், கனல் வீசியது.

மாதவி அப்போது அடுக்கிக் கொண்டிருந்தது ஆங்கிலப் புத்தகங்கள் அல்ல! அவளது தந்திரத்தையும், அதில் தான் ஏமாந்ததையும் நினைக்கையில் காந்தத்திற்கு நெஞ்சு கொதித்தது. ஆனால், அதுபற்றி என்ன சொன்னாலும், தான்தான் அசடு வழியநேரும் என்பதை உணர்ந்து, வேறுவிதமாய்த் தாக்க முயன்றாள். ''புத்தகங்களை இரவல் கொடுக்க உங்களுக்குப் பிடிக்காதே! அதிலும் இது பழைய புத்தகம் வேறு! எக்குத்தப்பாய்ப் பிடித்துப் படித்தால் புத்தகம் பாழாகி விடுமே!'' என்று, கதிரேசனுக்குப் பிடித்த விதமாய்ப் பேசினாள்.

ஆனால், ''மாதவிக்கும் புத்தகங்கள் மீது மதிப்பு உண்டு, காந்தம். புத்தகத்தின் முதுகு ஒடிய, பின்புறம் மடக்கிப் பிடிக்க மாட்டாள். அதனால் உன் கவலை அனாவசியம்'' என்று கூறி மாதவியைப் பெருமிதமாய் நோக்கவே காந்தத்தின் சினம் இருமடங்காகியது.

அதற்குமேல், இவள் ஒருத்தி இருப்பதையே மறந்து விட்டவர்கள் போல் மாதவியும் கதிரேசனும் பேசத் தொடங்கி விடவும் — அதுவும், அவளுக்குப் புரியாத ஆங்கிலத்திலேயே பெரும்பாலும் பேசவும் காந்தம் ஆத்திரத்துடன் திரும்பிச் சென்றாள்.

வந்த கோபத்தை அடக்கமாட்டாமல் வழியோரம் கிடந்த உலக்கையை உதைக்க, உலக்கையின் இரும்புப் பிடியில் கால்பட்டு, வலி தாங்காமல் அப்படியே சற்றுநேரம் உட்கார்ந்து விட்டாள்.

இதற்கெல்லாம் நீதானடி பதில் சொல்லியாக வேண்டும் என்று கறுவியவள் மறுநாள் மாதவியை வேறு விதமாய்த் தாக்கினாள். ''நீங்கள் கிறிஸ்துவச்சியாக இருந்திருந்தால் இந்த நிலை வந்ததற்குக் கன்னிகாஸ்திரியாக ஆகியிருக்கலாம். இப்போது... இப்போதும் கூட, ராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து சன்னியாசினி ஆகிவிடலாம் இல்லையா?'' என்று இலவசமாக ஆலோசனை வழங்கினாள்.

உலக வாழ்வை விட்டுத் தன்னை விரட்டுவதில் காந்தத்திற்கு இருந்த அவசரம் வியப்பூட்ட, ''எனக்கு உலக வாழ்வு வெறுக்கும்போது நீ சொன்ன வழிமுறை பற்றி யோசிக்கிறேன்'' என்று உரக்க பதில் சொன்னாள்.

''இப்போது மட்டும் வெறுக்காமலா இருக்கும்? கணவன் செத்தபிறகு ஒரு பெண்ணின் வாழ்க்கையில் என்ன சாரம் இருக்க முடியும்?''

''எனக்குத் திருமணமே ஆகவில்லையே.''

''தாலி மட்டும்தானே கட்டவில்லை?''

இந்தப் பேச்சின் பின்பகுதியைக் கேட்டபடி, பக்கத்து அறையிலிருந்து உள்ளே வந்த கதிரேசன், ''காந்தம்!'' என்று சற்று அழுத்தத்துடன் அழைத்து அவளது பேச்சை நிறுத்தினான். ''உன்னை அம்மா கூப்பிடுகிறார்கள். போய் என்ன வென்று கேள்!''

''எனக்குக் கேட்கவில்லையே!''

''எனக்குக் கேட்டது. போய்ப் பார்'' என்றவன் அவள் அரைமனதாய் அகலவும், குரலைத் தணித்து, ''சின்னப் பெண், கிராமத்து வெகுளி. மன்னித்து விடு'' என்றான் மாதவியிடம்.

இவளா வெகுளி என்றது மாதவியின் மனம். சின்னப் பெண்ணாமே! குட்டி என்றாலும் பாம்புக்குட்டி; அதிலும்

விஷமுள்ளது என்று நினைத்தாலும், கதிரேசனிடம் அதைச் சொல்லாமல், மனதை மறைத்து வெறுமனே புன்னகை செய்தாள்.

வேண்டா வெறுப்பாய், மகாலட்சுமியைத் தேடி முன் கூடம் வரை சென்ற காந்தம், அங்கே அவர் இல்லை என்றதும் மீண்டும் திரும்பி வந்தாள்.

பின்புறத்திலிருந்து, மாதவிக்காக எதையோ பெரிய தம்ளரில் எடுத்து வந்து கொண்டிருந்தவரைக் கண்டதும், உள்ளூரப் பொறுமலுடன், ''நீங்கள் என்னைக் கூப்பிடவில்லைதானே, அம்மா?'' என்று வினவினாள்.

''குடித்து விடம்மா...'' என்று மாதவியிடம் தம்ளரைக் கொடுத்துவிட்டு, ''ஏன் கேட்கிறாய்?'' என்று நிதானமாகக் கேட்டார் அவர்.

''உங்கள் பிள்ளை நீங்கள் கூப்பிட்டதாகச் சொன்னார். ஆனால் கூப்பிட்ட சத்தம் என் காதில் விழவே இல்லை...''

''அழைத்தேன், காந்தம்! நான் அழைத்தது உனக்குக் கேட்கவில்லையோ என்றுதான் நேரேயே வந்தேன். போம்மா. உன் அம்மா அங்கே தனியாக முறுக்குக்கு மாவு இடித்துக் கொண்டு இருக்கிறாள். போய் உதவி செய் போ'' என்று அனுப்பி வைத்தார்.

மறுக்க மாட்டாமல், ''இதோ!'' என்று பளிச்சென்று திரும்பி நடந்தவள் கதவருகில் நின்று திரும்பி மகாலட்சுமியைப் பார்த்தாள்.

அதேசமயம், தற்செயலாக அந்தப் பக்கம் நோக்கிய மாதவிக்கு காந்தத்தின் முகத்தில் இருந்த கொடூரத்தைக் கண்டு அவளுக்குத். திகைப்பு உண்டாயிற்று; கூடவே, உள்ளூர ஓர் அச்சமும் ஏற்பட்டது.

# 9

பண்ணையார் மகனை மயக்கி, இந்தப் பண்ணை வீட்டு மருமகளாகி விடவேண்டும் என்பதே, திருச்சியில் இருந்து வந்திருக்கும் இந்த மேனா- மினுக்கியின் ஒரே குறிக்கோள் என்று காந்தம் நிச்சயமாக நம்பினாள். அதற்காகவே, அவனுக்குப் பிடித்தமான விஷயம் புத்தகங்கள் என்று கண்டுபிடித்து, அதை அடுக்கித் தருகிறேன் என்று இந்த வீட்டினுள்ளும் ஊடுருவி விட்டாள். ஆண்பிள்ளைகளுக்கென்ன! ஒருத்தி வெள்ளைத் தோலுடன் வந்து இளித்துக் கொண்டு நின்றால் தலைசுற்றிப் போகிறது. உடம்பு சரியில்லாதவள் போல வேடம் வேறு போட்டு அந்த ஏமாளி அம்மா கிழவியைப் பிடித்து விட்டாள். அப்பன்காரனுக்கு, சவண்டியில் உட்கார்ந்து கொண்டு ஊர் வழக்குகளைத் தீர்ப்பதிலும், ஊர்நலன் காப்பதிலுமாகப் பொழுது கழிந்து விடும்; சொந்த வீட்டில் நடக்கும் சிறுமைகளைக் காண அவனுக்குக் கண்ணும் இல்லை; மூளையும் இல்லை!

இந்த விஷயத்தைப் பற்றிப் பெரியவர் காதில் ஒரு வார்த்தை போடலாமா என்று யோசித்துவிட்டு, உடனேயே அந்த எண்ணத்தைக் காந்தம் கைவிட்டாள். இரண்டு பேரும் காதலித்தால், திருமணம் செய்து கொள்ளட்டும் என்று கிறுக்குத்தனமாய் உளறிவிட்டால், பெரும் ஆபத்தாக முடிந்து போகும்.

எனவே, இந்தத் திருச்சிக்காரியைத் தானேதான் விரட்டியாக வேண்டும் என்ற முடிவுக்குக் காந்தம் வந்தாள். அதற்கான முயற்சியில் தீவிரமாக இறங்கினாள்.

ஆனால், காந்தத்தின் ஊகத்தில் ஒரு பெரும் பிழை இருந்தது. கதிரேசனைக் கவர, மாதவி எந்தவித முயற்சியும் செய்யவில்லை. மாறாக, ஓர் உணர்ச்சிச் சூறாவளியில் சிக்கி நொந்து வந்திருந்த அவளுக்கு, மீண்டும் எந்த மன உளைச்ச லிலும் மாட்டிக் கொள்ள மனம் இல்லாததால், கதிரேசனை வெகுதூரத்தில் நிறுத்தி வைக்கவே முயன்றாள்.

ஆனால், அவளது ஒதுக்கம் அவனுக்கு ஒரு சவாலாகத் தோன்றியதோ, அன்றி, நண்பனுடைய தங்கையை நல்ல விதமாய் வாழவைத்துவிடும் ஆசையோ, அல்லது முதல் பார்வையிலேயே அவளிடம் ஈர்க்கப்பட்டானோ, இன்னும் மொத்தமாக இந்த மூன்றுமே சேர்ந்துதானோ, கதிரேசன் அவளை அவ்வாறு ஒதுங்கவிடுவதாக இல்லை.

மாதவி, கலகலப்பான பெண். எதிலும் ஓர் ஆர்வத்துடன் ஈடுபடுவாள். முனைந்து முன்னின்று செயல்படுகிற சுபாவம். அனாவசியமாய்க் கூச்சல், வெட்கம் என்று கதவுக்குப் பின் ஒளிந்து கொள்கிறவள் அல்ல.

எனவே இயல்பாகப் பேசி விடுவதும், உடனேயே சூடுபட்ட பூனைபோல ஒதுங்கி நத்தையாய்ச் சுருட்டிக் கொள் வதுமாக இருந்தாள்.

அவ்வப்போது, ஏதாவது புத்தகத்தைப் படிக்கப் பிரித்தா ளென்றால் காலம் போவது தெரியாமல், மாதவி வெகுநேரம் புத்தக அறையிலேயே இருந்து விடுவது உண்டு. அப்படிப் பட்ட சமயங்களில், கதிரேசன் திரும்பி வந்து விட்டிருந்தால், காலாற நடந்தபடியே அவன், அவளை வீட்டில் கொண்டு விடுவதும் கிருபாகரனோடு சற்றுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுத் திரும்புவதும் உண்டு.

அப்படி வரும்போது ஒருதரம், ஏதோ வளைக்குள் கால் வைக்கப் போனவளைக் கதிரேசன் கை பற்றி நிறுத்தினான். பற்றிய கை ஒருகணம் தாமதித்து விலகியிருக்கக் கூடும்.

தொடர்ந்து மூன்று தினங்கள் கதிரேசனின் கண்ணிலேயே அவள் படவில்லை. காலையில் அழைக்க வரும்போது, 'கொஞ்சம் வேலையிருக்காம்; லேட்டா அவங்களே போய்க் கொள்ளுவாங்களாம்' என்று வள்ளி மூலம் சொல்லி அனுப்பி னாள். மாலையிலும் கதிரேசன் வீடு திரும்பு முன்னரே, அவள் வேலை முடித்துச் சென்று விடுவாள்.

ஏதோ சேலை அவளுக்கு மிகவும் பொருத்தமாக இருப் பதாகச் சொன்னான் என்று சிலநாட்கள், பழைய சேலைக ளைக் கட்டி, இழுத்துப் போர்த்துக் கொண்டு அலைந்தாள். ஒருதரம் ஒரு புத்தகத்தை அவன் வைக்கும்போது, அதை அறியாமல் அவள் நிமிர இடித்துக் கொண்டார்கள். மறுநாள் காலையில் வள்ளி வந்து, 'அம்மா பிறகு போய்க் கொள்ளு வார்களாம்' என்றபோதே அவனுக்கு ஆத்திரம்.

மாலையிலும் அதேபோல், மாதவி சீக்கிரமாக வேலை முடித்துப் போய்விட்டாள் என்று அறிந்ததும் உடனே ஜீப்பை எடுத்துக் கொண்டு நண்பனின் வீட்டுக்கு விரைந்தான்.

தோட்டத்தில், பாத்திகளில் களை பவுண்டியால் கிளறி விட்டுக் கொண்டிருந்த வள்ளியை அழைத்து, ''வீட்டில் ஏதோ பலகாரம் இருக்கிறது. கிருபாவுக்கு கொண்டுபோய்க் கொடு என்று அம்மா சொன்னார்கள். மறந்து போய் விட்டுவிட்டு வந்து விட்டேன். வேகமாகப் போய் எடுத்து வருகிறாயா, வள்ளி? என் பழைய வேஷ்டி இரண்டு முத்துக்கருப்பனுக்கு எடுத்து வைத்தேன். என் அலமாரியில் கீழ்த்தட்டில் இருக்கி றது. அம்மாவிடம் சொல்லி, அதையும் வாங்கிக் கொண்டு வந்துவிடு. நீ போ.. நான் மாதவியிடம் சொல்லிக் கொள்கி றேன்'' என்று அவளைத் தன் வீட்டுக்கு அனுப்பி வைத்தான்.

தன் கணவனுக்கு வேஷ்டி என்றதும் உற்சாகத்துடன் சென்ற வள்ளி கண் மறையும் வரை பார்த்திருந்து விட்டு, வீட்டினுள் சென்றான்.

கருத்து எங்கோ அலைய, கண்ணால் மட்டும் டி.வி.யை வெறித்துக் கொண்டிருந்த மாதவியின் முன் சென்று மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டு நின்றான்.

தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்து, ''வள்ளி...'' என்று தடுமாறி விட்டு, ''எனக்கு முக்கியமான வேலையிருக் கிறது'' என்று உள்ளே செல்ல மாதவி முயன்றாள்.

குறுக்கே கைநீட்டி அவளைத் தடுத்துவிட்டு, ''எவ்வளவு முக்கியமான வேலை என்பதைத்தான் இப்போது பார்த் தேனே!'' என்றான் அவன் ஏளனமாக. ''உன் முக்கியமான வேலையை விட, நான் உன்னிடம் சொல்ல வந்தது மிகவும் முக்கியமானது. அதனால், அதைக் கேட்டுவிட்டு, அதன்பிறகு நீ உன் முக்கியமான வேலையைப் பார்க்கப் போகலாம் உட்கார்'' என்றான் அதிகாரமாக.

மறுப்பவள் போல அவனை முறைத்துப் பார்த்துவிட்டு, அவன், பார்வை தளராமல் நிற்கவும், ''சொல்வதைச் சீக்கிரம் சொல்லுங்கள்'' என்றுரைத்து விட்டு, முன்பு அமர்ந்திருந்த பிரம்பு நாற்காலியிலேயே தொப்பென அமர்ந்தாள்.

ஒருகணம் அவளை விசித்திரமாய் நோக்கிவிட்டுத் தானும் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அவள் எதிரே கதிரேசன் அமர்ந்தான். ''மாதவி, சற்றுப் பொறுமையோடு நான் சொல்வதை நீ கேட்க வேண்டும்... நம் நாட்டுப் பெண்கள் எவ்வளவோ முன்னேறி விட்டார்கள். விதவைகளே சாதாரணமாக மறுமணம் செய்கிற காலம் இது. இப்போது போய், நீ ஒரு 'திலகவதி' ஆக முயற்சிப்பது படு பாடாவதித்தனமாக எனக்குப் படுகிறது...''

வெடுக்கென நிமிர்ந்து, ''நான் திலகவதியாக முயற்சிக்கி றேனா? நான் அப்படி உங்களிடம் எப்போது சொன்னேன்?'' என்று சினக் குரலில் மாதவி கேட்டாள்.

''வாய் வார்த்தையாகச் சொன்னால்தானா? இந்த இறுக்கம், ஒதுக்கம்... இதெல்லாம் வேறு எதற்காக?''

எதையோ சொல்ல வாய் திறந்து விட்டு, மீண்டும் வாய்மூடிச் சில கணங்கள் யோசித்துவிட்டு, மாதவி சொன்னாள். ''திலகவதியாருடைய வருங்காலக் கணவராக நிச்சயிக்கப்பட்டிருந்த கலிப்பகையார் இறந்தபோது, அவர்கள் இருவருக்கும் திருமணம் நடப்பதாக இருந்தது'' என்றாள் நிதானமாக.

இப்போது திகைத்தது கதிரேசன். ''மாதவி!''

''எனக்கு அப்படி இல்லை!''

''புரியவில்... அப்படியானால் திருமணம் ஏற்கனவே நிறுத்தப்பட்டு விட்டதா? ஏன் நிறுத்தினாய், மாதவி? நீயே நிறுத்தி விட்டு ஏன் இந்த சோகம்?''

திருமணம் நின்றது என்றால் நிறுத்தியது அவளாகத்தான் இருக்க வேண்டும் என்கிறானே! தன்னையறியாமல் முறுவல் அரும்ப, ''நான் நிறுத்தவில்லை'' என்றாள் சுருக்கமாக.

''என்னது! நம்ப முடியவில்லையே! மிஸ்டர் வினோதனா, திருமணத்தை நிறுத்தினார்? ஏன்? உங்களிடம் என்ன குறை கண்டாராம்?''

அவனது கோபம் இதமாய் வருட, ''ஒரு பெரிய பணக்காரப் பெண் — கோடீசுவரருடைய வாரிசை மணக்கும் வாய்ப்பு கிட்டும்போது, மாதக் கூலிக்கு மாரடிக்கும் ஒருத்தியை மணப்பது மடத்தனம் அல்லவா? ஒருவன் தன் எதிர்காலத்தையும், பத்து இருபது... ஐம்பது ஆண்டு கழித்துக் கூட எப்படி இருப்போம் என்று எண்ணிப் பார்க்க வேண்டாமா?'' என்று உதட்டோரம் ஓர் இகழ்ச்சி வளைவுடன் வினோதனின் வார்த்தைகளைப் படித்தவளின் முகம் உடனே வாடியது. ''ஐம்...பது ஆண்டுகள்! எவ்வளவு நீண்டகாலம்!

அடுத்த மணி அளவுகூட இருக்கப் போவது இல்லை என்று தெரியவில்லையே!'' என்றாள் முகம்வாட.

ஒரு வினாடி மவுனத்தின் பின், ''அடுத்தவன் பணம் அவ்வளவு பெரிதாய்த் தோன்றியதாமா? தன் வலிமையில் நம்பிக்கை இல்லையாமா?'' என்றான் கதிரேசன்.

விரிந்த விழிகளால் அவனை நோக்கிவிட்டு, ''இருந்தது. ஆனால்...'' என்றவளுக்கு வினோதனின் அன்றையப் பேச்சு நினைவு வந்தது.

'மனிதனுக்குத் தொலைநோக்கு வேண்டும், மாதவி. வருங்காலத்தைப் பற்றி யோசிக்கத் தெரியவேண்டும். உன்னை மணந்தால், நம் இருவர் சேமிப்பையும் கொண்டு... ஒரு நல்ல ஃப்ளாட் வாங்கலாம். பிரிட்ஜ், டி.வி. வாங்கலாம். கஷ்டப்பட்டு சேர்த்தும் தவணையிலுமாக ஒரு மாருதி 800 கூட வாங்கலாம்தான். சேமித்து சேமித்து ஒவ்வொன்றாக வாங்க வேண்டும். ஆனால், லீலாவை மணந்தால்... ஃப்ளாட் டுக்குப் பதில் பங்களா கிடைக்கும். மாருதி 800க்குப் பதிலாக எஸ்டீம், சியாரா இரண்டுமே கிடைக்கும். எல்லாமே மொத்த மாக உடனேயே கிடைக்கும். இன்னமும், இரண்டு தலைமு றைக்குத் தேவையான சொத்து, நல்ல தொழில்... யோசித்துப் பார்! இதையெல்லாம் விட்டுவிட்டு உன்னை மணப்பது முட்டாள்தனம் இல்லையா?' என்று அவளிடமே கேட்டான் வினோதன்.

'நிச்சயமாக!' என்றாள் அவள்.

''நீ புத்திசாலி! புரிந்து கொள்வாய் என்று எனக்குத் தெரியும், மாதவி. ஆகா! நான் யோசித்து முடிவு செய்தது சரியாகவே இருக்கிறது பார். தப்புதண்டாவுக்குப் போகாமல் இருந்தால் நம் அழகுக்கு ஒரு கொழுத்த பணக்காரப் பெண் வருவாள் என்று நினைத்தது எவ்வளவு சரியாக இருந்திருக்கி றது!'' என்று தன்னைத்தானே பாராட்டிக் கொண்டான் அவன்.

''என்னைப் பற்றி... நம் திருமண நிச்சயம் பற்றி உங்கள் புகுந்த வீட்டாருக்குத் தெரியுமா?'' என்று கொஞ்சம் குத்தல் குரலில் மாதவி வினவினாள்.

''ச்ச. தெரியும். அதை ஒரு மாதிரி சமாளித்து விட்டேன். ஆனால், பொறுத்தது பொறுத்தேன்; மேலே ஓர் ஆறு மாதம் பொறுத்துக் கொண்டு இருந்திருந்தால் இந்தப் பிரச்சினைக்கே இடம் இருந்திராது! வயது இருபத்தொன்பது முடிந்துவிட்டதே. முப்பது தாண்டிவிட்டால் கிழவன் என்று தள்ளி விடுவார்களோ என்று கொஞ்சம் பயந்து விட்டேன். இவ்வளவு காலம் வராத பணக்காரி, இனிமேல் மட்டும் எங்கிருந்து வரப்போகிறாள்; நாளைய பலாக்கனிக்காக, இப்போது கிடைக்கக்கூடிய 'களாக் கனி'யை விட்டுவிடக் கூடாது என்று கொஞ்சம் அவசரப்பட்டு விட்டேன். ஆனால், உன் அண்ணனும் நீயுமாகத்தான் வந்து ரொம்பவும் கேட்டீர்கள் என்று சொன்னதும் மாமா சமாதானம் ஆகிவிட்டார். உன்னிடம் யாரேனும் ஏதாவது கேட்டால், நீயும் அப்படியே சொல்லி விடு மாதவி'' என்று வினோதன் கூறவும் மாதவிக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்த அளவுக்கு ஒருவன் 'தன்'னிலேயே மூழ்கியிருக்க முடியுமா? இந்தப் பொய்யைச் சொல்வது, மாதவி தன்னைத் தானே இழிவுபடுத்திக் கொள்வது ஆகாதா என்று கூடவா யோசிக்க மாட்டான்?

மாதவியின் மவுனத்தைக் கவனியாமல், வினோதன் சுகமாக அனுபவித்துப் பெருமூச்சு விட்டான். ''தேனிலவுக்கு அமெரிக்கா போய்ச் சுற்றிப் பாருங்கள் என்கிறார் மாமனார்.''

விசித்திரமான வகையில், வேதனையைவிட மாதவிக்கு வேடிக்கை பார்க்கும் உணர்ச்சிதான் அதிகம் இருந்தது. ''இப்போது, இங்கே என்னோடு தனிமையில் பேசிக் கொண்

டிருப்பதை உங்கள் மாமனார் தப்பாக நினைக்க மாட்டாரா?'' என்று சீரியசாகக் கேட்டாள்.

''சேச்சே! மாட்டவே மாட்டார். எப்படியும் திருமண முறிவு பற்றிச் சொல்ல உன்னை ஒருதரம் சந்தித்துத்தானே ஆகவேண்டும்? உன்னை மலைக்கோட்டையிலேயே சந்தித்தி ருப்பேன். ஆனால் நீ அதிர்ச்சியில் கத்தி ரகளை செய்து விட்டால் எனக்குக் கேவலமாகி விடுமே என்றுதான் இங்கே ஆளில்லாத இந்த இடத்துக்கு அழைத்து வந்தேன்...!''

வெறும் பதர்! இவனைப் போய் மாதவி எவ்வளவு உயர்வாக எண்ணினாள். அவளது எதிர்காலத்தையே இவனி டம் ஒப்படைக்க நினைத்தாளே!

''என் திருமணத்துக்கு நீ கட்டாயம் வரவேண்டும் மாதவி. அப்போதுதான், எப்பேர்ப்பட்ட அழகியைத் தியாகம் செய்து நான் அவளை மணக்கிறேன் என்பது லீலாவுக்குப் புரியும். இந்தப் பணக்காரக் கழுதைகளுக்கெல்லாம் மண் டையை அவ்வப்போது தட்டி வைக்காவிட்டால் எகிறத் தொடங்கி விடுவார்கள். சரி, வா. போகலாம். உன்னைக் கொண்டு போய் விடுகிறேன், கடைசித் தடவையாக!

மறுக்கத்தான் மாதவிக்கு ஆசை. ஆனால் நகரத்துக்கு வெளியே, வெகுதூரம் அழைத்து வந்திருந்தான். வந்த இடம் பஸ் வரும் பாதையும் அல்ல. எனவே பேசாமல் பைக்கில் ஏறி அவன் பின்னே அமர்ந்தாள்.

ஆனால் அவன் சொன்ன 'கடைசித் தடவை!' அது மெய்யாகிப் போயிற்று.

வரப்போகும் மனைவியின் செல்வ வளங்களைப் பற்றித் திரும்பித் திரும்பிப் பார்த்துப் பெருமை பேசியவன் திருப்பத் தில் வந்த லாரியைக் கவனிக்கவில்லை! நேரடி மோதலில் வினோதன் நசுங்கிவிட, தூக்கி எறியப்பட்டு மாதவி விழுந்த இடம் ஒரு வைக்கோல் போர்!

சில நிமிட நேரம் அங்கே அமைதி நிலவியது.

மாதவிக்கு உள்ளூர ஒரே ஆச்சரியம். இதையெல்லாம் உடன்பிறந்த அண்ணனிடம் கூட அவள் இதுவரை சொன்ன தில்லை. இவனிடம் இப்படிக் கொட்டிவிட்டாளே!

லேசாகத் தொண்டையைச் செறுமிக் கொண்டு, ''இதை நீ முன்பே சொல்லியிருக்கலாமே மாதவி?'' என்றான் கதிரே சன்.

''எப்படிச் சொல்வது? சம்பந்தப்பட்ட மனிதர் இறந்து விட்டார். தன்னை நியாயப்படுத்திக் கொள்ள இயலாத நிலைக்குப் போய்விட்ட ஒருவரை, அவர் பேராசைக்காரர், நயவஞ்சகர் என்று எப்படிச் சொல்லுவேன்? ஆனால் ஒவ் வொருவராகத் துக்கம் விசாரிக்கும்போதும், வினோதனை உயர்வாகப் பேசும்போதும் எனக்கு எப்படி இருக்கும் தெரி யுமா? இல்லை, இல்லை என்று அலறவேண்டும் போல மனம் துடிக்கும். ஆனால் ஒன்றும் பேசமுடியாத நிலை. முக்கியமாக, உண்மையை வெளியே வாய்விட்டுச் சொல்ல முடியாதது. எவ்வளவு துன்பமாக இருந்தது தெரியுமா? வாய் பேச முடியாதவர்களைப் பற்றி நான் முழுமையாகப் புரிந்து கொண் டதே அப்போதுதான். இன்னும் கொஞ்சகாலம் திருச்சியில் இருந்திருந்தால் எனக்குப் பைத்தியம்கூடப் பிடித்திருக்கக்கூ டும்.''

''கிருபாவுக்குத் தெரியுமா?''

''இல்லை. சொல்லவில்லை... சொல்லும் திடம் அப் போது எனக்கு இருக்கவில்லை!... வெளியே பட்ட அடி எனக்குக் கொஞ்சம்தான், கதிரேசன். ஆனால் உள்ளே? என் தன்னம்பிக்கை கிட்டத்தட்ட நசித்துப் போயிற்று... சொல்லுங் கள், இனி ஓர் ஆண்மகனை நான் என் மனதார எப்படி நம்ப முடியும்?''

நான் உன்னையும் நம்பவில்லை என்று நேரடியாகச் சொல்லாமல், தன் ஒதுக்கத்தின் காரணத்தை அவள் விளக்கிய நேர்த்தியில் கதிரேசனின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

சற்றே முன்புறம் சாய்ந்து, ''மாதவி, கூடைச் செங்கல்லும் பிடாரிகள் என்பார்களே, அதுபோல, எல்லா ஆண்களையும் நீ ஒரே மாதிரி நினைக்கக் கூடாது. இப்போது... இப்போது கடையில் ஒரு சிவப்பு நிறச் சேலை வாங்குகிறாய் என்று வைத்துக் கொள்வோம். கவனியாமல் தரம் குறைந்ததை வாங்கி விட்டாய்; கிழிந்து போயிற்று. அதற்காக, எல்லாச் சிவப்பு சேலைகளையுமே ஒதுக்கி விடுவாயா? பட்டும் ஜரிகையுமாக, அழுத்தமான நெசவில் காஞ்சீபுரம் சேலை கிடைத்தால் வாங்கிக் கட்டிக் கொள்ள மாட்டாயா?'' என்று அவன் கேட்கவும், தன்னை மீறி, மாதவியின் முகத்தில் ஒரு முறுவல் மெல்ல அரும்பி விரிந்து பிரகாசித்தது.

''நீங்கள் வக்கீலுக்குப் படித்திருந்தால், உலகப் புகழ் பெற்றிருப்பீர்கள்'' என்று கூறியபடி எழுந்தாள். ''காபி குடிக்கிறீர்களா? என் காபி சில சமயங்களில் நன்றாகக் கூட இருக்கும்!'' என்றாள் புன்னகையோடு.

''சில சமயங்களில் மட்டுமல்ல. எப்போதுமே, உன் காபி நன்றாக மட்டும்தான் இருக்கும்'' என்று கதிரேசன் அழுத்தம் திருத்தமாக அறிவிக்க, இருவருக்குமே சிரிப்பு வந்தது.

காபி அருந்துகையில் வள்ளி காணோம் என்று மாதவி குறிப்பிட, அவளைத் தாயாரிடம் அனுப்பியது பற்றிக் கதிரேசன் தெரிவித்தான்.

''உன்னிடம் வெளிப்படையாகப் பேச வேண்டியிருந்தது. அவளை வைத்துக் கொண்டு எப்படிப் பேசுவது? அதனால்தான் பலகாரம் வாங்கி வரச்சொல்லி ஆசைகாட்டி அனுப்பி விட்டேன்'' என்றான்.

"என்ன பலகாரம்? என்ன வேஷ்டி?" என்று உங்கள் அம்மா திணறித் திண்டாடப் போகிறார்கள், பாவம்!" என்றாள் மாதவி.

"மாட்டார்கள். நான் சொல்லி அனுப்பினேன் என்றதுமே, ஏதோ விஷயம் இருக்கும் என்று ஊகித்து, அவளை அங்கே கொஞ்ச நேரம் உட்கார வைத்திருந்து விட்டு, வீட்டில் எப்போதும் இருக்கும் ஏதாவது பலகாரத்தையும், ஏதாவது இரண்டு வேஷ்டிகளையும் கொடுத்து அனுப்பி விடுவார்கள்... நினைவில்லை! அன்று கன்னியாஸ்திரி அது இது என்று காந்தம் உன்னிடம் பேக்கு மாதிரி கேட்டுக் கொண்டிருந்த போது அம்மா கூப்பிடுகிறார்கள் என்று அவளை அனுப்பினேனே, எதிரேயே வந்துவிட்ட போதும் அம்மா எப்படி சமாளித்தார்கள்" என்றான் அவன் பெருமையாக.

விழிகள் விரிய, "அம்மாடியோவ்! நீங்கள் இருவரும் இவ்வளவு திரிசமன் செய்வீர்களா? உங்களிடம் மிகுந்த எச்சரிக்கையோடு பழகவேண்டும் போல இருக்கிறதே!" என்றாள் மாதவி.

"அம்மா சாது மாதிரி. என் விருப்பப்படியும், அப்பாவின் விருப்பப்படியும் ஆடுகிறவர்கள். ஆனால், நான்... என்னிடம் நீ எச்சரிக்கையோடு இருக்க வேண்டியதுதான்" என்று முறுவலித்தபடி கதிரேசன், அவளை விழுங்குவது போலப் பார்க்கவும், மாதவியின் முகம் சிவந்து நெஞ்சு படபடத்தது.

மேலே என்ன சொல்வது என்று புரியாமல் மாதவி தடுமாறிய அந்தத் தருணத்தில், வள்ளியின் குரல் கேட்கவும், ஒருபுறம் நிம்மதியாகவும், அதேசமயம் சற்று ஏமாற்றமாகவும் மாதவி உணர்ந்தாள்.

அன்றிரவு படுக்கச் சென்று வெகுநேரமான பிறகும் மாதவிக்குத் தூக்கமே வரவில்லை; எவ்வளவோ முயன்றும்

கூட. ஆழ்ந்த மூச்சு எடுத்து, வெளிவிட்டு பிராணாயாமம் செய்து பார்த்தாள். ஒன்றிரண்டு பலநூறுகள் எண்ணிப் பார்த் தாள். சுவாமி மந்திரமும் கூடச் சொல்லிப் பார்த்தாள். என்ன செய்தும் தூக்கம் மட்டும் வரவே மாட்டேன் என்றுவிட்டது.

இது அவளுக்குப் பழக்கமற்ற ஒன்று. எப்படி விழித்திருக் கையில் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பாளோ, அதேபோல படுத்ததும் ஆழ்ந்து உறங்குவதிலும் அதே முழுமைதான். மனது மிகவும் வேதனைப்படும்போது தவிரத் தூக்கம் அவ ளுக்கு வஞ்சனை செய்ததே கிடையாது.

ஏன், வினோதன் அவளை மணக்கக் கேட்ட அன்றுகூட, வழக்கமான பத்தரை மணிக்கு டாணென்று உறங்கி விட் டாளே! இப்போது மட்டும் என்ன ஆகிவிட்டது என்று எண்ணும்போதே அவளுக்குச் சுரீலென்று ஒன்று உறைத்தது.

வினோதனை அவள் மணக்க முடிவு செய்தது ஒரு தொழில் முறை ஒப்பந்தம் போன்றதுதான். அவனைப் போல முழுக்க முழுக்கப் பணத்தை அடிப்படையாக வைத்து அவள் முடிவெடுக்கவில்லைதான். படிப்பு, தோற்றம், பழகும்விதம், பொருளாதார நிலை என்று எல்லாவற்றிலும் பொருத்தம் என்று நினைத்தே திருமணத்துக்குச் சம்மதித்தாள்.

அதனால்தான் இந்தக் கிளுகிளுப்பு, படபடப்பு, வெட் கம் எதையுமே முன்பு அவள் உணரவில்லை போலும்!

இந்தக் கிளுகிளுப்பு! அழையாமல் கொள்ளாமல் கதிரே சனின் உருவம் மெய்போல மனக்கண்ணின் முன் தோன்றி யது! கன்னங்கள் சூடேறிச் சிவப்பதை அந்த இருளிலும் அவளால் உணர முடிந்தது.

# 10

ஏதேதோ நினைத்துத் துள்ளிய மனதை மிகவும் சிரமப்பட்டு மாதவி அடக்கி வைத்தாள். காதலிப்பதாகக் கதிரேசன் வாய் திறந்து ஒருவார்த்தை சொல்லவில்லை என்பதைப் பலமுறை அவள் தனக்குத்தானே நினைவுபடுத்திக் கொண்ட பிறகே, ஓரளவேனும் அவள் மனம் கட்டுக்குள் அடங்கி அமைதியாயிற்று.

இவ்வளவு ஆசைப்பட்டு விட்டு, நண்பனுடைய தங்கை என்கிற அளவு மட்டும்தான் என் அன்பு என்று கதிரேசன் கூறிவிட்டானானால்?

ஆனால், அப்படி எதுவும் கூறிவிடும் எண்ணம் அவனுக்கு இல்லை என்பதை, அவனது கண்ணும் முகமும் உணர்த்திவிட, மாதவியின் மனம் சிறகடித்துப் பறக்கலாயிற்று.

அன்று கதிரேசனும், கிருபாகரனுமாகச் சேர்ந்து செய்த ஒரு முயற்சியின் விளைவைப் பரிசோதிக்கச் செய்வதாக இருந்ததால் கிருபாகரனும் அவர்களோடு கூடவே வந்தான்.

வந்ததற்கு, இறங்கி வந்து ஏதேனும் சாப்பிட வையாமல் விட மகாலட்சுமிக்கு மனம் வருமா?

கெட்டித் தேங்காய்ப் பாலில் ஊறிய ஆப்பத்தை ரசித்து உண்ணும்போதே அண்ணனின் கவனம் சிதறுவதைக் கண்டு மாதவி அவனது பார்வை வழி தன் கண்களையும் செலுத்தினாள்.

அவள் எதிர்பார்த்தது போல அங்கே காந்தம்தான் நின்று கொண்டிருந்தாள். சமீபத்தில் வந்த சினிமா கனவுக்காட்சி ஒன்றில் படுகவர்ச்சியாக நின்ற கதாநாயகியின் அப்பட்டமான காப்பி!

அமர்ந்திருந்த நிலையாலும், சுவர்களின் அமைப்பாலும் மற்றவர் கண்ணில்படாமல், கிருபாகரனுக்கு மட்டுமான தேவி தரிசனம்!

கதிரேசனின் பார்வையைத் தொடர்ந்து, சற்றே கழுத்தை வளைத்து, சிரமப்பட்டு பார்த்ததால்தான் மாதவியின் கண்ணில் காந்தம் பட்டது. அல்லது, அவள் அங்கே வந்து நின்றதை மற்றவர்களைப் போல அவளும் அறியமாட்டாள்.

என்னவோ மனதை மிகவும் உறுத்தியது.

இந்தக் காந்தம் தந்தை பேர் தெரியாதவள் என்றோ, ஒரு சமையல்காரி மகள் என்பதாலோ, அவள் தன் அண்ணனுக்குப் பொருத்தமற்றவுள் என்று மாதவி கருதவில்லை.

'பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்' என்பதன்படி பிறவியினால் காந்தத்தை அவள் சற்றும் மட்டமாக நினைக்கவில்லை.

ஆனால், இந்தக் காந்தத்தின் சில பேச்சு முறைகள் அவளுடைய மென்மையான அண்ணனைக் குத்திக் கிழித்து விடக்கூடும் என்று மாதவி மிகவும் அஞ்சினாள்.

தன் அச்சத்தை மாதவியால் யாரிடமும் வாய்விட்டுச் சொல்லவும் முடியவில்லை.

யாரிடம் சொல்வது?

காந்தம் சின்னப்பெண், 'பேக்கு' என்கிறான் கதிரேசன்! குழந்தையிலிருந்து அந்த வீட்டில் கூடவே வளர்ந்து பார்த்த பாசம் அவனுக்கு.

அதே போலவே, குழந்தையிலிருந்தே கண்பார்வையிலேயே அவளை வளர்த்த அன்பு மகாலட்சுமிக்கும் இருந்தது.

கிருபாகரனோ, மதிமயங்கி நின்றான்.

இவர்களில் யாரிடம் மாதவி தன் நெருடலைக் கூறமுடியும்? யாரிடமாவது காந்தம் தன் விஷப் பற்களை ஒருதரமே

னும் காட்டியிருந்தால் அல்லவோ அவர்களுக்கும் கொஞ்சமே னும் சந்தேகம் தோன்றக்கூடும்? காந்தம்தான் இவர்கள் ஒவ்வொருவரிடமும் அவரவருக்குத் தக்கபடி உத்தமி வேடம் போடுகிறாளே! இவர்களில் யாரிடம் போய்க் காந்தத்தைப் பற்றிக் குறை கூறினாலும், அது கடைசியாக மாதவியின் சின்ன புத்தியாகவே தோன்றிவிடும் அபாயம் இருந்தது.

அப்படித் தன்னை யாரும் தவறாக எண்ணும்படி விடுவ தற்கு — அதிலும், கதிரேசன் தன்னிடம் சிறு குறை காணும்படி விடுவதற்கும் மாதவிக்கு மனம் இல்லாததால், காந்தம் பற்றிய தனது ஐயப்பாடுகளை அவள் தனக்குள்ளேயே வைத்துக் கொண்டாள்.

அன்றைய தினம், மாதவி தன் வாழ்நாளில் மறக்க முடியாத பல நிகழ்ச்சிகள் நடந்தன.

முதலாவதாக, மாதவி அந்த வீட்டுத் தலைவரான பண்ணையாரை, அங்கு வேலை செய்யத் தொடங்கி கிட்டத் தட்ட ஒரு மாதம் முடிகிற நாளில் முதல் முறையாகச் சந்தித்தாள்.

அப்போதும் அவரை அழைத்துப் போவதற்காக, நாலைந்து பேர் அவரோடு கூடவே வந்து காத்திருந்தார்கள். வெளிமுற்றத்தில் அவர்கள் காத்திருக்க, வேறு ஒருவருடன் பேசியபடியே பண்ணையார் உள்ளே வந்தார்.

அடுக்கின் மேல்தட்டில் சில புத்தகங்களை அடுக்குவதற் காக, மாதவிக்கு ஓர் ஏணி தேவைப்பட்டது. அதற்காக மகாலட்சுமியைத் தேடி அவள் வந்தபோதுதான், பண்ணை யார் சிவனணைந்த பெருமாளை அவள் பார்க்க நேர்ந்தது.

''இதோ பார், கேசவா! நீ இதையெல்லாம் கதிரேசனிடம் போய்ச் சொல்லு. ஏனெனில் திருமணம் அவனுக்குத்தான். அவன் ஒத்துக் கொண்டால்...''

''அய்யா ஒருவார்த்தை சொன்னால், சின்னவர் தட்ட மாட்டார் என்பது ஊரறிந்த உண்மை. அதனால்...'' என்ற வரை இடைமறித்து, ''அதனால்தான் சும்மா சும்மா அந்த மாதிரி வார்த்தைகளை என் மகனிடம் நான் சொல்லு வதில்லை'' என்று சொன்ன அந்தக் கணத்திலேயே, மாத விக்கு அவரிடம் பெருமதிப்பு உண்டாகி விட்டது.

அவர் போகட்டும் என்று மாதவி ஒதுங்கி நிற்க, அவள் புறமாய் ஒரு பார்வையைச் செலுத்தியவர், ''ஓகோ, நீதான் புத்தக அறைச் சீரமைப்பாளியா, அம்மா? என் மகன் தகுந்த ஆளிடம்தான் பொறுப்பை ஒப்படைத்து இருக்கிறான். நேற்று பார்த்தேன். முன்பெல்லாம் ஒரு புத்தகம் தேவைப்படுகிறது, எடுத்துப் பார்க்கலாம் என்றால் அந்தப் புத்தகத்தைத் தேடிப் பிடிக்கவே அரைநாள் ஆகும். இப்போதானால் வினாடிகளுக் குள் வேண்டியதை எடுத்து விடலாம் போல, ஒரு குட்டி வாசகசாலை மாதிரி அடுக்கி விட்டாயே! பாராட்டுகள்!'' என்று கூறவும் அவளுக்கு கூச்சத்தால் முகம் சிவந்து விட்டது.

''பா... பாராட்டுக்கு நன்றி சார்...'' என்று தட்டுத் தடுமாறினாள் அவள்.

''காலம் தாழ்ந்த பாராட்டு, மாதவி. எப்போது நீ புத்தகங்களுக்கு முதலில் பழுப்புக் காகித அட்டையிட்டு, அட்டையின் முதுகுப்புறம் தெளிவாகப் பெயர் எழுதி, அது பாழாகி விடாமல் கண்ணாடித்தாள் அட்டையிட்டாயோ, அன்றைக்கே பாராட்டியிருக்க வேண்டும்.''

''கண்ணாடித்தாள் அட்டை ஐடியா உங்கள் மக னுடையது'' என்று உண்மையை மறையாது உரைத்தாள் மாதவி.

பண்ணையாரின் கண்களில் எப்போதும் இருந்த சிறு நகை இப்போது இன்னமும் தெளிவாக ஒளிர, ''ஐடியா மட்டும் இருந்து என்னம்மா செய்வது? வெறும் சிவம் என்ன

யோசித்து என்ன பயன்? சக்திதானே அதைச் செயல்படுத்த தேவைப்படுகிறாள்'' என்றவர், கையில் ஏதோ பணத்துடன் வந்த மனைவியைக் காட்டி, ''பார், என்னுடைய சக்தியை! நீ கூட நினைத்திருப்பாய், இந்தப் பண்ணையார் மெய்யா கவே இந்த வீட்டில்தான் இருக்கிறாரா என்று சந்தேகம்கூடப் பட்டிருப்பாய்! ஒருமாதமாய்க் கண்ணிலேயே படாத ஆள் ஆயிற்றே! பார், என்னுடைய சக்தி இங்கே முழுமையாக என் பொறுப்பை எல்லாம் ஏற்று, நல்லபடியாகச் செயல்பட்டு வருவதால்தான் நானும் ஊர் வேலை, பொது வேலை என்று வெளியிலேயே சுற்றிக் கொண்டு இருக்க முடிகிறது'' என்று உரைக்கவும், மகாலட்சுமியின் முகத்தில் வெட்கமும் பெருமித மும் சுடர்விட்டன.

மனைவியிடமிருந்த தட்டிலிருந்து ஒரு தம்ளரைத் தான் எடுத்துக் கொண்டு, மற்றதை எடுத்துக் கொள்ளும்படி உடன் வந்தவரிடம் ஜாடை காட்டினார்.

கணவர் பானத்தை ரசித்துக் குடிப்பதைச் சில கணங்கள் பிரியமாகப் பார்த்திருந்துவிட்டு, ''என்னதான் பொறுப்பேற்று நடத்தினாலும், சில விஷயங்களை நீங்கள்தானே பார்த்தாக வேண்டியிருக்கிறது? அதற்காகவாவது வெளி வேலைகளைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாமில்லையா?'' என்றார் மகாலட்சுமி.

ஒரு சிமிட்டலோடு, மாதவியிடம் மீண்டும் திரும்பினார் பெரியவர். ''ஒரு முக்கியமான அறிவுரை சொல்கிறேன்; மனதில் அடிக்கோடிட்டுக் குறித்து வைத்துக் கொள் மாதவி, ஆண்களுக்கு நாற்பது வயதில் நாய்க்குணம், அறுபது வயதில் கிறுகிறுப்பு என்று சொல்வார்கள். வேலைப் பொறுப்பை பிள்ளை ஏற்றுக் கொண்டுவிட்டான். இனி வீட்டில் சும்மா சோம்பியிருந்தால் என்ன ஆகும் தெரியுமா? இது சொத்தை, அது சொள்ளை என்று ஆயிரம் குற்றங்களைத் தேடிப்பிடித்துச்

சொல்லச் சொல்லும். மகன் வேலையில் குற்றம் காணும். கடைசியாக, வீடு அவர்களுக்கு மட்டுமல்லாமல் வீட்டில் எல்லோருக்குமே நரகமாகி விடும்! அதனால், நாற்பது வயது தாண்டினாலே, இந்த ஆண்களை வெளியே பற்றி விட்டு விடுவதுதான் நல்லது'' என்று கூறிச் சிரித்தார்.

அதற்குள் வெளியே இருந்து யாரோ ''அய்யா'' என்று குரல் கொடுக்க, குரல் வந்த திக்கு நோக்கி ''இதோ'' என்று விட்டு மீண்டும் உள்ளே திரும்பினார். ''பாரம்மா, உன் அ....'' என்றவர், மனைவியின் முகத்தில் எதையோ படித்து, ''இந்த என் வீட்டம்மா எடுக்கும் எந்த முடிவும் மிகவும் சரியானதா கவே இருக்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கி றது. துணைக்குத் தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளை வேறு இருக்கிறான். பிறகென்ன?'' என்றவர் மனைவியிடம் திரும்பி, ஒரு மென்முறுவலோடு, ''வரட்டுமாடா?''வுடன் மாதவியி டம் தலையசைத்து விட்டு மடமடவென்று வெளியே நடந்து விட்டார்.

மகாலட்சுமியின் முகத்தில் இருக்கும் வாடாத புன்னகை யின் ரகசியம் மாதவிக்குக் கொஞ்சம் புரிந்தாற்போல இருந் தது.

தன் தேவையை மகாலட்சுமியிடம் தெரிவித்து விட்டு, மீண்டும் புத்தக அறையை நாடிச் சென்றாள்.

அப்படிச் செல்லும்போது, கதிரேசனுக்கு பெண் பேசி வந்த தரகர் கூறிய வார்த்தைகள் மாதவியின் மன அமைதி சற்றுக் கலையக் காரணமாயின.

பண்ணையார் சென்றுவிடவே, தரகர் பண்ணையாரு டைய மனைவியிடம் தன் தொழிலைத் தொடங்கினார். ''அங்கேயும் நல்ல பணம், அம்மா. நீங்கள் உங்கள் மருமக ளுக்கு அணிவிப்பதற்காக வைரமாலை செய்து வைத்திருக்கி றீர்கள் என்றால், அங்கே அவர்களும் பெண்ணுக்கு வைர

அட்டிகை போடுகிறார்களாம்..." என்று சொல்லிக் கொண்டே போனவர், மகாலட்சுமி தலையசைக்கவும் பேச்சை நிறுத்தி னார்.

"இருக்கட்டும், கேசவா. தம்பி எப்போது திருமணம் செய்து கொள்ள முன்வருகிறானோ அப்போது சொல்லி அனுப்புகிறேன்..."

"இந்த இடம் நிற்காதும்மா!"

"போகட்டும். அவரவருக்குப் பிறந்த அன்று போட்ட முடிச்சு. இன்றா மாறிவிடப் போகிறது? அந்தப் பெண்ணுக்கு வேறு நல்ல இடம் பார்த்துக் கொடு. இப்போது போய் வருகிறாயா?"

பேசிக் கொண்டே இருவரும் சென்றுவிட, மாதவி சற்று நேரம் சிலைபோல நின்று விட்டாள்.

மருமகளுக்கு அணிவிப்பதற்காக வைரமாலை செய்து வைத்திருக்கிறீர்கள்.

எனக்குத் திருமணத்தின்போது வைரமாலை போடப் போகிறார்கள்!

இரண்டும் ஒரே வைர மாலைதானா? அப்போது காந்தத் தின் ஆசை கொண்ட மனதின் கற்பனை என்று நினைத்தாளே!

இப்போதும் காந்தத்தின் கூற்றை முழு உண்மையாக எடுத்துக் கொள்ள அவளால் முடியவில்லைதான். ஆனால் அவ்வளவு உறுதியாகச் சொன்னாளே, எந்த ஆதாரத்தின் பலத்தில் அப்படிச் சொன்னாள் என்ற கேள்வி மட்டும் அவள் மனதை நெருஞ்சியாய் உறுத்தியது.

எல்லாம் மாலையில் சற்று சீக்கிரமாகவே, கண்ணால் சிரித்தபடி கதிரேசன் வீடு வரும்வரைதான். அதன்பின், அவளது சந்தேகங்கள், நெருஞ்சிமுள் உறுத்தல்கள் எல்லாம்,

சூரியனைக் கண்ட பனிபோல இருந்த இடம் தெரியாது மறைந்து போயின.

ஜீப்பை வாயிலில் நிறுத்தி விட்டு, உள்ளே நேராகப் புத்தக அறைக்குத்தான் கதிரேசன் சென்றான். "ஒன்று தெரியுமா, கிருபாவின் பரிசோதனை வெற்றியாகிவிட்டது. அவன் சொன்னது போல பசுந்தழை வளர்த்து மக்கவைத்து உரமாக்கி, அத்தோடு சில ரசாயன உரங்களைச் சேர்த்து இட்டு வளர்த்தோம். மேனி இரண்டு பங்கு கண்டிருக்கிறது!" என்றான் மகிழ்ச்சியோடு.

அவனது எதிரொலியாய்ப் புன்னகை செய்தபடி, "மேனி? அது என்ன இரண்டு பங்காய்க் காண்பது?" என்று புரியாமல் கேட்கவும் கதிரேசனுக்கு இன்னமும் சிரிப்பு வந்தது.

"மேனி என்றால் விளைச்சல். இவ்வளவு விதைத்தால் இவ்வளவு விளையும் என்று ஒரு கணக்கு இருக்கிறது. அதற்கு இரண்டு மடங்கு என்பதைத்தான் இருமடங்கு மேனி கண்டிருக்கிறது என்று கூறுவது" என்று பொறுமையாக விளக்கினான்.

அறைவாயிலில் நிழலாடியது, காந்தம்தான். "நீங்கள் கை கால் கழுவவில்லையே! தண்ணீர் தயாராக இருக்கிறது" என்று நினைவூட்டினாள்.

அவளைப் பார்த்து முறுவலித்து, "இதோ, அதற்குத்தான் கிளம்பிக் கொண்டிருக்கிறேன். இங்கே, மாதவியிடம் ஒரு முக்கிய சேதி சொல்ல வந்தேன்" என்றவன் மாதவியிடம் தலையாட்டி விட்டுத் தன் வழக்கமான வேக நடையுடன் முற்றத்தின் அங்கணத்திற்குச் சென்றான்.

அவன் கண் மறையும் வரை பார்த்திருந்து விட்டுத் திரும்பிய மாதவி, அங்கேயே நின்று அவளை உறுத்து நோக்கிய காந்தத்தின் கொடூரமான பார்வையைச் சந்தித்தாள்.

''இந்தப் பார்வையை அண்ணனோ, கதிரேசனோ, மகா லட்சுமி அம்மாளோ பார்க்க முடிந்திருந்தால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்!'

தன் வேலையைப் பார்க்கத் திரும்பிய மாதவியிடம், ''சின்னவர் வேலியில்லாப் பயிர் அல்ல, கண்ட கழுதைகளும் வந்து மேய்வதற்கு. அவரிடம் நெருங்குவது உனக்கு நல்லது அல்ல'' என்று இறுகிய குரலில் எச்சரித்துவிட்டு, காந்தம், மடமடவென்று கதிரேசன் சென்ற முன் முற்றத்துக்குச் சென்றாள்.

முன்பொரு சமயம் என்றால், இந்தப் பார்வையும் பேச்சும் அவளை அச்சுறுத்தியிருக்குமோ என்னவோ, இப்போது மாதவிக்கு அலட்சியமாகத்தான் இருந்தது.

அப்படி இவள் யாரை என்ன செய்துவிட முடியும்?

தன்னிடம் இப்படி மிரட்டுகிறாளே! கதிரேசனிடம் எப்படி நடந்து கொள்வாள்? ஏதேனும் கோள் மூட்டுவாளோ என்று மாதவி யோசித்தாள். அவள் அப்படி ஏதேனும் சொன்னால், அதைத் தெரிந்து கொள்ள வேண்டும்; தெரிந்து, அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்று எண்ணினாள். இந்த முடிவோடு சென்று, முன் முற்றத்துப் பக்கமாகத் திறக்கும் சாளரத்தின் வழியே எட்டிப் பார்த்த மாதவி அதிர்ச்சியில் அப்படியே சிலையாகிப் போனாள்.

கதிரேசன் வழமை போலக் கை கால்களை அழுத்தித் தேய்த்துக் கழுவிக் கொண்டிருக்க, நுனி விரலால் டவலைப் பிடித்தபடி, அன்று காலை கிருபாகரனுக்கு கொடுத்த அதே நிலையில், ஒயிலாகக் காந்தம் நின்று கொண்டு இருந்தாள். கதிரேசன் நிமிர்ந்து நோக்கினால் என்னென்னவோ வளைவுகளைப் பார்க்க வேண்டியிருக்கும்.

ஒரு வினாடி திகைத்த போதும் மாதவிக்கு உடனேயே விவரம் விளங்கி விட்டது.

இதுபோலக் கவர்ச்சிகரமான போஸ்களில், கிருபாகரன் முன் நின்று, அவற்றால் அவனிடம் ஏற்படும் பாதிப்புகளைக் கணக்கிட்டு, அதேபோன்ற பாதிப்புகளைக் கதிரேசனிடம் ஏற்படுத்த அதே போஸ்களைப் பயன்படுத்துகிறாள்!

அதாவது, காந்தத்தைப் பொருத்தவரை கிருபாகரன் ஓர் ஒத்திகைக் கூடம்! பாவி! பாதகி! ராட்சசி! பார்த்துக் கொண்டே இரு; உன்னிடமிருந்து எப்படியாவது என் அண்ணனைக் காப்பாற்றுகிறேன்!

கதிரேசனைப் பற்றிய கவலை அப்படி ஒன்றும் மாதவிக்கு ஏற்படவில்லை. அதிலும் அவனை நேரில் கண்டபிறகு அந்த மாதிரிப் பயம் கொஞ்சநஞ்சம் இருந்தது கூட விலகிப் போய்விட்ட மாதிரித்தான் அவளுக்குத் தோன்றியது.

யோசித்தபடியே ஏணியைத் தேவைப்பட்ட இடத்தில் சாத்தி, ஏறியபோது, அண்ணனைப் பற்றிக்கூட அவ்வளவாகக் கவலைப்படத் தேவையில்லை என்றே மாதவிக்குத் தோன்றியது.

இந்தக் காந்தம் ஒன்றும் கிருபாகரனை மணந்து கொள்ளும் எண்ணத்தில் இருக்கவில்லையே. சும்மா, ஒத்திகை பார்த்துக் கொள்ளத்தான் அவனைப் பயன்படுத்துகிறாள். இந்த ஒத்திகையால் பலனில்லை என்று தெரியும்போது தானாக விலகிக் கொண்டுவிட மாட்டாளா?

ஏணிப்படியில் நின்றுகொண்டு, முன்னர் கையெட்டுகிற அளவு உயரத்தில் சேர்த்திருந்த புத்தகங்களை எடுத்து மேல் தட்டில் வரிசைப்படுத்தி மாதவி அடுக்கிக் கொண்டிருந்த போது, கையில் காபி, முறுக்குடன் கதிரேசன் புத்தக அறைக்குள் புகுந்தான்.

மாதவி மேலே நிற்பதைக் காணவும், முறுக்கை ஒதுக்குப் புறமாக வைத்துவிட்டு, தானும் சில புத்தகங்களை எடுத்து அவளிடம் கொடுத்து உதவினான்.

மேல்தட்டு வேலை முடிந்ததும், இறங்கக் கால் வைத்த வள் தவறாக வைத்ததாலோ என்னவோ, ஏணியோடு சரிய லானாள்.

ஏணி, முக்கால் பாகம் சாய்ந்து பக்கச் சுவரில் முட்டிக் கொண்டு நின்றுவிட, ஏணியிலிருந்து விழுந்த மாதவியைக் கதிரேசன் வாகாகக் கையில் ஏந்திக் கொண்டான்.

பூக்குவியலாய் அவளைக் கையில் ஏந்தியவன், கைச் சுமையை இறக்கிவிடுவது பற்றி எண்ணினாற் போலவே தெரியவில்லை. அவனது வலியகரங்களில் பாதுகாப்பாய்க் கிடந்தவளும், இறங்கிவிட அவசரப்படுவதாக இல்லை.

இந்த மோனநிலை எவ்வளவு நேரம் நீடித்ததோ, சொம்பு ஒன்று 'டங்'கென்று எங்கோ கேட்கவும், இருவரும் ஒருவாறு சுயஉணர்வுக்கு வந்து விலகிக் கொண்டனர்.

ஓர் உல்லாசப் பார்வையுடன், மாதவியின் கரம் பற்றி முத்தமிட்டு விட்டுக் கதிரேசன் வெளியே செல்லவும், அவன் அகல்வதற்காகவே காத்திருந்தாற் போலக் காந்தம் ஓடிவந் தாள்.

''இதோ பார், அவர் என்னை மணக்கப் போகிறவர். மரியாதையாக விலகிக் கொள். இல்லையானால்...''

''என்ன உளறுகிறாய் காந்தம்? அவர் வயது என்ன? உன் வயது என்ன? பத்து ஆண்டுகளேனும் வேறுபாடு இருக்குமே!''

''அதைப்பற்றி உனக்கென்னடி கவலை?'' என்று காந்தம் சீறினாள். ''ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதை மாதிரியல்ல பேசுகிறாய்! மரியாதையாக அவரை விட்டுவிடு.

விட்டுப் போய்விடுவேன் என்று சத்தியம் செய். இல்லாவிட் டால் ரொம்பவும் நொந்து போவாய்'' என்று மிரட்டினாள்.

என்ன அசட்டுத்தனம் என்று இருந்தது மாதவிக்கு. ''இதோ பார் காந்தம், நான் கதிரேசனை மணப்பதும், மற்றதும் என் சொந்த விஷயம். அதுபற்றி உன்னிடம் நான் எதுவும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை!'' என்றவள், அதற்கு மேல் மற்றவளை அலட்சியம் செய்து தன் வேலையில் இறங்கினாள்.

''இதற்காக நீ மிகவும் வருத்தப்படுவாய்'' என்று அடிக்கு ரலில் மிரட்டிவிட்டுக் காந்தம் சென்றதை மாதவி முதலில் பெரிதாக எண்ணவே இல்லை.

பெரிதாக எண்ணியிருந்தால், ஒருவேளை, அவளுடைய அருமை அண்ணனைப் பெரும் ஆபத்து நேராமல் அவள் காத்திருக்கக் கூடுமோ என்னவோ? ஆனால், இந்தச் சின்னப் பெண்ணால் என்ன முடியும் என்று மாதவி நினைத்ததுதான் பெரும் வினையாகிப் போயிற்று.

## 11

அடுத்து சில தினங்கள், 'ஆன்டி கிளைமாக்ஸ்' என்பார்களே, அதுபோல மாதவிக்கு மிகவும் டல்லடித்தன.

அறுவடை நேரம் என்று, கதிரேசனைக் கண்ணால் காணக்கூட முடியவில்லை. சூரியனோடு விழித்து அதே சூரியனோடு அடைவது போலக் காலையில் எழுந்து வயலுக் குப் போனால் இருட்டிய பிறகுதான் அவன் வீடு திரும்பினான்.

கிருபாகரனிடம் அதுபற்றி மாதவி குறிப்பிட்டபோது, ''அறுவடைக் காலம் அல்லவாம்மா? கதிரேசன் தானும் ஒரு அறுவாளோடு வயலில் இறங்கி விடுவார். அவர்களோடு சேர்ந்துதான் சாப்பாடு, வீடு திரும்புவது எல்லாம். வந்தால், பண்ணை வீட்டம்மா நிறைய வென்னீர் போட்டு வைத்திருப் பார்களாம். அலுப்பு தீரக் குளித்து, சாப்பிட்டு விட்டுப் படுத்தால், மறுநாள் காலைவரை அசையக்கூட மாட்டாராம். ஆனால் மாது, அந்த அம்மாவைப் பார், இவ்வளவு பணத்தை வைத்துக் கொண்டு, ஒரே பிள்ளை வேறு — அப்போதும் 'உனக்கேன்டா இந்தத் துன்பம். ஆள்காரர்கள் மட்டும் செய் யட்டுமே' என்று ஒருவார்த்தை சொல்ல மாட்டார்கள். அவர் கள் மாதிரி உழைத்தால்தானே அவர்களது கஷ்ட நஷ்டங்க ளும் புரியும் என்றுதான் சொல்லுவார்கள். ஒவ்வொன்றாகப் பார்க்கப் பார்க்க எனக்கு அவர்கள் மேல் மதிப்பு ஏறிக் கொண்டே போகிறது! பழைய கால அரசிகள் கூட இப்படித் தான் இருந்திருப்பார்கள் என்று எனக்குத் தோன்றும். இவர் களே முன்பிறவியில் ஓர் அரசிதானோ என்னவோ?!'' என் றான் அவன் மிகுந்த அன்பும் மரியாதையுமாக.

இப்படி ஒரு மாமியார் கிடைப்பது அதிருஷ்டம்தான் என்று எண்ணிவிட்டு முகம் சிவந்து போனாள் மாதவி.

அண்ணனிடம் இப்போது சொல்லலாமா?

யோசித்தவாறே கிருபாகரனை நோக்கியபோது அவன் கண்கள் பளபளக்க ஏதோ கனவுலகில் ஆழ்ந்திருப்பது தெரிந் தது.

காந்தமா? என்று கவலையுற்றபோது, கிருபாகரன் லேசா கத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''இரண்டு மூன்று நாட்கள் நான் கொஞ்சம் தாமதமாக வீட்டுக்கு வருவேன். பரவாயில்லையாம்மா? ஒருநாள் திருநெல்வேலி போக வேண்டும். கொஞ்சம் வேறு வேலையும் இருக்கிறது....'' என்று கெஞ்சலாகக் கேட்டான்.

இப்படிக் கேட்கும் அண்ணனிடம் மறுத்து எப்படிப் பேசுவது?

அத்தோடு, காந்தம் என்றால் இவன் தாமதித்து வரக் காரணம் இல்லை. முடிந்த அளவு சீக்கிரமாக வந்து பண்ணை வீட்டுப்பக்கம் அல்லவா போயாக வேண்டும்!

''என்னண்ணா, ரகசியம்? எனக்குச் சொல்லக்கூடாதா?'' என்று தலையைச் சரித்துக் கூர்பார்வையோடு அவள் கேட்கவும், கிருபாகரன் சிரித்தான்.

''உன்னிடம் எனக்கு என்னம்மா, ரகசியம்? எதுவானாலும் உனக்குத்தான் முதல் செய்தி!'' என்று கிருபாகரன் கூற, அதிலேயே திருப்தியுற்று, தங்கை தலையாட்டினாள்.

அவளுக்கும் சிலநாட்கள் ஓய்வுதான். புத்தகங்கள் அடுக்கியாயிற்று. மரப்பட்டிகளில் தலைப்புகூட அழகாகப் பெயின்ட் அடித்து வைத்துவிட்டாள். இனி அவற்றை ஒவ்வொரு பிரிவிலும் ஆணி அடித்து மாட்ட வேண்டியதுதான் பாக்கி.

அறுவடை வேலை முடிந்ததும் கதிரேசன் அதைத்தானே செய்வதாகக் கூறி, ''சவாலாக ஏற்று, முழு மூச்சாக வேலை செய்து முடித்திருக்கிறாய். பேசாமல், நாலைந்து நாட்கள் படுத்து ஓய்வெடு. படிப்பதற்குப் புத்தகங்கள் வேண்டுமானால் எடுத்துப் போ. பிறகு நாம் இருவருமாக இந்தப் பட்டிகளை எந்த மாதிரி அடிக்கலாம் என்றெல்லாம் திட்டமிட்டுச் செய்யலாம்'' என்றவன், உடனேயே பார்வை மாற, ''முக்கியமான வேறு பல திட்டங்கள் கூட உடனடியாகப் போட வேண்டியிருக்கிறது'' எனவும் மாதவியின் கன்னங்களில் ரோஜாக்கள் மலர, ஒருவிரல் நீட்டித் தொட்டுப் பார்த்துவிட்டுச் சிரித்தபடியே கிளம்பினான்.

பழைய மதனகாமராஜன் கதை, வடுவூராரின் திகம்பர சாமியார் மூன்று பாகங்கள், நாமக்கல்லாரின் மலைக்கள்ளன் என்று பழைய புத்தகங்களோடு கல்கியின் பொன்னியின் செல்வன் ஐந்து பாகங்களையும் எடுத்து வந்து படித்துத் தீர்த்தாள்.

இப்படி அந்தப் புத்தகங்களோடு ஐக்கியப்பட்டுக் கிடந்த வளுக்கு இடையிடையே இன்பக் கனவுகளில் மூழ்கிக் கிடந்த வளுக்கு, அன்று கிருபாகரன் இரவு எட்டரை ஒன்பது மணிவரையிலும் வரவில்லை என்றபோது முதலில் பெரிதாக ஒன்றும் கவலை உண்டாகி விடவில்லை.

ஒன்பது மணிக்கு மேல், லேசாகத் தொடங்கி, கொஞ்சம் கொஞ்சமாக முழுக் கவனத்துடன் அண்ணன் வரும் அரவத் திற்காக காத்திருக்கலானாள்.

அந்தப் பகுதிக்குக் கடைசி பஸ் இரவு பத்தரை மணிக்கு. பஸ் கொஞ்சம் தாமதமாகியிருக்கும்... அதிகத் தாமதமாகியி ருக்கும் என்று மேலும் ஒன்றரை மணி நேரம் காத்திருந்து விட்டு, அண்ணன் எப்படியோ கடைசி பஸ்ஸைத் தவற விட்டுவிட்டான்; இனி நாளைக் காலை ஏழு மணி பஸ்சில் தான் வரப்போகிறான் என்று முடிவு கட்டி, இரவு சாப்பிட உட்கார்ந்தவளுக்கு உணவு பிடிக்காமல், அப்படியே எடுத்து ஃபிரிஜ்ஜில் வைத்துவிட்டுப் படுக்கப் போனாள்.

ஆனால், மறுநாள் ஏழு மணி தாண்டி எட்டு மணி பஸ்சில் கூட அண்ணன் வரவில்லை என்று ஆனதும் மாதவி அரண்டு போனாள்.

கிருபாகரன் பொறுப்பற்றவன் அல்ல. மாலையில் வள்ளி வீட்டுக்குப் போய் விடுவாள் என்பதால் இரவு முழுவதும் தங்கை தனியே இருந்திருப்பாள் என்பதில் பெரிதாகக் கவ லைப்பட ஒன்றும் இல்லைதான். அந்தப் பகுதியில் திருட்டு, கொள்ளை என்று குற்றங்கள் பொதுவாக நடப்பதில்லை;

அதுவும் பண்ணை வீட்டுக்கு வேண்டியவர்கள் என்பதே தங்கைக்கும், தனக்கும் பெரும் பாதுகாப்பு என்பதும் உண் மையே! ஆனாலும், அண்ணனை நினைத்து மாதவி கவலைப் பட்டுக் கொண்டு இருப்பாள் என்பதை அவன் அறியாதவன் அல்லவே!

இரவு ஏதோ காரணத்தால், அவனால் வீடு திரும்ப முடியாமல் போயிருந்தாலும், காலையில், முடிந்த அளவு சீக்கிரமாக வந்து சேராமல் அவனால் எப்படி இருக்க முடியும்? முடியாது. இருக்க மாட்டான்.

வரமுடியாதபடி, 'அண்ணனுக்கு ஏதோ ஆகியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கே மாதவி வரநேர்ந்தது.

பத்திரிகைகளில் படிக்கும் என்னென்னவோ விபத்து விபரங்கள் அச்சமூட்ட, செருப்பை மாட்டிக் கொண்டு பண்ணை வீட்டுக்கு கிளம்பி விட்டாள்.

எதிர்பார்த்தது போலவே, கதிரேசன் 'அறுப்பு'க்குப் போயிருந்தான். ஆனால், விவரம் அறிந்ததும் மகாலட்சுமி, உடனே மகனுக்குச் சொல்லி அனுப்பினார். கதிரேசனும் வேலையை மற்றவரிடம் ஒப்படைத்து விட்டு விரைவிலேயே வந்து சேர்ந்தான்.

அமைதியாகக் காட்டிக் கொள்ள முயன்றாலும், மாதவி கலவரமுற்றிருப்பதை உணர்ந்து கதிரேசன் ஆதரவாக, அவ ளைத் தோளோடு அணைத்துத் தட்டிக் கொடுத்தான். அதை யார் யார் பார்த்திருக்கக்கூடும் என்பது பற்றி இருவருமே கவலைப்படவில்லை. மாதவிக்கு அதுபற்றிய எண்ணமே தோன்றவில்லை; கதிரேசனுக்கு மாதவியின் ஆறுதல் தவிர மற்றது துச்சமாகத் தோன்றியது.

கிருபாகரன் திருநெல்வேலி போயிருக்கக் கூடும் என்ற தும், அங்கே அவனே நேரில் சென்று பார்க்க முடிவு

செய்தான். மற்றபடி, கிருபாகரன் செல்லக்கூடிய இடங்களுக்கு முக்கியமான ஆட்களை அனுப்பி வைத்து விட்டு, தன் ஜீப்பை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

விவசாயத் துறை அலுவலகம், உரம் பூச்சிக் கொல்லி மருந்து, மற்றும் விதை, தானிய வகை விற்பனையாளர்கள் என்று அவன் செல்லக்கூடிய இடங்கள் அனைத்திலும் விசாரித்து விட்டுக் கதிரேசன் தோல்வியுடனேயே திரும்ப நேர்ந்தது.

அவன் கொண்டுவந்த ஒரே ஒரு நல்ல சேதியாக எந்த வகையிலும் விபத்துக்கு ஆளானவர்களின் பட்டியலில் கிருபாகரன் இருக்கவில்லை என்பது, மாதவிக்குச் சற்று ஆறுதலை அளித்தது.

இங்கேயும், கிருபாகரனைக் கண்டவர் யாருமில்லை என்ற சேதியே வந்தது. கடைசி கடைசியாக மலங்காட்டு ஓரமாக அவன் போகப் பார்த்ததாக ஆடு மேய்க்கும் சிறுமி ஒருத்தி சொன்னதாகத் தெரிந்தது. ஆனால் அவளை அழைத்துக் கேட்டதில், சென்றது கிருபாகரன்தான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது; ஆனால், 'அவர் மாதிரி ஒருத்தர் அந்தப் பக்கமாய் இங்கேயும் அங்கேயுமாய்ப் போய்க் கொண்டிருந்தார். பிறகு திரும்பிப் போய் விட்டார் என்று நினைக்கிறேன்'' என்றாள்.

மலங்காடு என்பது, பெரிய பெரிய மரங்கள் அடர்ந்த பெரும்காடு அல்ல. ஆனால் பெரிய புதர்களும் மரங்களும் நிறைந்த காட்டுப் பகுதியே. ஊரின் வயல்களை அடுத்து, ஒருபுறமாய் இயற்கை அரண் போல நீண்டு சென்றது அந்தக் காடு. காடுகளை அழிக்கக் கூடாது என்பதற்கிணங்க அதை எடுத்துச் சொன்ன சின்னவரின் பேச்சுக்கு மதிப்புக் கொடுத்து அங்கே யாரும் மரம் வெட்டுவதில்லை. ஆனால் சுள்ளி பொறுக்க அவ்வப்போது யாரேனும் பெண்கள், இரண்டு

மூன்று பேராகச் சேர்ந்து சென்று வருவதுண்டு. பாண்டியப் போர் ஒன்றில் இறந்த வீரர்களுக்கு நடுகல் நாட்டிய இடங்கள் அந்தக் காட்டில் இருப்பதால், அகால மரணமடைந்த பேய்கள் அங்கே உலவுவதாக வதந்தியும் உண்டு. எனவே, பொதுவாக அங்கே ஆள் நடமாட்டம் இருப்பதில்லை.

ஆடுமேய்க்கும் சிறுமி சொன்னதை வைத்து, சுள்ளி பொறுக்கச் சென்ற பெண்களிடம் விசாரித்தபோது, அவர்கள் யாரும் எதையும் பார்க்கவில்லை என்றுவிட்ட போதும், கதிரேசன் அந்தக் காட்டினுள்ளும் ஆட்களை அனுப்பித் தேடுவித்தான்.

சுயமுயற்சிகள் அனைத்தும் பலனின்றிப் போகவே, போலீசிலும் சொல்லி வைத்தார்கள். அவர்களும் வந்து, கதிரேசன் ஏற்கனவே முயன்ற வழிகள் அத்தனை வழிகளிலும் சென்று, ஆராய்ந்து பார்த்துவிட்டு, உதட்டைப் பிதுக்கிவிட்டுப் போனார்கள்.

எவ்வளவோ தைரியமாகக் காட்ட முயன்றும், மாதவி மெல்ல மெல்ல உடையலானாள். மகாலட்சுமியும் கதிரேசனும் கூடவே இருந்தபோதும், அவளுடைய அண்ணனின் வீடு திரும்பாமைக்கு சரியான காரணம் என்று ஒன்றுமே கூற முடியாததால், அவளுக்குத் திடமளிக்க அவர்களாலும் முடிய வில்லை.

ஆச்சரியப்படத் தக்க விதத்தில், இந்தச் சோதனையான சமயத்தில், காந்தம், மாதவிக்கு மிகவும் அனுசரணையாக நடந்து கொண்டாள். அவ்வப்போது பருக ஏதேனும் பானம் கொணர்ந்து தருவது, மகாலட்சுமி, கதிரேசனோடு சேர்ந்து மாதவியை நல்லபடியாக உண்ணவைத்தது என்று எவ்வ ளவோ ஆதரவாக இருந்தாள்.

இப்படி ஐந்து நாட்கள் சென்றபின்னர், ஆறாவது நாளான ஒரு புதன்கிழமையன்று, உணர்வுமயங்கிய நிலை

யில், காட்டினுள் சுள்ளி பொறுக்கச் சென்ற பெண்கள், கிருபாகரனைக் கண்டுபிடித்தனர்.

கைப்பக்குவம் எதுவும் பயன் தராததால், அருகே ஸ்ரீவைகுண்டத்தில் ஓர் மருத்துவமனைக்கு அவனை எடுத்துச் சென்றனர். அங்கே, கிருபாகரனின் உடம்பு 'டி ஹைடிரேட்' ஆகி இருப்பதாகச் சொல்லி, உடனே 'டிரிப்ஸ்' ஏற்றினார்கள். தேவைப்பட்ட சத்துப் பொருட்கள் எல்லாம் ஊசி மூலமே கொடுக்கப்பட, சில மணி நேரங்களில் கிருபாகரன் கண்வி ழித்து எல்லோரும் ஆறுதல் அடையச் செய்தான்.

மெய்யாகவே சோர்வுதானா அல்லது அப்படிப் பாவனை செய்தானோ, என்ன, ஏது என்ற யாருடைய கேள்விக்கும் கிருபாகரன் பதிலே சொல்லவில்லை. அவன் காணாமல்போன அந்த வெள்ளிக்கிழமையிலிருந்து, உணவோ, தண்ணீரோ இல்லாமல் கிடந்திருக்கிறான் என் பதை மட்டும் தெரிந்து கொள்ள முடிந்தது. மற்றபடி, அவன் எங்கே இருந்தான், யாருடன் இருந்தான், அவன் கண்டுபிடிக் கப்பட்ட இடத்துக்கு எப்படி வந்தான் என்று எதையுமே அவனால் சொல்லக் கூட முடியவில்லை.

எப்போதும் அவன் ஓய்ந்து கிடந்தமையால், யாரும் அவனை மேலே மேலே கேள்வி கேட்டுத் தொல்லை செய்யவும் இல்லை. அவன் திரும்பி வந்து விட்டதே போது மாய், அவன் பழைய மாதிரி முழுக் குணமடைந்து விட்டால் அதுவே திருப்தி என்று விட்டுவிட்டனர்.

ஆனால், கிருபாகரன் களைத்துப் போய்க் கிடந்ததெல் லாம் இரண்டே தினங்கள்தான். இனி அவனுக்கு ஒன்றும் இல்லை என்று மருத்துவர் உறுதி அளித்தபின், நிம்மதியுற்றவ ளாய் மாதவி சென்று, குளித்து, உணவருந்தி, சற்றுத் தூங்கி எழுந்து, திரும்பி வந்த போது கிருபாகரன் ஆளே மாறியிருந் தான்.

கண்களில், முகத்தில் ஒரு 'பளிச்'சோடு, அவன் எழுந்து உட்கார்ந்திருந்தான்.

தங்கையைக் கண்டதும், 'வீட்டுக்குப் போகலாமா, மாதவி?' என்று உற்சாகத்தோடு வினவினான்.

முதலில் மறுத்தாலும், அண்ணனின் வற்புறுத்தலால், 'எதற்கும் டாக்டரிடம் கேட்டு விடுகிறேன், அண்ணா. அவர் சம்மதித்தால் போகலாம்'' என்ற கூறி, வைத்தியரைத் தேடி மாதவி கிளம்பினாள்.

அவள் சற்றுதூரம் செல்வதற்குள்ளாகவே, எதிரில் வந்த காந்தம், மாதவியோடு சேர்ந்து கொண்டாள்.

சிலதினங்களாக, மிகவும் இக்கட்டான நேரத்தில் காந்தம் செய்த உதவிகளால் மாதவி மனம் நெகிழ்ந்திருந்தாள். மற்றவளைக் கண்டதும் புன்முறுவல் பூத்து 'வீட்டுக்குப் போகவேண்டுமாம்! அண்ணன். ஒரே பிடிவாதமாக அடம்பிடிக்கிறார். நீயாவது கொஞ்சம் சொல்லிப் பாரேன்! இரண்டு நாட்களாக அப்படியே, பிடுங்கிப் போட்ட செடி மாதிரிக் கிடந்து விட்டு, இன்று கொஞ்சம் தேறியதும் வீடு வீடு என்கிறாரே!'' என்று இயல்பாகப் பேசினாள்.

காந்தம், தலைசரித்து மற்றவளை இமைதட்டாமல் நோக்கினாள்.

மனம் துணுக்குற, ''என்ன காந்தம்?'' என்று மாதவி வினவினாள்.

காந்தத்தின் பருந்துப் பார்வை, வேகத்துடன் இப்புறமும் அப்புறமும் பாய்ந்து மீண்டு, மாதவியின் முகத்தில் மீண்டும் நிலைத்தது.

''உனக்கு எத்தனையோ தடவை சொன்னேன்; நீ கேட்கவில்லை. ஆனால், இது கடைசி எச்சரிக்கை...''

''என்ன உளறுகிறாய்?'' என்று சுள்ளெனக் கேட்டாள் மாதவி.

ஏளனமாய் நோக்கி, ''உன் அண்ணனைச் சாகடித்திருப் பேன். பாவம் என்று பிழைக்க விட்டேன். இனியாவது ஓடிவிடு. அல்லது உன் வீட்டில் ஒரு கருமாதி செய்ய நேரிடும்!'' என்றாள் காந்தம், பாம்பின் சீறலாக.

# 12

ஒருகணம் அயர்ந்து நின்றபோதும், மாதவி, காந்தத்தின் பேச்சை நம்பவில்லை. நம்ப முடியவில்லை. அவளுடைய அண்ணன், கதிரேசனின் அளவு இல்லாவிட்டாலும் ஓரளவு நல்ல வளர்ச்சியும், ஆரோக்கியமும் உள்ள ஆண்மகனே. அவனை, இவள் — மிஞ்சி மிஞ்சி ஐந்தடி உயரம் இருப்பாள்; இவள் சாகடித்திருப்பாளாமா?

''என்ன கதை விடுகிறாய்? இதையெல்லாம் நம்புவதற் குக் காதில் பூ சுற்றின ஏதாவது சின்னப் பாப்பா இருக்கும்; போய் அதனிடம் சொல்லு'' என்றாள் அலட்சியமாகவே. ''என்னவோ கொஞ்சநாளாக நல்லபடியாகத் தெரிகிறாயே என்று பார்த்தால், உன் பாம்பு புத்தி அப்படியேதான் இருக்கி றது!''

''ஆமாம். நான் பாம்புதான். அதிலும் கொடிய நஞ்சுள்ள நல்ல பாம்பு. என் வழிக்கு வராதிருப்பவர்களை நான் ஒன்றும் செய்ய மாட்டேன். ஆனால், என் பாதையில் குறுக்கிட்டால் கொன்று விடுவேன். சின்னவர் என்னுடையவர். அவரைத் தட்டிக் கொண்டு போக முயன்றால் தீர்த்துக் கட்டிவிடுவேன்!''

என்றபோது காந்தத்தின் லேசான கருநிற முகம் கன்றிக் கனல் வீசியது.

எரிச்சலும், சலிப்பும் மிக, ''சும்மா, கீறல் விழுந்த 'ரிக் கார்டு' மாதிரி 'சின்னவர் என்னவர்' என்று திருப்பித் திருப் பிப் பேத்தக்கூடாது, காந்தம், எல்லோருக்கும் ஆசை ஏற்படு வது உண்டுதான். ஆனால் எந்த ஆசைக்கும் ஒரு நியதி உண்டு. கதிரேசன் சம்மதமின்றி, நீ இப்படிப் பேசுவது சரியில்லை'' என்று அவள் சொல்லும் போதே மற்றவள் குறுக்கிட்டு, 'சரி தப்பு பற்றி எனக்கு நீ சொல்கிறாயா? நியதியாம்! எவன் கூடவோ மாசக்கணக்காய்க் கெட்டு அலைந்து விட்டு, அவன் செத்து விட்டான் என்று இன்னொரு புளியம் கொம்பை வளைக்கப் பார்க்கிறாய்! நீ எனக்கு உபதேசம் செய்கிறாயா? மரியாதையாக இங்கிருந்து ஓடிவிடு. இல்லையென்றால்...'' என்று ஒரு விரல் காட்டிக் கண்ணை உருட்டி மிரட்டினாள்.

தன் நடத்தை பற்றிக் காந்தம் கேவலமாகப் பேசவும் மாதவிக்கும் கோபம் பெருகியது. ''நான் யாரோடு, எப்படிப் பழகினேன் என்பது பற்றி உனக்கு விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை. ஆனால், நீ அண்ணனிட மும் கதிரிடமும் எப்படி இரட்டை வேடம் போடுகிறாய் என்பது எனக்குத் தெரியும். இருவரிடமும் சொல்கிறேன் பார்!'' என்று பதிலுக்கு மிரட்டினாள்.

''சொல்லேன்!'' என்றாள் காந்தம் அலட்சியமாக. ''நீ சொல்வது எதையும் இருவரில் யாருமே நம்பப்போவது இல்லை'' என்று திடமான குரலில் கூறியவள், அது எப்படி என்பதையும் உரைத்தாள். ''சின்னவருக்கு நான் இன்னமும் ஒரு குழந்தைதான். காதலிக்கும் அளவு நான் பெரியவள் ஆகிவிட்டதாக அவர் ஒத்துக் கொள்ளவே மாட்டார்!... சொல்லப் போனால் அதனால் வந்த வினைதானே, உனக்கு

மூக்கை நுழைக்க இடம் கிடைத்ததே! அப்புறம், உன் அண் ணன்! என்னைப் பற்றிக் குறைவாக ஒரு வார்த்தை — அது யார் சொன்னாலும், அவர் அதை ஒத்துக் கொள்வார் என்றா நினைத்தாய்? கிறுக்கு!''

எகத்தாளம் செய்தபடியே, மாதவியைத் தாண்டிக் கொண்டு, கிருபாகரனின் அறைக்கு விரைந்தாள் காந்தம்.

சின்னவளின் பேச்சைச் செரிமானம் செய்தபடி பின் தொடர்ந்த மாதவி உள்ளே சென்று பார்க்கையில், காந்தம், எதையோ தம்ளரில் ஊற்றி, கிருபாகரனிடம் கொடுத்து அதைக் குடிக்கும்படி கொஞ்சலும் கெஞ்சலுமாக வேண்டிக் கொண்டிருந்தாள்.

உள்ளே வந்த தங்கையிடம், ''பால் கஞ்சி!'' என்று ஒரு பெருமித முறுவலுடன் கூறிவிட்டுக் காந்தத்தைப் பார்த்தப டியே கிருபாகரன், அதைச் சொட்டுவிடாமல் குடித்து முடித் தான். ''எத்தனை முறை எனக்காக, இங்கும் அங்கும் அலை வாய், காந்தம்?!'' என்று அவளிடம் உருகினான்.

''ஏன், சைக்கிளில்தானே வருகிறேன்? உங்களுக்காக இரண்டுதரம் சைக்கிள் மிதிப்பது எனக்குப் பெரிய சிரமமா, என்ன?'' என்று கொஞ்சலாகக் கூறி, ஒயிலாகத் தலைய சைத்து விடை பெற்றுச் சென்றாள் அவள்.

அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, ''ரொம்பவும் நல்ல பெண், இல்லையா, மாதும்மா?'' என்று கிருபாகரன் கேட்டபோது மாதவிக்குச் சற்றுநேரம் என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை.

ஒருவாறு சமாளித்து, ''வேலை செய்வதைச் சொல்லுகி றாயா, அண்ணா? பம்பரமாய்ச் சுற்றுகிறாள்!'' எனுமுன் குறுக்கிட்டு, ''அ... அதில்லை, மாது. என்னிடம்... நான் அவளிடம்... நான் சொல்வது உனக்குப் புரியும் என்று

நினைக்கிறேன்!'' என்ற போது கிருபாகரனின் வெளுத்த முகம் சற்றுச் சிவந்து போயிற்று.

சற்றுமுன், காந்தம் சொன்னதையெல்லாம், அண்ணனி டம் கொட்டிவிடத்தான் மாதவியின் மனது துடித்தது. ஆனால், அதை எந்த மாதிரி வார்த்தைகளில் வடித்தாலும் இவன் நம்புவது கடினம் என்பதும் புரிந்தது.

காந்தம் சொன்னது சரிதான்! அவளது 'சின்னவர் என்ன வர்!' உருப்போடலையும், 'ஓடிவிடு' மிரட்டலையும் அப்ப டியே சொன்னால் யாராலும் நம்ப முடியாதுதான்! தன்னை விட ஐந்து வயது சின்னவளான ஒரு கிராமத்துப் பெண்ணுக் குத் தெரிந்திருக்கும் மனோதத்துவம் தனக்குத் தெரியவில் லையே எனும்போது மாதவிக்கு அவமானமாக இருந்தது.

ஆனால் சும்மா இருக்கவும் மனம் இல்லாமல், ''உனக்கு இருபத்தைந்து வயதுகூட ஆகவில்லை அண்ணா. காந்தத்திற் கும் சின்ன வயதுதான். அதோடு, குடும்பம், படிப்பு என்று பார்த்தால்...'' என்று அவள் தொடங்கும்போதே, கிருபாகரன் மீண்டும் அவள் பேச்சை இடைமறித்தான். ''ப்ளீஸ்... மாது.. வேண்டாம். நான் ஒன்றும் நாளைக்கே எங்கள் திருமணம் என்று சொல்லவில்லை. ஆனால் எவ்வளவோ உயர்ந்த குணமுள்ள, கெட்டிக்காரியான நீ, சாமானியப் பெண்கள் போல, மட்டரகமாய் நாத்தனார்ப் புத்தியைக் காட்டிவிடாதே! காந்தம் ரொம்பப் பாவம், மாதவி... தயவுசெய்து...'' என்று கெஞ்சிக் கேட்கவும், அயர்ந்து போனாள்.

ஆனால் கூடவே ஓர் ஆறுதலும். இப்போது திருமணம் இல்லை என்றார் அண்ணன். காந்தத்திற்கோ, கிருபாகரனை மணக்கும் எண்ணமே கிடையாது. கொஞ்சநாளில், கதிரேச னின் திருமணம் நெருங்கும்போது எப்படியும் காந்தத்தின் சாயம் வெளுத்துப் போகும். அதுவரை, அண்ணனின் இந்த மயக்கத்தைச் சற்று அனுசரித்துத்தான் நடந்து கொள்ள வேண் டும்.

முறுவலித்து, அவள், "திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்பார்கள். எல்லாம் யோசித்துச் செய் என்றால் என்னென்னமோ சொல்கிறாயே, அண்ணா!" எனவும் கிருபாகரனின் முகம் மீண்டும் மலர்ந்தது.

காந்தத்தின் மிரட்டலை மாதவி ரொம்பப் பெரிதாக நினைக்கவில்லை என்றாலும், அவளது நடிப்பைக் கண்கூடாகக் கண்டபிறகு, அவளது பேச்சை ஒரேயடியாக அலட்சியப்படுத்தவும் அவளுக்குத் தோன்றவில்லை.

உன் அண்ணனைச் சாகடித்திருப்பேன் என்று அவள் சொன்னதற்கும், இன்னமும் ஒன்றிரண்டு நாட்கள் 'சோறு தண்ணி' இல்லாமல் கிடந்திருந்தால் கிருபாகரன் பிழைப்பது கடினம் என்று மருத்துவர் கூறியதற்கும் தொடர்பு இருக்குமோ என்று அவள் மனம் ஐயுற்றது.

ஆனால், மாதவி எத்தனைமுறை எத்தனைவிதமாக விசாரித்தபோதும், தான் காணாமல் போயிருந்த ஐந்து தினங்கள் பற்றிக் கிருபாகரன் தெளிவாக எதுவும் கூறினான் இல்லை! ஏதோ, மயக்கம் மாதிரி வந்ததாகவும், தெளிந்த போது மருத்துவமனையில் இருந்ததாகவும் கூறினானே தவிர, மற்ற எந்த விவரமும் அவன் மூலம் தெரிய வரவில்லை.

யாரோ திருடர்கள், மயக்கம் கொடுத்து, கிருபாகரனின் பையில் உள்ளதைப் பறித்துக் கொண்டு, 'பூம்பொழிலை' அடுத்த காட்டில் கொண்டுவந்து போட்டு விட்டுப் போய் விட்டார்கள் என்று போலீசார் முடித்துவிட, அதுவே எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்டது.

"கிருபா எதையோ மறைக்கிற மாதிரி — முழுவதாகச் சொல்லாதது போல எனக்குத் தோன்றுகிறது, மது. பாமரன் போல இப்படி ஏமாந்தோமே என்ற வெட்கமோ, என்னவோ?" என்று கதிரேசன் கூறியபோது, தனக்கும் கொஞ்சம் அதே அபிப்பிராயம்தான் என்றாள் மாதவி.

வெளிப்படையாக எதையும் காட்டிக் கொள்ளா விட்டாலும், மாதவி காந்தத்திடம் எப்போதும் ஒரு கண்ணை வைத்துக் கொண்டே இருந்தாள்.

அவளும், மற்றவர் முன்னிலையில் குளிரப் பேசினாலும், தனியே கண்ட போதெல்லாம் தன் மிரட்டலை விடவில்லை.

இந்நிலையில், நல்லபடியாக அறுவடை நடந்து முடிந்ததற்காகப் பண்ணையில் ஒரு விழாக் கொண்டாடினார்கள்.

பண்ணைக் குடிகளுக்கு புதுத்துணிகளும், தானியமும் கொடுத்து விருந்தும் வைத்தார்கள். கரகாட்டம், வில்லுப் பாட்டு, உறுமி மேளம் என்று கலைநிகழ்ச்சிகளும் நடந்தன.

கிருபாகரன், மாதவிக்கும் அழைப்பு இருந்தது. இருவருக்கும் கூடப் புதுத் துணிமணிகள் வாங்கி வைத்திருந்தார்கள்.

பண்ணையாரும், அவர் மனைவியும் சேர்ந்து நின்று, பட்டுச் சேலையைக் கொடுத்தபோது, கதிரேசன் கண்ணால் சொன்ன சேதியை ஏற்று, மாதவி வெட்கச் சிரிப்புடன் சேலையைப் பெற்றுக் கொண்டாள்.

அத்துடன்கூட, புதுச்சேலையை அப்போதே அணிந்து வரச்சொல்லி, துணிமணி வழங்கும் நிகழ்ச்சியின்போது அவளையும் வீட்டு ஆளாய்ச் சேர்த்துக் கொண்டனர்.

அதற்கு முன்னதாக, பட்டுச் சேலைக்குப் பொருத்தமாக அணிந்து கொள் என்று ஒரு வைரமாலையை, மகாலட்சுமி மாதவிக்கு அணிவித்தார். பொருத்தமான காதணிகளும் கொடுத்து அணியச் செய்தார்.

கடைக்கண்ணால் நோக்கியபோது, மாதவி எதிர்பார்த்தது போலவே காந்தத்தின் முகம் பயங்கரமாக மாறி விட்டிருந்தது. பெரிய பெரிய மூச்சுகளை எடுத்து விட்டு, அவள் தன்னைச் சமனப்படுத்திக் கொள்வதையும், கீழ் உதடு இறுக்கத்

துடன் சுருங்குவதையும் காணாதது போலக் கவனித்துக் கொண்ட மாதவிக்கு உள்ளூர ஒரு குளிர் 'உண்டாயிற்று.

இந்தக் காந்தம் ஏதோ முடிவெடுத்து விட்டாள் என்பது புரிந்தது.

ஆனால், அதற்காக, அவளுக்குப் பயந்து, கதிரேசனைப் பிரிந்து இங்கிருந்து மாதவி ஓடுவதாக இல்லை. மாறாக, காந்தத்தின் திட்டம் எதுவாக இருந்தாலும் அதை முறியடிப்ப தற்கான முயற்சிகளில் இறங்கினாள்.

மாதவியின் அச்சம் பெரும்பாலும் அவளுடைய அண் ணனைப் பற்றியதே. அவனைத்தானே, காந்தம் விருப்பம் போல வளைக்கிறாள்.

கதிரேசனிடம் மெல்லிய குரலில், ''எப்போதும் அண்ண னுக்குக் காவலாக, அண்ணனே அறியாமல் யாரையேனும் அனுப்ப முடியுமா? போனவாரம் நடந்ததை நினைத்து அவ்வப்போது மிகவும் கவலையாக இருக்கிறது!'' என்று உரைத்து, கிருபாகரனின் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்தாள்.

ஆனால், காந்தம், மாதவியிடமே வந்து சிரித்துச் சிரித் துப் பேசி, தனிமை நேர்ந்தபோது மன்னிப்பும் கேட்கவும், காந்தத்தின் தற்போதைய இலக்கு தானேதானோ என்ற சந்தேகம் அவளுக்கு உண்டாயிற்று. ஒருவகையில் இது அவளுக்கு நிம்மதியையும் தந்தது. ஏனெனில், அவளுக்கு ஓர் ஆபத்து காந்தத்தின் மூலம் உண்டானால், அது தெரிந்த தும் அண்ணன், அவள் பிடியிலிருந்து மீண்டுவிடுவான் அல்லவா?

இப்போதும், உறுதியான அடிப்படையோடு எதையும் எடுத்துச் சொல்ல முடியாமையால், கதிரேசனிடமோ, கிருபா கரனிடமோ அவளால் எதையும் சொல்ல முடியவில்லை. எனவே, தற்காப்பு முயற்சிகளை மட்டும் செய்தாள்.

அன்றிரவு, ஜீப்பில் அண்ணன் தங்கையை அவர்கள் வீட்டில் கொண்டுவிட்ட கதிரேசன் வெகுநேரம் அங்கேயே தங்கிப் பேசிக் கொண்டிருந்தான்.

முறைப்படி, கிருபாகரனிடம், அவனுடைய தங்கையை மணந்து கொள்ள விரும்புவதாகக் கதிரேசன் தெரிவிக்க, மறைக்க முடியாத, வெளிப்படையான மகிழ்ச்சியுடன், ''இந்த வார்த்தைகளைக் கொஞ்ச நாட்களாகத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததாக முன்னவன் மொழிந்தான். தங்கையைச் சற்று கேலி செய்து விட்டு, ''இருவரும் பேசிக் கொண்டிருங் கள். எனக்கு உடம்பு கசகசவென்று இருக்கிறது. குளித்து விட்டு வருகிறேன்'' என்று கூறி உள்ளே சென்றான்.

''மைத்துனர் மகா நல்லவர்!'' என்று கூறிச் சிரித்தபடியே, மாதவியின் கையைப் பற்றி இழுத்து தன் அருகே அமரவைத் துக் கொண்டான் கதிரேசன்.

இந்த மகிழ்ச்சியின் இடையிலும், மாதவி தன் கவனம் மறக்கவில்லை. தானும் சில சாமான்கள் வாங்க வேண்டியிருப் பதாகச் சொல்லி, மறுநாள் திருநெல்வேலிக்குச் சென்றபோது, தானும் கூடச் சென்று சில பொருட்களை வாங்கி ஒரு தோள் பையில் அடுக்கி வைத்துக் கொண்டாள். அவள் கேட்ட பொருட்களை எடுத்துத் தந்த விற்பனையாளன் முகத்தை நினைத்து நினைத்து அவ்வப்போது அவளுக்குச் சிரிப்பு கூட வந்தது.

''என்னென்ன வாங்கினாய்?'' என்று கேட்ட அண்ணனி டம், தான் வாங்கியவற்றுள் ஒன்றான விசிலை எடுத்து ஊதிக் காட்டவும், காதைப் பொத்திக் கொண்டு சிரித்தான் அவன். ''வர வரப் பச்சைக் குழந்தையாகத்தான் மாறிக் கொண்டு வருகிறாய்! கதிரேசனிடம் இதைக் காட்டாதே. மிரண்டு போவார்!'' என்று சொல்லி மேலும் சிரித்தான்.

அந்த விசிலை ஊதிக் காட்டியபோது வேலைக்காரி வள்ளியும் விழுந்து விழுந்து சிரித்தாள்.

கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு, "என்னவோ, எனக்கு இந்த் விசிலை மிகவும் பிடித்துப் போய்விட்டது வள்ளி. இதை நான் விட்டுப் பிரியவே போவதில்லை. அவ்வப்போது ஊதிக் கொண்டே இருக்கப் போகிறேன். இந்த விசில் சத்தம் கேட்டால் அந்த இடத்தில் நான் இருக்கிறேன் என்று வைத்துக் கொள்" என்றாள் மாதவி.

பிறகு வழக்கம்போலப் பொதுவாக அவளோடு பேசிக் கொண்டிருந்தாள்.

வருங்கால மாமியாரான மகாலட்சுமியிடம் அளவளாவி யபோது அறிந்தவற்றையும், இந்த வள்ளியிடமும், அவ்வப் போது மற்றவர்களிடமும் உரையாடியபோது தெரிந்து கொண் டவற்றை எல்லாம் சேர்த்து சிந்தித்தபோது, ஏதோ புலப்பட்ட மாதிரி உணர்ந்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை. விழித்தெழும் போதே ஏதோ நடக்கப் போகிறது என்கிற உணர்வு மாதவிக்கு உண்டாகி விட்டது.

மதியம் திரும்புகையில், வள்ளியை, அவளுடைய மாமி யார் அழைப்பதாக ஆள் வந்து சொல்லவும் நிச்சயப்பட்டு விட, "நீ போ வள்ளி. கொஞ்ச நேரத்தில் காந்தம் வருவதாய்ச் சொல்லியிருக்கிறாள். அவளும் நானும் வெளியே போகலாம் என்று இருக்கிறோம்" என்று வேலைக்காரிக்கு வீடு போக அனுமதி அளித்துவிட்டு மாதவி, மேற்கொண்டு விவரமும் சொன்னாள்.

சற்றுத் தயங்கிவிட்டு, "அந்தப் பொண்ணுக்கு வெள்ளி, செவ்வாய், காத்துக்கறுப்பு என்று ஒண்ணும் கிடையாதும்மா. என்னேரமும் எங்கேயும் சுத்துவாள். ஆனா நீங்க சாக்கிர தையா இருங்கம்மா. காட்டுப்பக்கம், கழனிப்பக்கமெல்லாம் வெள்ளிக்கிழமையும் அதுவுமாப் போகாதீங்கம்மா" என்று கூறினாள்.

மாதவி பேசாமல் முறுவலிக்கவும், ஒரு பெருமூச்சு விட்டு, ''நீங்க பட்டணத்திலே படிச்சவங்க. இதெல்லாம் ஒத்துக்கிட மாட்டீங்க. ஆனா, எனக்காக, ஒரு துரும்பைக் கிள்ளித் தலையில் போட்டுக்கிட்டு, இரும்புத்துண்டு எதை யாச்சும் எடுத்துக்கிட்டுப் போங்கம்மா'' என்று, உள்ளே சென்று, ஓர் இரும்புத் தகடை எடுத்து வந்து நீட்டினாள்.

புன்னகையோடு, தகடை வாங்கி உள்ளே வைத்தபடி, ''உன் இரும்புத் தகடைவிட என் விசில் பிரமாதமாக்கும். அதுவும் என்னுடனேயே இருக்கப் போகிறது!'' என்றாள் மாதவி.

மாதவி எதிர்பார்த்தது போலவே, கிருபாகரன் திரும்பி வர ஒரு மணி நேரத்திற்கும் முன்னதாகவே காந்தம், சைக்கி ளில் வந்து சேர்ந்தாள். ''வருகிறீர்களா, காற்றாட சைக்கிளில் சுற்றி விட்டு வரலாம்!'' என்று அழைத்தபடி.

பலநாட்களுக்குப் பிறகு, தனிமையிலும் அவள் காட்டிய மரியாதைப் பன்மையில் மாதவிக்குச் சிரிப்பு வந்தது. ''ஓ! போகலாமே! இந்த ஊர் முழுக்க முழுக்கத் தெரிந்தவள் நீ. கண்ணை மூடிக் கொண்டு உன்னோடு வரலாமே!'' என்றவள், தான் அடுக்கி வைத்திருந்த தோள் பையை எடுத்துக் கொண் டாள்.

''என்ன அது?'' என்று காந்தம் விசாரிக்க, ''நிறைய மேக்கப் சாமான்கள், காந்தம். நான் என்ன, உன்னைப் போலச் சின்னப் பொண்ணா? வெயிலில் காற்றில், அடிபட்டு தோல் கறுத்து விடாமல் இருப்பதற்காக, மருந்து கலந்த தண்ணீர். லோஷன்..., ஃபவுண்டேஷன் கிரீம், பான்கேக், என்று எல் லாம் அதுபோலத்தான்!'' என்று மாதவி விவரம் தந்தாள்.

''அதெல்லாம் போட்டுக் கொண்டால் நல்ல நிறமாய்... வெள்ளை...யாய் இருக்கலாமா?'' என்றாள் முகத்தில் ஆசை பெருக, காந்தம்.

''இம்ம்!'' என்றாள் மாதவி உற்சாகத்துடன். ''ஆனால் கொஞ்ச நாள் தொடர்ந்து போடவேண்டும். நானெல்லாம் வேறு எப்படி இவ்வளவு வெள்ளையானேன் என்று நினைத்தாய்?'' என்றபடி தன் பெரிய தங்கமாலையை எடுத்து மாட்டிக் கொண்டு, கைகளிலும் தங்க வளையல்களை அணிந்து கொண்டாள், மாதவி.

ஒன்று பலிக்காவிட்டால் மற்றொன்று நினைத்தபடி, கடைசி வளையலை உள்ளே தள்ளியவள், காந்தம் யோசனை யோடு நோக்கக் கண்டு, ''வெள்ளிக்கிழமையல்லவா? வரும் போது கோயிலுக்குப் போய் வரலாம் என்று நினைத்தேன். இங்கெல்லாம் இப்படித்தானே பழக்கம்? கோயிலுக்கு நகைய ணிந்து செல்வது... காந்தம், இங்கே உள்ள பழக்க வழக்கமெல் லாம் நீதான், எனக்குக் கற்றுத் தரவேண்டும். சரிதானா? என்...னவோ, இப்போது நீ மனம் மாறிவிட்டது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா? ஒரு நல்ல சினேகிதி யாய் என்கூடவே இருப்பாயல்லவா?'' என்று வளவளத்த படி, வீட்டைப் பூட்டிச் சாவியை வழக்கம்போல, வெளியே விளக்கு மாடத்தில் வைத்து விட்டு மாதவி கிளம்பினாள்.

அவளை, முன்னே 'டபுள்ஸ்' ஏற்றிக் கொண்டு, காந்தம் சைக்கிளை ஓட்டிய வேகம் மாதவிக்கு வியப்பளித்தது.

ஒற்றையடித் தடங்கள்; அதுகூட இல்லாத இடங்களின் வழியே லாவகமாக சைக்கிளை ஓட்டியவள், மீண்டும் மாதவி பெருமளவு எதிர்பார்த்தபடியே, 'காட்டுப் பக்கமாய்ப் போய் வரலாமா?' என்றபடி, சைக்கிளைக் காட்டுப்பக்கம் திருப்பி னாள். ''இந்தக் காட்டில் பல சரித்திர அதிசயங்கள் இருக்கின் றன, மாதவியக்கா! கண்ணால் பார்த்தால் ஒழிய நம்பக்கூட மாட்டீர்கள்!'' என்றாள் ஆர்வமும் அதிசயமும் குரலில் கொட்ட.

அக்காவா?! பிரமாதம்! என்று உள்ளே எண்ணியப டியே, ''ஓ! போகலாமே! எனக்குக் கூட இந்தச் சரித்திர கால

அதிசயங்களைப் பார்க்க ரொம்பவும் ஆசை உண்டு'' என்று ஒப்பினாள் மாதவி.

ஆங்காங்கே உடைந்துகிடந்த அய்யனார் சிலை, யானை, குதிரைகளின் சிலைகளைக் காட்டியபடியே சென்ற காந்தம், கடைசியாக மேல்புறமெல்லாம் மண்மேடிட்ட, கோணல்மாணலாகக் குவியலாகக் கிடந்த கருங்கல்களின் இடையே இருந்த, ஒரே ஒரு ஆள், தவழ்ந்து செல்லக்கூடிய ஒரு வழியைக் காட்டி, ''இது ஒரு சுரங்கப்பாதை, அக்கா. உள்ளே போய்ப் பார்க்கலாமா? முதலில் நீங்கள் போகிறீர்களா?'' என்றபோதும் மறுக்காமல், தோள்ப் பையை வாங்கிக் கொள்ள நீண்ட கையைக் கவனியாதவள்போல அதைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு தவழ்ந்து அதனுள் சென்றாள் மாதவி.

முழுமையாக உள்ளே செல்லுமுன்பே, விழிகளைச் சுழற்றியவள், உள்ளே, குகைபோல வழி பெரிதாவதையும், பாம்பு தேள் போன்றவை எதுவும் இல்லை என்பதையும் கவனித்துவிட்டு, மறுகாலையும் எடுத்து உள்ளே வைத்தாள்.

மறுகணம் அவள் உள்ளே வந்த வழி அடைபட்டு, இருள் கவிழ்ந்து, அவளைச் சூழ்ந்து கொண்டது.

மாதவி வந்த வழி மூடிக் கொண்டபோதும் ஒரு நூல் இழை அளவு கோடாக ஒரு வெளிச்சம் இருப்பதைக் கண்டு, எழுந்து, அந்த வெளிச்சத்தின் அருகே வந்து நின்று, '' அய்யோ, காந்தம்! இந்த வழி எப்படியோ அடைத்துக் கொண்டு விட்டது போலத் தெரிகிறதே! எனக்குப் பயத்தில் தொண்டை காய்கிறதே! என்ன செய்வது?'' என்றாள் அஞ்சிய குரலில்.

''அங்கேயே கிடந்து செத்துத் தொலை!'' என்றாள் காந்தம் இளக்காரமாய். ''இந்த வழி தானாக அடைபடவில்லையடி, தங்கம்! நான்தான் வெளியே இருக்கும் விசையைத்

திருகி அடைத்திருக்கிறேன். இப்போதே தொண்டை காய்ந்து விட்டதா? ரொம்ப சந்தோஷம். மூன்றுநாள் தாங்கமாட்டாய்! இந்தக் காந்தத்தை என்னவென்று நினைத்தாய்? நினைத்ததை நடத்துகிறவளடி நான்! பசியாலும் தாகத்தாலும் உயிர் ஒடுங்கிச் சாகிறபோது, 'அய்யோ, காந்தத்தின் சொல் கேட்டு ஓடாமல் பேராசைப்பட்டு இருந்தோமே என்று வருந்தி வருந்தி உயிரை விடு' என்றாள் குரூரமும் எகத்தாளமுமாக. அத்துடனும் அவளது ஆத்திரம் அடங்கவில்லை. ''வைரமாலையை உனக்குப் போடுகிறாளா, கிழவி? இருக்கட்டும். அவளைக் கண்ணில் விரலை விட்டு ஆட்டுகிறேன்! என்னை யார் என்று நினைத்து, சமையல்காரிக்கு உதவியாய் இடித்துக் கொடு, அரைத்துக் கொடு என்பாள்? அத்தனையையும் அவளையே செய்ய வைக்கிறேன்! மரியாதை இல்லாமல் என்னை ஏவிய அத்தனை பேரையும் என் முன் முட்டி போட வைக்கிறேன்...''

பெற்ற தாய் என்பது கூட இல்லாமல், 'சமையல்காரி' என்று காந்தம் குறிப்பிட்டதை எண்ணி மாதவி வியந்து கொண்டு இருந்தபோதே, ''...பாவம், அதைப் பார்க்க நீ இருக்க மாட்டாயே என்பதுதான் கொஞ்சம் வருத்தமாக இருக்கிறது. பரவாயில்லை. பொறுத்துக் கொள்ள வேண்டியது தான். இனி, நீ செத்தபிறகு வந்து பார்க்கிறேன்'' என்றதோடு, அந்த நூலிழை வெளிச்சம் மறைய, காந்தம் அந்தக் குகையின் வழியை முழுதாக அடைத்து விட்டுப் போய் விட்டாள்.

செத்த பிறகு வந்து பார்க்கப் போகிறாளாமா? அதற்கு எத்தனை நாளாகக் கூடும்?

வெளியிலிருந்து எந்தச் சத்தமும் கேட்காதபோதும், சற்று நேரம் பொறுத்திருந்து விட்டு, மாதவி தன் தோள் பையிலிருந்து ஒரு சிறு 'டார்ச்'சை எடுத்து அடித்துப் பார்த்தாள். நல்லவேளையாகச் சில சிலந்தி வலைகளைத் தவிரப் பூச்சி பொட்டு என்று ஒன்றும் தென்படவில்லை. தோள் பையை

முன்னே வைத்து, அதிலிருந்த தண்ணீர் பாக்கெட்டுகளையும், சத்துமாவு பாக்கெட்டுகளையும், சாக்லேட்டுகளையும், கடைசியாக விசிலையும் எடுத்துக் கடை பரப்பினாள்.

இந்தத் தண்ணீரும் உணவும் தீருமுன் குகைக் கதவைத் திறந்து பார்க்க காந்தம் வருவாளா என்று யோசித்தபடியே ஒரு தண்ணீர்ப் பாக்கெட்டை எடுத்தாள்.

மாலையில் வீடு திரும்பிய கிருபாகரன், கதவு பூட்டப்பட்டிருந்ததை முதலில் பெரிதாக நினைக்கவில்லை. தங்கை பண்ணை வீடு சென்றிருப்பாள் என்று எண்ணி முறுவலித்தபடியே சாவியை எடுத்துக் கதவைத் திறந்து உள்ளே சென்றான்.

வெளியே செல்வது பற்றித் தங்கையின் குறிப்பு எதுவும் மேசையில் இல்லை என்று கண்டபோதும் கூடக் காதல் மயக்கத்தில் மறந்திருப்பாள் என்று எண்ணினானே தவிர அவன் கவலையேதும் கொண்டானில்லை. கை கால் கழுவி விட்டு, சாப்பாட்டு அறையில் இருந்த புட்டை எடுத்து, சர்க்கரை கலந்து உண்டு முடித்து அப்பாடி என்று படுத்துக் கிடந்தான்.

ஆனால், இருள் பரவி வரும் வேளையில், மாதவியைப் பார்க்கவென்று கதிரேசன் வந்து நிற்கவும், சட்டெனக் கிருபாகரன் கதிகலங்கிப் போனான்.

ஆனால், வெளியே அமைதி காத்தபடி, ''வள்ளியோடு எங்கேனும் சென்றாளோ, என்னவோ? விசாரித்துப் பார்ப்போம்'' என்று, கதிரேசன், கிருபாகரனையும் அழைத்துக் கொண்டு வள்ளியின் வீட்டுக்குச் சென்றார்கள்.

'சின்னவரை'க் கண்டதும் விழுந்தடித்துக் கொண்டு உபசாரம் செய்த முத்துக்கருப்பனைக் கையமர்த்திவிட்டு, வள்ளியிடம் மாதவி பற்றிக் கதிரேசன் விசாரித்தான்.

புரியாத பார்வையோடு, ''இன்னைக்கு நான் மதியம் முடிஞ்சதுமே வந்திட்டேனே சின்னய்யா...'' என்றவள் திடுமெனத் திகைப்புற்று, ''அய்யா, என் மாமியார் வரச்சொன்னான்னு வெளியூர்க்காரக, போற வழியிலே, என்கிட்ட சொன்னாங்கய்யா. வந்து பாத்தா, மாமியாக்காரி அப்படிச் சொல்லி விடவே இல்லியாம்! அத நம்பி நான், இங்கிட்டு வந்ததும் அங்கிட்டு சின்னம்மாவை....'' என்று படபடத்தவள், மீண்டும் அமைதியுற்று, ''இல்லைங்கய்யா, திடுக்குன்னு என்னமோ நினைச்சுப் பயந்திட்டேன். காந்தம் கூட வெளியே போறதா மாதவியம்மாவே என்கிட்ட சொன்னாங்கய்யா!'' என்று விவரம் தந்தாள்.

தெளிவுற்றவர்களாக, ஆண்கள் இருவரும் பண்ணை வீடு வந்து சேர்ந்தனர்.

முறுவலோடு கை கால் கழுவ நீர் எடுத்து வந்தவளிடம், ''மாதவி எங்கே?'' என்று இருவருமாகக் கேட்கவும் ஒருகணம் காந்தத்தின் முகம் வெளிறிவிட்டது.

''எ... என்னைக் கேட்டால்? எனக்கெப்படித் தெரியும்?'' என்றாள் சமாளித்தபடி.

''உன்னோடு வெளியே செல்லப் போவதாக வள்ளியிடம் மாதவி சொன்னாளாமே!'' என்று கதிரேசன் வினவ, திகைத்த நோக்குடன் கிருபாகரன் பேச்சிழந்து நின்றான்.

''அதெப்...'' என்று தொடங்கி, தன்னைத்தானே காட்டிக் கொடுத்துவிட இருந்த காந்தம், சமயத்தில் பேச்சை நிறுத்திக் கொண்டாள். தான் மாதவியை அழைத்துப் போவதாக இருந்தது யாருக்குமே தெரிய வழியில்லாத போது, மாதவி எப்படி அப்படிச் சொல்லியிருக்க முடியும் என்று உள்ளூரக் குழம்பி, வேகமாக யோசித்தவளுக்கு, ஒரு விடை கிடைத்தது. மனம் மாறிவிட்டாற்போலக் காந்தம் போட்ட வேடத்தில் ஏமாந்து, மாதவியாகவே காந்தத்தை அழைத்துக் கொண்டு

எங்கேனும் செல்ல நினைத்திருக்க வேண்டும்! கடைசியாகக் கூட ஏதோ சினேகிதி அது இது என்று பிதற்றினாளே!

அப்படித்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்து, கூடவே, மாதவியை அவள் அழைத்துச் சென்றதை யாரேனும் பார்த்திருந்தா இது சமாளிக்கும் என்று முடிவு செய்து, "ஆமாம்... நானும் மாதவியக்காவும் என் சைக்கிளில் கொஞ்ச தூரம் போனது உண்மைதான். ஆனால், பாதியில் இறங்கிக் கொண்டு, வீட்டுக்கு நடந்து போய்க் கொள்வதாகச் சொன் னார்களே! இன்னமுமா வரவில்லை?" என்று விழிகளை மலர்த்தினாள் அவள்.

இல்லை என்பது போலக் கதிரேசன் தலையசைக்கவும், "அப்போ அந்தக் கால்சட்டைக்காரர்..." என்று தொடங்கி விட்டு, காந்தம் தன் இருகைகளாலும் வாயைப் பொத்திக் கொண்டாள்.

"எந்தக் கால்சட்டைக்காரன்?" என்று கிருபாகரன் இறு கிய குரலில் வினவ, "யார், என்ன என்று எனக்குத் தெரியாது. ஆனால் இதற்குமுன் ,சில தடவை மதிய நேரங்களில் அந்த ஆள் வந்து அக்காவோடு பேசிக் கொண்டிருந்து விட்டுப் போவதை நான் பார்த்திருக்கிறேன். இன்றுகூட, பாதை ஓரமாய் அவரைப் பார்த்துவிட்டுத்தான், சைக்கிளில் இருந்து இறங்கிக் கொண்டு மாதவியக்கா என்னைப் போகச் சொன் னார்கள்" என்று கோவையாகப் பதிலளித்தாள் காந்தம். "ஒருவேளை... அவரோடு...."

மீண்டும் கிருபாகரன் திகைத்து நிற்க, "உளராதே!" என்று கதிரேசன் அதட்டினான். "அப்படி எங்கேனும், யாரோ டவாது செல்வதாக இருந்தாலும் மாதவி என்னிடம் சொல்லா மல் போகமாட்டாள்!" என்று உறுதியான குரலில் இயம்பிய வன், "வாருங்கள், கிருபா. ஆட்களைத் திரட்டி மாதவியைத் தேட முயற்சி செய்வோம்" என்று கிளம்பினான்.

''யார், கிருபாவா?'' என்று உள் அறையிலிருந்து மகாலட்சுமி வர, தணிந்த குரலில், ''இப்போது அம்மாவிடம் எதுவும் சொல்ல வேண்டாம்'' என்று மற்ற இருவரையும் எச்சரித்து விட்டு, ''வெள்ளிக்கிழமை அல்லவா? கோயில் வரை போய் வருகிறோம்'' என்றுரைத்து, தாயார் மேலே பேசுமுன் கிருபாகரனை இழுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான்.

தன் முயற்சியால் ஓரளவு முயன்றபின், கதிரேசன் தந்தையிடம் விவரம் தெரிவிக்க, பெரிய அளவில் மாதவியைத் தேட ஏற்பாடு செய்யப்பட்டது.

கதிரேசனிடம், 'பைக்'கை வாங்கிக் கொண்டு, கிருபாகரன் காட்டில் இங்குமங்குமாய்ச் சுற்றி அலைந்தான். முழு இருபத்திநாலு மணிநேரம்.

கடைசியாக இல்லை, இல்லை என்ற பதிலுடனேயே எல்லோரும் திரும்பி வந்தனர்.

பண்ணை வீடு திரும்பிய கிருபாகரன் காந்தத்தைத் தனியே அழைத்துப் பேசினான்.

அவள் பழைய கதையையே கிளிப்பிள்ளையாகப் படிக்கவும், கதிரேசனை நாடிச் சென்றான். அவனைத் தனியே அழைத்துச் சென்று, ''உங்களிடம் ஒன்று சொல்லவேண்டும்'' என்று தொடங்கவும் கதிரேசன் குறுக்கிட்டான். ''மாதவிக்கு வேறுநாட்டம் என்று எதுவும் சொல்ல வேண்டாம், கிருபா. நான் நம்பமாட்டேன்'' என்று அறிவித்தான்.

''அதல்ல. இது என்னைப் பற்றி....''

இரவு முழுவதும் தூங்காத விழிகளைத் தேய்த்து விட்டபடி, ''அதற்கு இதுவா நேரம்?'' என்றான் கதிரேசன் சோர்வுடன்.

''இது, மாதவிக்காகத்தான், கதிர். எனக்கு ஒரு சந்தேகம்...'' என்ற தவிப்புடன் தொடங்கி, ''உங்களுக்கு நான் காந்தம் பற்றித் தெரியுமில்லையா?'' என்று கேட்டான்.

''காந்தம்? அவள் சின்னப்பிள்ளை, கிருபா.''

''இல்லை கதிர். என்னைப் பார்த்தால் அவள் பிறர் அறியாமல் ஒருவிதமாய் 'போஸ்' கொடுப்பாள்...''

''சினிமாவின் பாதிப்பு, கிருபா. சினிமா நடிகைகள் போலப் போஸ் கொடுப்பது இந்த வயதுப் பெண்களுக்கு இயல்புதானே?'' என்றான் கதிரேசன்.

''அதுமட்டுமில்லை, கதிரேசன். நாங்கள் பேசியிருக்கிறோம். முதலில் ஜாடைமாடையாக. நான் காணாமல் போவதற்கு முதல்நாள் தனியாகப் பேசவென்று, காந்தம் என்னைக் காட்டுக்கு வரச்சொன்னாள். நான் என் காதலை எடுத்துச் சொன்னபோது, திடீரென்று ஓடியாடி, ஒளிந்து விளையாடினாள். ஓர் இடத்தில், கல் குவியலுக்குள் குகை மாதிரி ஒன்று தெரிந்தது. அதனுள் ஒளிந்திருக்கிறாளோ என்று தேடப் போனேன். உள்ளே நான் சென்றதும் வழி அடைபட்டுவிட்டது. கத்தி கூக்குரலிட்டு எதற்கும் பதிலில்லை. பசியும் தாகமுமாய் உணர்விழந்து விட்டேன். பிறகு மருத்துவமனையில்தான் கண்விழித்தேன்.''

''காந்தம் இதுபற்றி ஒன்றுமே சொல்லவில்லையே?''

''மருத்துவமனையில் நானும் அதைத்தான் அவளிடம் கேட்க நினைத்தேன். அதற்குள், 'ஒளிந்து விளையாடிக் கொண்டிருந்தவர் எங்கே போனீர்கள்? அதுவும் ஆசை ஆசையாய்ப் பேசிக் கொண்டிருந்தவர், ஆளையே காணோமே என்று தேடிப் பார்த்துவிட்டு ஏமாந்து போய்த் திரும்பி வந்தேன்'' என்றாள். 'அப்படி ஆசையாகப் பேசியவன் எங்கே போனான் என்று தேடத் தோன்றவில்லையா?' என்று கேட்டேன். 'எப்படித் தேடுவது? ஏதோ ஒரு வேகத்தில்

— அல்லது விளையாட்டாய் அப்படிப் பேசிவிட்டு, அப்புறம் இந்த வேலைக்காரி பெற்றெடுத்த அப்பன்பேர் தெரியாத அனாதைப் பெண் அதை உண்மையென்று நம்மை உடும் பாய்ப் பிடித்துக் கொண்டு விடக்கூடாதே என்று ஓசைப்படா மல் நழுவி விட்டீர்களோ என்று நினைத்தேன். என் மனமே உடைந்து விட்டது தெரியுமா?' என்று அழுதாள்... உண்மை என்றுதான் நினைத்தேன். ஆனால் இப்போது மாதவி கடைசி யாகக் காணப்பட்டது அவளுடன்தான்... என்னைப் போலவே... கதிரேசன், எனக்குப் பயமாய் இருக்கிறதே!'' என்று குரல் நடுங்கினான் கிருபாகரன்.

கண்களை இறுக மூடித் திறந்தான் கதிரேசன். அவ்வப் போது கண்ட கண்ட போஸ்களில் காந்தம் நின்றதும், சிறுபிள் ளைத்தனம் என்று அலட்சியப்படுத்தியதும் அவனுக்கு நினைவு வந்தன. ஒருவேளை அதெல்லாம் சிறுபிள்ளைத்த னம் அல்லவோ?

ஆனால், கிருபாகரனிடம் முயன்றதையே அவனிடமும் அவள் ஏன் செய்ய வேண்டும்? அதே எதிரொலி கதிரேசனிட மும் கிடைக்கிறதா என்று பார்த்தாளா?

சில வினாடி காலம் யோசித்து விட்டு, ''மாதவிக்குக் காந்தத்திடம் அவ்வளவாகப் பிடிப்பு கிடையாது, கிருபா. அப்புறம் அவளோடு கூடச் சென்றாள் என்றால்...'' என்று சொல்லிக்கொண்டு இருந்தவன் அரவம் உணர்ந்து திரும்பிப் பார்த்தான்.

அவர்களை நாடி வருகிறவளைக் கண்டதும், ''என்ன வள்ளி?'' என்று விசாரித்தான்.

வள்ளியின் முகத்தில் கவலை அப்பியிருந்தது. ''பிகில் அய்யா. காட்டிலே இன்னைக்கு எங்கெங்கயோ பிகில் சத்தம் கேட்டதாகச் சுள்ளிப் பொறுக்கப் போனவங்க சொன்னாங் கய்யா. அன்னைக்கு அம்மா... அம்மா சொன்னாங்க, பிகில்

இருக்க எடத்திலே நானும் இருப்பேன்னாங்கய்யா! இப்போ காட்டுலே... காட்டுலே...'' என்று கண்ணீருடன் விசும்பினாள். அம்மாவுக்கு என்ன ஆச்சோ தெரியலியே, அய்யா!''

''அன்று திருநெல்வேலியில் விசில் வாங்கி வந்தாள்'' என்றான் கிருபாகரன் குழப்பத்துடன்.

நண்பனின் கையைப் பற்றி அழுத்தி விட்டு, ''உன் அம்மாவுக்கு ஒன்றும் ஆகவில்லை, வள்ளி. படித்தவள் இல்லையா? வேறுமாதிரி விளையாடிப் பார்க்கிறாள். இரண்டே நாட்களில் வந்துவிடுவாள். ஆனால், நீ மட்டும் இந்த விசில், அவள் சொன்னது எதையும் யாரிடமும் சொல்லாதே போ'' என்று அனுப்பினான்.

அவள் சென்றதும், அன்று மாதவி வேறு என்னென்ன வாங்கினாள் என்று கிருபாகரனிடம் விசாரித்து அறிந்தான்.

பிறகு, ''கிருபா, இது பொறுமையோடு இருக்க வேண்டிய நேரம், இது. என் ஊகம் சரியானால், உங்கள் தங்கை ஆடுவது ஓர் அபாயகரமான விளையாட்டு! எந்த அளவு அபாயம் இருக்கிறது என்று புரியாமல்... சரி. இனி அதைச் சொல்லிப் பயன் இல்லை. வெளியே, மாதவி ஒரு காரணமாய் வெளியூர் சென்றிருப்பதாகவே இருக்கட்டும். காந்தத்தை அவள் அறியாமல் கவனிப்போம். மற்றபடி.... காடு பெரியது. நம் ஊரைச் சுற்றி மட்டுமின்றி இன்னமும் நெடுந்தூரம் செல்கிறது. மரங்களின் ஊடே, கல், இடிபாடுகள், சிலைகள்... ஏராளம்... நேரில் பார்த்த உங்களாலேயே கண்டுபிடிக்க முடியாதபோது... கடவுளைத்தான் நம்பியாக வேண்டும். எதற்கும் இந்த விசில் சத்தத்தைத் தொடர்ந்து பார்க்கலாம்...'' என்று கண்களை இறுக மூடிக் கதிரேசன் ஓர் ஆழமான மூச்சு எடுத்து விட்டான்.

விசில் சத்தத்தை வைத்து ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை.

மாதவி மாட்டிக் கொண்டு இருந்தது. அந்தச் சுரங்கப்பா தையின் தொடக்கப்பகுதி. பாதையின் பல்வேறு பகுதிகளில் மண் மூடி விட்டிருந்தது. பாதை முழுவதுமாகக் காற்றும் வெளிச்சமும் வருவதற்காக — அதேசமயம் மழைநீர் வந்து விடாமல் கவிழ்ந்த கூம்பு போன்ற வடிவங்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தன. கல்லும் கட்டியுமாகப் பாதை மூடிவிட் டிருந்த போதும், கல் இடுக்குகளின் வழியே காற்று, போக வர இருந்ததால், இந்தக் கூம்புகள் ஒவ்வொன்றின் வழியேயும் விசில் சத்தம் மெல்லியதாகக் கேட்டது. எனவே எங்கே தோண்டினாலும், கல்லும் மண்ணும்தான் கண்ணில்பட்டது. கூடவே, எங்கேனும் தோண்டப் போய், இசகுபிசகாக அடுத்த மண் சரிந்து மாதவியை மூடிவிடக் கூடாதே என்ற அச்சம் வேறு அவர்களது கையைக் கட்டிப் போட்டது. எனவே, மாதவியின் கையிலிருந்த உணவும் நீரும் குறைந்தது ஒருவா ரம் அவளைக் காக்கும் என்று முடிவு செய்து, சற்றுப் பொறுத்திருக்க முடிவு செய்தனர்.

பொறுக்க முடியாமல் தவித்தவள் காந்தம்தான். கண்ணா டியில் தன் லேசான கறுப்பு முகத்தைப் பார்க்கும் போதெல் லாம், மாதவியின் ஒப்பனைப் பொருட்கள் அவளைக் காந்த மாய்க் கவர்ந்து இழுத்தன. கூடவே மாதவி அணிந்திருந்த நகைகள்! நகைகளை உடனே அணிய முடியாவிட்டாலும் உருக்கி வைத்துக் கொள்ளலாமே!

மாதவி வெளியூர் போய் விட்டதாகக் கதிரேசன் இரண்டு நாள் தாடியோடு, சோக முகத்துடன் அறிவித்தபோது, காந்தத் தின் மனம் துள்ளியது. மாதவியின் இழப்பைக் கதிரேசன் ஏற்றுக் கொண்டுவிட்டான்!

கதிரேசன் அறிவித்தது மாதவி மறைந்தபின் மூன்றாம் நாள்.

மறுநாள் காலை பல்லைக் கடித்துப் பொறுமை காத்தவள், ஒரு சினேகிதியைப் பார்த்து வருவதாக மகாலட்சுமியிடம்

சொல்லி விட்டு, சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டாள்.

கதிரேசன் ஏற்பாடு செய்திருந்த நம்பிக்கையான ஆட்கள் தகவல் கொடுக்க, சற்றுத் தொலைவிலேயே கதிரேசனும் கிருபாகரனும் அவளைப் பின் தொடர்ந்தனர்.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுக் காட்டினுள் புகுந்தவள், அதற்குமேல் யாரையும் எதிர்பாராமல் வேகமாக மாதவியை அடைத்து வைத்திருந்த இடத்தை அணுகினாள்.

சற்று யோசித்து விட்டு, ஒரு பெரிய கல்லை எடுத்து, சுரங்கப் பாதையின் வாயிலில் வைத்துவிட்டுத் திரும்பி வந்து, நாலடி தூரத்தில் இருந்த ஓர் உடைந்த சிலையின் கையைத் திருகினாள்.

சுரங்கவழி திறந்துவிட, 'நில்' என்று நெருங்கிய இருவரையும் பார்த்ததும் காந்தத்துக்கு மெய்யாகவே, மயக்கம் வந்துவிட்டது.

''மாதுக் கண்ணா, வாம்மா!'' என்று கிருபாகரனின் தழுதழுத்த குரல் கேட்ட பிறகும், டார்ச் விளக்கை ஓர் ஆயுதம் போலப் பிடித்தபடி, எச்சரிக்கையுடனே வெளியே வந்த மாதவியைப் பார்த்ததும், கதிரேசனுக்குச் சிரிப்பும் கோபமும் ஒருங்கே தோன்றின.

வெளியில் இருந்த வெளிச்சத்தில் கூசிய கண்களை மூடி மூடித் திறந்தவள், கீழே விழுந்து கிடந்த காந்தத்தைப் பார்த்ததும், 'என்ன?' என்றாள் சைகையோடு.

அசதியும் வெறுப்புமாக முகத்தைத் திருப்பி, ''விட்டுத் தொலை'' என்று கதிரேசன் கூறவும், பட்ட பாட்டிற்கெல்லாம் பலன் கிடைத்தாற்போல மாதவியின் உள்ளம் துள்ளியது.

புன்னகையோடு திரும்பியவளிடம், ''போதும் இளித்தது. அங்கே தண்ணீர் ஏதும் மிச்சம் வைத்திருந்தால் கொடு. உன்னைத் தேடித் தேடி எங்கள் தொண்டை வரண்டு விட்டது!'' என்று எரிந்து விழுந்தான் கதிரேசன்.

கூட வந்த ஆட்களில் ஒருவனிடம் காந்தத்தை வீட்டுக்கு அழைத்துச் செல்லுமாறு பணித்தான்; இன்னொருவன் கொணர்ந்து நிறுத்திய பைக்கில் மாதவியை முரட்டுத்தனமா கப் பிடித்து இழுத்து ஏற்றித் தானும் ஏறினான். ''அம்மாவிடம் விவரம் சொல்லுங்கள், கிருபாகர்'' என்று உரைத்தவன், மேலே நில்லாமல் 'பைக்'கைக் கிளப்பிக் கொண்டு சென்று விட்டான்.

அவன் சென்ற இடம் கிருபாகரனின் வீடுதான்.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று, ஒரு மறுப்புமின்றி கூடவே உள்ளே வந்தவளை இறுக அணைத்துக் கொண்டு சற்றுநேரம் பேசாமல் நின்றான்.

பிறகு, ''இது என்ன பைத்தியக்காரத்தனம்? மாதவி?'' என்றான், இன்னமும் தீராத கோபத்துடன்.

''அண்ணன்!'' என்றாள் மாதவி. ''காந்தத்திடம் மயங்கிக் கிடந்தார். அவரைக் காப்பாற்ற வேறு வழியில்லை!'' என்றாள் அவள் மெதுவாக.

அவளை ஒருதரம் பலமாக உலுக்கி, ''மயக்கம் ஒருநாள் தெளியக்கூடும். உயிர் போனால் திரும்பி வருமா?'' என்று கேட்டான் அவன்.

அவனது ஆத்திரம் தன் நன்மை நாடியே என்பதை உணர்ந்தவளாய்க் கதிரேசனின் முகத்தை மாதவி மென்மை யாக வருடினாள். ''என் உயிருக்கு ஒரு பயமும் இல்லை, கதிர். இன்னும் மூன்று நாட்களுக்கு என்னிடம் உணவும் தண்ணீரும் இருந்தன'' என்றாள்.

''அதற்குப் பிறகும் அவள் வரவில்லை என்றால்?''

''வராமல் இருக்கமாட்டாள்'' என்று அவளுக்கு தான் வைத்த தூண்டில் புழுக்கள் பற்றிக் கூறினாள் மாதவி. ''நகை, அல்லது வெள்ளை நிறமாகும் ஆசை அவளை எப்படியும் இழுத்து வந்துவிடும் என்று எனக்கு நிச்சயம்!'' என்றாள் புன்முறுவலோடு.

''ஆமாம், சிரி! அவள் கதவைத் திறக்கும் போதே, உன் தலையில் போட ஒரு பெரிய கல்லையும் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள் தெரியுமா?'' என்று, அவள் தலையை மிருதுவாக வருடிக் கொடுத்தான் கதிரேசன்.

''அதையும் எதிர்பார்த்துதான் நான் உள்ளேயே, கையில் டார்ச் விளக்குடன் தயாராகக் காத்திருந்தேன், தெரியுமா? அண்ணன் குரல் கேட்டிராவிட்டால் நானாக வெளியே வந்திருக்கவே மாட்டேன்'' என்றவள் அவன் முகம் மாறவும், ''என்ன?''வென்றாள்.

''இந்தக் காந்தம்! அவள் இப்படி என்றால் கண்ணால் பார்த்த பிறகு கூட நம்ப முடியவில்லையே!''

''உளறல்!'' என்றான் கதிரேசன் பட்டென.

மாதவி பேசாமல் பார்த்துக் கொண்டு இருக்கவும், சற்று முகம் மாறி, ''கிருபாகர் சொன்னதை நினைக்கும்போது... தொடர்ந்து நடந்ததையும் எண்ணிப் பார்க்கும்போது வேறு மாதிரி. இந்தக் காந்தம் நாங்கள் அறிந்த சிறுமி அல்ல என்றுதான் தோன்றுகிறது. மாதவி சொல்லு, அவளைப் பற்றி நீ அறிந்த அத்தனையையும் ஒன்றுவிடாமல் சொல்லு'' என்று பணித்தவன், மாதவியை சோபாவில் உட்கார வைத்துத் தானும் அருகே அமர்ந்து கொண்டான்.

மாதவி கூறக்கூற, வியப்பும் திகைப்புமாகக் கேட்டு முடித்துவிட்டு, ''காந்தத்தின் கணிப்பு சரிதான், மாதவி. அந்தச் சமயத்தில் நீ இந்த உண்மைகளை எல்லாம் சொல்லியிருந்தால் கூட கிருபாவும் நானும் அதை நம்பியிருப்போம் என்று சொல்ல முடியாதுதான். அதைச் சொல்லவும் முடியாமல், ஒன்றுமிராது அலட்சியப்படுத்தவும் முடியாமல் ரொம்பவும் திணறியிருப்பாய்! அதிலும் கிருபாவுக்கு நேர்ந்த ஆபத்திற்குப் பிறகு, ரொம்பவே கலங்கியிருப்பாய்... எப்...படி மிரட்டியி ருக்கிறாள், பாவி! கருமாதியாமா? கிராதகி!'' என்று மாதவி யின் கையைப் பற்றி ஆறுதலாக வருடிக் கொடுத்தான்.

சட்டென அவள் முகத்தில் பார்வையைப் பதித்து, இத்தனை மிரட்டல்களுக்குப் பிறகும் — அவை ஒன்றும் வெற்றுவேட்டு மிரட்டல்கள் அல்லவென்று உனக்கு நன்றாகவே தெரியும் — அப்படியும், விலகாமல் துணிந்து இங்கேயே இருந்தாயே, மாதவி? ஏன்?'' என்று மென்மையான குரலில் கேட்டான்.

பார்வையில் குறும்பு மிளிர, ''சொன்னால்தான் தெரியுமாக்கும்?'' என்றாள் மாதவி.

''தெரி...யு...ம்...'' என்று இழுத்தவன், மாதவியின் வடிவான இதழ்களை ஒரு விரலால் அளந்துவிட்டு, ஆனாலும் உன் அழகு வாயால் அதைச் சொல்லக் கேட்க ஆசை என்று வைத்துக் கொள்ளேன்!'' என்றான் கதிரேசன் சரசமாக.

''அப்படியா, சேதி!'' என்று மாதவி கண்ணை உருட்டினாள். ''சர்வ வல்லமை படைத்த சின்னப் பண்ணையார்! இந்த பூம்பொழில் கிராமத்தின் பட்டம் கட்டாத இளவரசர்! அவர் ஒன்று ஆசைப்பட்டு அதை நிறைவேற்றாமல் இருப்பது சாத்தியமா, என்ன? இதோ சொல்லுகிறேன்!'' என்று தொண்டையைக் கனைத்து விட்டுக் கொண்டாள்.

ரசனையுடன் கதிரேசன் பார்த்துக் கொண்டிருக்க, மாதவி தொடங்கினாள். ''அகோ, கேளும் பிள்ளாய், கதிரேச மகாராஜரே. இந்த மா...தவி என்கிற மங்கை நல்லாள், இந்தக் கதிரேச மகாராஜர் மீது கொண்ட மையலினாலே, அவரைக் கணமேனும் விட்டுப் பிரியநேர்ந்தால், தட்சணமே அவளது உயிர் அவளது உடலை விட்டுப் பிரிந்து போகும் என்று அறிந்திருந்த காரணத்தினாலேதான் அத்தனை பயமுறுத்தல்களையும் தாங்கிக் கொண்டு இவ்விடத்திலேயே தாமசித்தாள்'' என்று எடுப்பாகக் கூறிவிட்டு, ''உங்கள் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையின் உரைநடையின் பாணி! பரவாயில்லையா?'' என்று கேட்டுச் சிரித்தாள்.

''போக்கிரி!'' என்று அவளைப் பற்றிய கதிரேசன் சட்டென விலகினான். ''இருக்கட்டும். எல்லாம் வட்டியும் முதலுமாகப் பிறகு வசூலித்துக் கொள்கிறேன். ஆனால், உள்ளூர இவ்வளவு ஆசையை வைத்திருந்தவள், ஏன் மாதவி, முதலில் அப்படி விலகி விலகிப் போனாய்? அன்றைக்கு வள்ளியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு வெளிப்படையாகப் பேசினேனே, அப்போதெல்லாம் எனக்குக் கிட்டத்தட்ட நம்பிக்கையே இல்லாத நிலைதான்.''

சிரிப்பு மறைய, ''வினோதன் அழகாகப் பேசுவார், கதிர். அவர் பேசிய விதத்தில், அவர் என்னைக் காதலித்ததாகவே நினைத்திருந்தேன். பிறகு என்ன நடந்தது என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. ஆனால், அதன்பிறகு, காதல், கல்யாணம் என்று, எந்த ஓர் ஆண்மகனும் என்னைப் பாதிக்கும்படி விடக்கூடாது என்று ரொம்பவும் உறுதியாக — உள்ளூர சத்தியமே செய்திருந்தேன். அதனால்தான் உங்களிடம் தன்னை அறியாமல் ஓர் ஈர்ப்பு, தட்டி வெட்டிப் பேசுவதில் ஆர்வம், பிறகு அதை எண்ணிப் பார்ப்பதில் ஓர் ஆனந்தம்... என்று ஆகவும் பயந்துவிட்டேன். உங்களுக்கும் ஒரு சேதி மாதிரி முடிந்த அளவு ஒதுங்கிவிடவே முயன்றேன். ஆனால், முடியவில்லை. உங்களைத் தொட்டாலே மின்சாரம் பாய்ந்த மாதிரி, என்னவோ அதிலிருந்து என்னால் விலக முடியவில்லை...'' என்றாள் மாதவி.

கதிரேசன், உள்ளடக்கிய முறுவலோடு பார்த்துக் கொண்டிருக்கவும், சட்டெனத் திகைத்து, ''அன்று அந்த ஏணி... அது தானாகத்தானே... சரிந்த... இல்லையா?'' என்று கோபமும், கூடவே அதை மீறிய சிரிப்புமாக வினவினாள்.

''நின்று அழுத்திப் பார்த்து விட்டு ஏறிய ஏணி. நிதானமாகவே இறங்கும்போது தானாகச் சரியுமா?'' என்று கூடச் சேர்ந்து சிரித்தான் கதிரேசன். ''நீயோ சில விஷயங்களில் மகா மக்காக இருந்தாய். அதைப் புரிய வைக்க வேண்டியிருந்தது!''

''அதற்காக!'' என்று ஆத்திரமாகக் கண்ணை உருட்ட முயன்று விட்டு முடியாமல் மாதவி நகைத்தாள்.

சிரித்து ஓய்ந்ததும், ''அன்று, அதைப் பார்த்த பிறகுதான் காந்தத்துக்கு வெறி பிறந்து விட்டது...'' என்றாள் மாதவி.

''அவளுக்கு உங்கள் மேல் ஆசை!''

தலையசைத்தான் அவன். ''அவளைச் சின்னப் பிள்ளை என்று நினைத்தேன். கைக்குழந்தையாக அவளைத் தூக்கிக் கொண்டு சிவத்தி வந்தபோது எனக்குப் பதினோரு வயது. குண்டாய் அழகாய் இருப்பாள். தோளில் தூக்கி விளையாடு வேன். இந்தக் கள்ளம் அவளுள் எப்படிப் புகுந்தது என்று தெரியவில்லை! ஒருதரம், தான் இல்லாவிட்டால் கூடக் காந்தம் இந்த வீட்டை நன்றாக நிர்வகிப்பாள் என்று அம்மா சொன்னார்கள். அப்போது அவள் முகம் பூரித்துப் பளபளத் தது இப்போதும் எனக்கு நினைவிருக்கிறது. அம்மாவுக்கும் தான். மெச்சுதலில் மகிழ்கிறாள் என்று அவ்வப்போது பாராட் டுவோம். அதையெல்லாம், மொட்டைத் தலைக்கும் முழங்கா லுக்குமாக முடிச்சுப் போட்டுப் பார்த்திருப்பாள் போல! சே!

''இனி என்ன செய்யப் போகிறீர்கள்? அவள் அம் மாவை நினைத்தால் பாவமாக இருக்கிறதே!''

''ஆமாம். சிவத்தி பாவம். வாழ்வில் ஒரு சுகமும் அனுபவிக்காதவள். அம்மாவுக்காக உயிரைக்கூட விடக்கூடி யவள். அவளுக்காக இவளைச் சட்டத்திடம் ஒப்படைக்காமல் விட வேண்டியிருக்கிறது. ஆனால், இனி இங்கே இருக்க விடவும் முடியாது. நமக்கு ஒரு பெரிய பனைமரத்து வீடு இருக்கிறது. அங்கே பதனீர் காய்ச்சுவார்கள். அங்கே அனுப்பி விட்டு, கொஞ்சநாள் ஆனதும் அப்படியே யாருக்காவது திருமணம் செய்து கொடுத்துவிட வேண்டும்... ஆனால், இந்தப் பேச்சு போதும், மது. இனி நம்மைப் பற்றிப் பேசலாம். எவ்வளவு *சீக்கிரமாக* முடியுமோ, அவ்வளவு விரைவில் திருமணத்தை வைக்கும்படி அப்பாவிடம் சொல்லிவிடப்

போகிறேன். இனியும், இந்த மாதிரி வீண் வம்பு எதிலே போய் மாட்டிக் கொள்வாயோ என்று தூர இருந்து நடுங்கிக் கொண்டிருக்க என்னால் முடியாது...''

மாதவி மலர்ந்த விழிகளால் அவனை நோக்கி, ''எல்லோருக்கும் முன்பே தெரியுமா? ஒருதரம் உங்கள் அப்பா....'' என்று தொடங்கியவளை, ''உன் மாமா!'' என்று அவன் திருத்த, அதை ஏற்று, ''மாமா, என்னிடம் உன் அத்... என்று தொடங்கிவிட்டு, 'என் வீட்டம்மா' என்று மாற்றினார்... அப்போதே அவர்களுக்கெல்லாம் தெரியுமா?'' என்று வினவினாள்.

''முதல் நாளே!'' என்று பெருமிதத்துடன் அறிவித்தான் கதிரேசன்.

நம்பாமல் நோக்கியவளிடம், ''மெய்தான், மாதவி. கிருபா உன் அழகு, துறுதுறுப்பு, சிரிப்பு என்று உன்னைப் பற்றிப் பேசிப் பேசி ஏற்கனவே உன்னிடம் ஓர் ஈர்ப்பு. அன்று மயங்கிச் சரிந்தாயே, அப்போதே இனி உனக்குத் துன்பம் வராமல் காப்பது என் பொறுப்பு என்பது எனக்கு உறுதியாகி விட்டது. அன்றே அம்மாவிடமும் சொல்லி விட்டேன்...'' என்றான் அவன்.

''அதனால்தான், உங்களைத் தாண்டித்தான் யாரும் என்னிடம் நெருங்க முடியும் என்றீர்களா?'' என்று ஆர்வ மிக வினவினாள் மாதவி.

''ஆமாம். அன்றைக்கு என்னைத் தாண்டி உன்னை நெருங்க முடியும் என்றேன். இப்போது நம் நெருக்கத்துக்கு இடையே காற்றுக்கூடப் புகக்கூடாது என்று...''

வாக்கியத்தை முடிக்காமல் அவன் அவளை விழுங்குவது போல நோக்க, நாணி முகம் சிவந்தாள் மாதவி.

✪

# எல்லோருக்கும் ஆசை உண்டு

ரமணிசந்திரன்

